பாலசுப்பிரமணியம் பிள்ளை

(௩௮)

அங்கைய புராண ஆரா

மெஞ்ஞுப் பெண்ணிய

ஈ.டுவெ.

DIGITIZED

Q23:22
N02
117874

உ

தெய்வமே துணை.

பதினெண்புராணங்களிலொன்றாகிய

ஆக்னேயபுராண

சாரமென்னும்

# வன்னியநாடகம்.

இஃது,

திருப்பாதிரிப்புலியூர்

நாகலிங்கம்பிள்ளையவர்கள் குமாரர்

ம-ள-ள-ஸ்ரீ,

**பாலசுப்பிரமணியம்பிள்ளை**

அவர்களாலியற்றப்பட்டு

சை-பூர் க-ரா-சிவசிதம்பர முதலியாரால்

பார்வையிடப்பட்டு,

சி. அ. ம ண ஆர்,

**முனிசாமிமுதலியார்**

அவர்களது சென்னை, சூளை:

சிவகாமி விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

Registered Copy Right.

உ

தெய்வமேதுணை.

# சாற்றுக்கவிகள்.

——)(*)(——

திருப்பாதிருப்புலியூர்,

ம-௱-௱-ஸ்ரீ, சு-ரா-சிவசிதம்பரமுதலியார்

அவர்களியற்றிய

வெண்பா.

சீரோங்கு வன்னியர்தம் இன்புகழை நாடகமாய்ப்
பாரோங்கு செந்தமிழாற் பாடினன்—ஏரோங்கு
தாலத்தில் நாகலிங்க சற்குணவா னீன்றெடுத்த
பாலசுப்பிர மணியன் பார்த்து.

கலித்துறை.

கன்னியப்பாடலக் காம்புரந்தன்னிற் கதிப்புடனே
[illegible] தவத்தே தவரு தோன்றலென்று
[illegible] பாலசுப்பிர மணியன்றுன்
[illegible] நாடக்களிக்க வாய்த்தனனே.

———

செம்பரங்குப்
[illegible] தோட்டம் [illegible]ராமத்திலிருக்கும்,
ம-௱-௱-ஸ்ரீ [illegible] தானையினர் இயற்றிய
[illegible]ரிய விருத்தம்.

[illegible] தபண்ணும் சம்புரகத்தில்
பாபரன் பணிந்துவேள்வி
பரிவுவைத் தருள்சம்பு முனியளித்திடலாக
பார்த்திப வீரவன்னிய
சீரன்குலத்தவதரித்த பொன்னையனும்
சிவனேயுன மிருத்தியுலகின்



ஜெயங்கொள்மரபினிவளர் மடபதியாகவே
திக்கெலாம்புகழ் விளங்க
காரிபாகன்றந்தவத் தெழுந்துஉபதேச
குருதவணெரிப்பொருளி
தாலம்புகழ்குமர சாமியகவாய்வந்த
நாகலிங்கப்பிள்ளையின்
பாரிபார்வதிசன்ற பாலசுப்பிரமணிய
நாவலன்வன்னியபுராணப்
பா[illegible]லத்தொடர்ந்து நாடகமுரைத்தனன்வல்ல
பரிசிலிவிலைத்திருந்தே.

———

சென்னமனுயக்கன் பாளையம்

உபாத்தியாயர் ம-௱-௱-ஸ்ரீ,

அ-வயித்திலிங்கநாயகரால் இயற்றிய

ஆசிரிய விருத்தம்.

மேலானவாக்னேய புராணந்தன்னில்
விரித்தவக்னிவம்மிசத்தின் பெருமைதன்னை
ஞானமதிற்பல்லோர்க ளினிமைபெற
நல்லிசையால் வன்னியநாடகஞ்செய்தானற்
சீலமிகுசைவன் வல்லத்திலவாழுந்
திரோபதைவன்சத்திரியகுலத்தவதரித்த
பாலசுப்ரமணியப் பாவலனென்றேத்தும்
பக்தசிகாமணியிந்தப்படியின்மாதே.

———

திருவதிகை க்ஷேத்திரத்தமர்ந்த

இருசப்படையாச்சி குமாரன்

தாண்டவப்படையாச்சி அவர்கள்

இயற்றிய விருத்தம்.

சீர்புகழும் வல்லம்பதிச் செறிந்தோங்கும்
அக்னிகுலச் செல்வனென
பேர்பாவும் நாகலிங்கப்பிள்ளையவர்
தன்றவத்திற்றோன் றருந்தைவப்

பார்புகழும் பாலசுப்பிரமணியன்
வன்னியநாடகத்தைப் பாசிராக்மெய்க்க
கார்புரவம்புவியிதிற் றேன்மாரி
பொழிந்தாற்போற் கவிசெய்தானே.

---

திருமணவூர்,
ம-ள-ள-ஸ்ரீ, முனிசாமி முதலியாரால் இயற்றிய
நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

சீர்பூத்த செல்வனாயிற் சிவமருடை நிருபர்கள்
சேர்பூத்த மான்மியத்து ணிலவுலகிற் குலவுமொரு
போர்பூத்த வக்கினிய புராணத்திற் சுடர்குலத்தார்
சார்பூத்த சரிதமதை நாடகமாய் நவின்றனனால்,

அனையன்பா ரெவிர்சைவ னருமுகவி னெடுமவா
கனியபா திரிப்புலியூ ரேக்கலன் னுகவிந்தகு
தனையினை வந்துதித்தான் றனஞ்சயனே யிவனெனவெங்
கனைகளை பாலசுப்ர மணியபூ பதியன்றே.

சாற்றுக்கவிகள்
முற்றிற்று.

---



3



# அர்ச்சகர்கள் விநாயகக்கடவுளை பூஜைசெய்கிற விபரம்.

வெண்பா.

கஜமுகவக்ரதந்தனே கணபதிஇபபதி
குஜஹம்ஸவத்ஸஹாய குணபதி—பஜம்மென
ஆவணிபூர்வபக்கம் அமர்சித்ரசதுர்த்தியில்
நாவலனேவணங்கினேனை நான்.

கீர்த்தனம்-கல்கடா-ஆதி.

கரிராஜமுகா - ப்ரமானந்தசுகா (க)
சுரர்பணிபூவே சுருதிமுனைக்கோவே
வரமீகவாவே தரணியோர்தேவே (க)
வல்லசத்திலீலா வடிவேலன்லோலா
அல்லலேய்க்குஞ்சிலா அம்பிகையின்பாலா (க)
மூவரணிமுத்தே முனிவர்தொழுஞ்சித்தே
ஆவலுடன்வித்தே அருள்தாரும்பத்தே (க)

கலிவிருத்தம்.

மாயன்வதனே மார்க்கண்டருத்திர
நாயனார்ப்ரம்ம னுதனுதிமூலா
காயத்ரிபுத்ர ககனசிற்சொருப
வாயனேயும்மை வாழ்த்திவணங்குவாம்.

வெண்பா.

கங்கைகோதாவரியுங் காவேரிசரஸ்வதியும்
நங்கமுனைசிந்து நர்மதாவும்— அங்கமுதற்
சுத்தநீராட்டுகிறேன் சூக்ஷமேயைந்தன்ய
முத்தனேயுகந்திடு முன்.

ஓம் அமரசேகரா நம:
ஓம் ஆதிகஜானனே நம:
ஓம் இபமுகனே நம:
ஓம் சித்திமுதலே நம:
ஓம் விநோதகே நம:
ஓம் ராசந்தனே நம:
ஓம் உமைபுதே நம:
ஓம் மூவர்க்குருவே நம:
ஓம் முத்திமுதலே நம:
ஓம் எந்குணய நம:
ஓம் சர்வஞானா நம:
ஓம் சந்திமனோனா நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் க்ரதயம்னே நம:
ஓம் பசுபதியே நம:
ஓம் ஏரம்பாய நம:
ஓம் ஜோதியுருவே நம:
ஓம் குஞ்சரமுகதேவே நம:
ஓம் வைகுருதியே நம:
ஓம் மனோகராய நம:
ஓம் விக்வப்பொருளே நம:

அகவல்.

அகரமுதலாய்
உகரப்பொருளாய் அருவுடைத்திரையாய்
அருகாரத்தின் உம்பர்கள் துணையாய்
மாறுமோனமாய் அமைக்கசோதியாய்
களிறுமுகமும் மயவெளிபரப்பாய்
ஒளிர்குருநேத்திர கனதந்தங்களும்
திருநீற்றினமுரும் மோக்ஷிப்பார்வையும்
இருநான்குபுயமும் இகம்பரபொட்டும்
முன்மார்பினவரி இன்புளகண்டமும்
பொன்னனைஞாணும் முப்புரிநூலும்
பட்டுடையணிந்து பூஷணவொளியும்
அஷ்டதிக்குள்ளோர் பரமாகிநின்ற
ஆகுவாகனன்மேல் அவனியோரேற்ற
ஏகதந்தாயனே அமாருள்விநாயக
ஏற்றினேன்சரணம்

---



பொது வசனம்.

அகோதெப்படியென்றால் குருக்கள் பூஜை முதலானதையும் நிறைவேற்றி வேண்டியவரங்களைப் பெற்றுக்கொண்டு மடப்பள்ளியிற்செல்வது. ஓம் ஜெய ஜெய மங்களம்.



## கட்டியக்காரன் வருகிற

பொது விருத்தம்.

தட்டிசல்லடமுங்கட்டி சாலுவைமெய்யிற்பூண்டு
பட்டுக்கச்சையையிருக்கி பாங்குபீட்டிபுஞ்சொருகி
பட்டணமாகும்ரத்ன புரியையாள்வாதாசூரன்
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே.

வசனம்.

அகோதெப்படி யென்றால் இரத்தினபுரிக் கதிபதியாகிய வாதாவிசூரன் வாசல்காக்கின்ற கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க.

---

கட்டியக்காரன்-வருகிற-தரு.

இ-ம்-சௌராஷ்டிரம்-தாளம்-திருபுடை.

பல்லவி.

மாவீரதீரனை வாதாவிசூரனிட
வாசற்காற்கும் கட்டிக்காரனே.

அநுபல்லவி.

வனுமிருக்தாகிய யெனதொருகரமோ
பலமிருசூரர்கள் யெனக்கொருகரமோ மாவீர

சரணம்.

வலதுகையால்மீசை முறுக்கிக்குதித்ததட்டி
வந்தவர்யாவரு மகிழக்கையைசுமட்டி.
வம்தரி ஜேம்தரி தோதிமி தரிகிடஜேம்
சப்தகிரிபோல் திரேகம்விளங்கிடும் மாவீர

கலகலென்றேநகைத்துக் கையைக்கொட்டிக்குதித்து
கல்மீசாமேலேகையை போட்டுப்போட்டுயெடுத்து
கம் கம் கணதண காகாஜணுதா திம்தோம்
தகதிக தளங்குதோமென மாவீர

கன்னக்குடிக்குக்கண் விழித்துமுழிசுமட்டி
காலின்னிடைகுலுக்கி அலுக்கி
கங்கணடங்கண டொம்கிர்தஜம்தரி
மங்களகுங்கும வாடைகள்தரியென மாவீர

கட்டியன் சொல் விருத்தம்.

எட்டுதிக்கெங்குமிக்க யெழில்பெறுங்கீர்த்திபெற்ற
பட்டணமெங்கும்ரத்ன புரியையாள்வீரதீர
மட்டடங்காதராஜ மகிபதிவருகின்றார்காண்
பொட்டெனக்கைவாய்பொத்தி பத்திரம்சபையுளோரே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் கட்டியக்காரன் ஆரவாரங்கள்முடி ந்து சட்டதிட்டமாக சபையை அதட்டி மிரட்டித் திருத்தி காவல் காக்குஞ் சமயத்தில் இரத்தினபுரிக்கரசனாகிய வாதாவிசூரமகா ராசன் வருகிறவிதங்காண்க.



5



## வாதாவிசூரன் வருகிற

விருத்தம்.

தேவரொடுமுனிவர்மா னிடர்கள்சித்தர்
ஜெகமதனிற்புகழ்கின்ற ராஜசூரர்
மாவுலகிலெனக்கெதிரி யுண்டோயாதும்
வாய்வதனைபொசித்திடுவேன் வண்டகோளம்
புவனமெலாம்நடுநடுங்கச் செய்வேன்ரத்ன
புரிதனையாளவுமே வல்லோனென்று
அவமதியாவாதாவி சூரனென்போன்
அமர்ந்திட்டான் சபைதனிலே வந்திட்டானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் முப்பத்துமுக்கோடிதேவர்கள் நா ற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முனிவர்கள் கின்னரர் கிம்புருட சித் த வித்யாதரர்கள் அரசர்கள் அசுரர்கள் ஈரேழுலகிலுள்ளயாவரும் எனக்கெதிரர்வார்களோவென்றும் சூரியனையும் காற்றையும் விழு ங்கவல்லவனென்றும் அண்டகோளத்தையும் நடுங்கச்செய்வேனெ ன்று இரத்தினபுரிபட்டணத்திற் கதிபதியாகிய வாதாவிசூரன் சூ ரர்கள்சூழ கொலுச்சபைவருகிற விதங்காண்க.

வாதாவிசூரன் வருகிற—தரு.

இ - ம் - மத்தியமாவதி - ஆதிதாளம்

பல்லவி.

வலுவிற்மிகுந்தோன்வெற்றி
உலகைப்புசித்தோன்முத்தி
வாதாவிசூரனானே - அதிபுஜபலமுள
வாதாவிசூரனானே.

அநுபல்லவி.

கலிசையுமென்கையாற் பிசைந்துஇவர்தமெனச்
சொரிகுவேன் வெகுதீரன் வீரன்
ஜெகத்திலொருவரு நிகரில்லையெனக்கிணை
யுகமுடிவாகினு முன்டோவொருவர்சொல் வலு

சரணம்.

நெட்டநெடுங்கிரியை யெட்டிக்கையாற்பிடுங்கி
நிலைக்கப்பந்துபோ லாடுவேன் சங்கரனோடு
ஜெயிக்கச்சமரிற்போராடுவேன்
திக்கினின்கெஜமதை பக்குவமாகவே
முக்கியமாய்பந் தாடுவேன் வெகு வலு

எட்டுமொன்றுபனிரெண்டு மிருபத்தேழுங்கூட்டி
இருக்கிச்சிறையி லடைப்பேன் மேகமழையு
முருக்கித்தகையாற் பிழிவேன்
முனிவர்தன்தேவர்கள் சூரர்களாயினும்
எனதிடுக்கைபல யெவர்களுமறியார் வலு

இரட்டித்தமரர்களை அட்டர்களைப்பிடித்து
வென்றுமிபோ லாக்குவேன் சூரியனை
சல்லடைத்துவி டாக்குவேன்
அட்டகோளமுந் திடுக்கிட்டலரவே
துஷ்டதேவர்க ளிஷ்டமதாகவே வலு

வாதாவிசூரன்சூரர்களுக்குச்சொல்—தரு.

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்

பல்லவி.

வாரும் வாரும் வீரரே எனதுதிரம்
கூறிவாரேன்கேளும்வீரே.



அநுபல்லவி.

வாருமெனதுபெலன் வீரஞ்சொல்லுவேன்கேளும்
சாருமெந்தனை நாளும் காரும்பூமனங்கொள்ளும் வாரும்

சரணங்கள்.

அண்டமடிக்குவுடையும் என்கைகருத்திறல்
மண்டலலட்சதிரம் பொடியாம்.
மண்டியிடவெனக்கெதி ரித்தவுலகத்தில்லை
அண்டர்முனிவரேனும் மண்டையுடைபட்டுச்சொல்லுக்கில்லை வாரும்

பரிதிவாய்வையும்பொசிப்பேன்
பந்தாகவிளையாடுவேன்
பெரியபர்வதங்களை பொடித்தகாத்து
திருநீறுபோலாக்கி தான்யமும் சமைத்து வாரும்

மேகமேழையுமுரிக்கி கையாற்பிழிந்து
வாரித்திலர்தமாக்கி
பாரிலெனக்கெதிருண்டு போருண்டோ
பதைக்குதுமெந்தனகரம் யெதிர்ப்பாருண்டோ வாரும்

ஆதிசேஷனை பிடித்து கயர்
நார்போற்கொண்டுதிரித்து
காரிப்பாகன்மாலயன் நாலிரண்டுதிசையபயன்
நம்மையல்லாமல்வேறு வுண்டோசொல்வீர்நீரும் வாரும்

சூரர்கள் சொல்—திபதை.

அய்யனேயெங்கள்கோவே அசுரர்கோமானேபோற்றி
மெய்யனேவாதாவிசூர வீரனேயொருவிண்ணப்பம்
தையலைப்பாகம்வைத்த சங்கரன்றனைப்பெற்றால்
வெய்யதாயுலகையாள வீரமுந்திரமுண்டாம்.

வசனம்.

அகோவாரும் வாதாவி சூரதீர அங்கார வுத்தண்ட கெம்பீர
மகாராஜனே இதின்முன் உம்மினத்தார்கள் ஈஸ்வரனை நோக்கித்
தவஞ்செய்து வரம்பெற்று புஜபலமிகுந்து பிறரைஜெயித்துவாழ்ந்
தார்கள். ஆகையால் ஈஸ்வரனால் வரம்பெறுமல் திரம்பெறவுமாசரி
யல்லவென்றுசொல்லுஞ்சமயம் நாரதர் வருகிறவிதங்காண்க.



## நாரதர் வார்தாவியினிடம் வருகிற

விருத்தம்.

கையினிலுத்ராக்ஷமாலை காதினில்கவசம்பூண்டு
மெய்யினிற்றூளிபூண்டு நாலதுவிளங்கமார்பில்
டையரவீணிங்தோன்றேவர் பாய்குடன்யோசித்தசெய்தி
மெய்யதாய்சொல்லவாதாவி சபைக்கிநாரதர்வந்தாரே.

———*———

நாரதர் வருகிற தரு-இ-ம்-தோடி-சாபுதாளம்.

பல்லவி.

அரையிற்காவியுடுத்தி-மரை
யாசனந்தெண்டெடுத்து
நரைத்தக்கிழவனைப்போல
நாரதர்வந்துதோன்றினர் ஆனா

அநுபல்லவி.

கையிற்கமண்டலமும் காதிற்பொற்குண்டலமும்
வையகம்புகழுநாரதமாமுனி வந்துதோன்றினர் ஆனா



சரணங்கள்.

மாராக்கொடும்வழக்கை பூராய்ச்சொல்லவியற்கை
வீரன்வாதாவிசபை நாரதர்வந்துதோன்றினர் ஆனா

தேவர்சபையில்வாதாசூரனை செயிக்கச்சூரா
முனிவர்சொல்வார்த்தைக்கொண்டு நாரதர்வந்துதோன்றினர்

பஞ்சாட்சரமேஜெபித்து செஞ்சஞ்சொல்ப லோயவளர்த்தி
வஞ்சகன்வாதாவிசபை மாமுனிவந்துதோன்றினர் ஆனா

நாரதர்சொல்

புஜபலமிகுந்தவீரா பிரபலசோமுகனந்தனா
திசையெலாமாளுந்தீரா செய்திபொன்றுரைக்கக்கேளும்
ஆசையுறற்புவனம்வாய்வு அதுகளையுட்கொண்டதால
இசைகேடுசெய்புவுன்னை ரெண்ணினர்தேவர்சொன்னேன்.

வசனம்.

அகோதெப்படி யென்றால் வாதாவிசூரனே நீ சூரியனையுங் காற்றையும் விழுங்குவதும் விலவதுமாகயிருப்பதால், சகலதேவன்களும் இம்சைப்பட்டு ஈஸ்வரனிடமுறையிட்டு தேவர்களாலுன்னை ஜெயிக்கும்படி யோசித்திருப்பதால் அதையுனக்குத் தெரியப்படுத்தவந்தேன் வாதாவிசூரனே.

வாதாவிசூரன்சொல்-விருத்தம்.

சொன்னசொல்கேட்டுவீரன் இடிக்கெனமனதுவாடி
என்னயோசனைகள்செய்வேன் யியம்புவீரெந்தன்கோவே
உன்னையும்பிதாவுந்தெய்வம் அடியேனுக்காருண்டோசொல்
உன்னையல்லாமல்வேறு வுளவுசொல்லானாக்காணேன்.

———

வாதாவிசூரன் நாரதரிடம் பிரலாபிக்கும்-தரு.

இ-ப்-தசாவந்தி-சாபு-தாளம்.

தாயுந்தந்தையுநீரே ஐயா - எங்குந்
தானாய்விளைந்தபொருள் மெய்யா தாயு
கெதியெனக்குன்பாத மல்லால்-வேறு
விதியேதுசொல்லுவீர்மனங் கல்லா தாயு

தெண்டுகமண்டலக்கை யோனே-பதம்
வேண்டுமடியார்கள்மெய் யோனே தாபு
காவியுடுத்தப்பெரி யோரே-மனக்
கவலையைத்தீரும்கிஷி யாரே தாபு
ஆவிநடுங்குகிந்த மினே-அமருல்
ஆபத்தசம்பவிக்கும் யாரே தாபு
எனக்கோருபாயஞ்சொல்லுவீ ரையா-மனத்
தயர்தீர்க்குங்கரு மெய்யா தாபு
மந்திரிகள்சொன்னசொல்மெய் யாச்சே-வரும்
சங்கதிப்திங்கிடாமற் போச்சே தாபு
ஆதிசிவனைநோக்கிநானேதவஞ் செய்ய
நீதிபோதிப்பாய்முனி யோனே தாபு

---

நாரதர் வாதாவிசூரனுக்கு உபதேசஞ்செய்யுந்-தரு.

இ-ம-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

உபதேசவுண்மையைக்கேளும் வாதாவிசூரா
உபதேசவுண்மையைக்கேளும்

அநுபல்லவி.

உபதேசவுண்மையைக்கேள் வுமையாள்கரனளித்த
அமையும்பொருள்நால்வருக் கன்றுபதேசித்த உப

சரணங்கள்.

ஐம்புலன்றனையடக்கி-கருவிகளின்
ஆதாரமனதொடுக்கி
அன்பத்துக்கிடரான இன்பசாரம்நீக்கி
சூரியாதிதப்படி முச்சுடரின்முடிவைக்காண உப
ஓமெனும்பொருளாதனுல்- கனலைமூட்டி
ஓடுங்கலையையடக்கி
நேமத்துடனேநமசிவயமென்றேஜெபித்து
செருஞ்சருபமதைநினைவாப்பூசிக்க உப



ஆறுதாரத்தைநேருகி-அர்ச்சித்து
அப்பால்படியைத்தாண்டி
வேறொருநியானத்தைவிடுத் தொருமித்துநின்றால்
விமலன்விடையிலேறி வருவார்வரமளிப்பார் உப

வாதாசூரன் தபசுக்குப்போகிற இப்பிந்தை.

குருமுனிபூசைசெய்த குமரகனலங்கொண்ணூர்வாழ்
மருமலரணிந்தயீசன் மங்கைபாகனைநோக்கி
திருவடிபணிந்துபோற்றி ஜெயம்பெறமனதிலெண்ணி
அருந்தவஞ்செய்வாதாவி சூரனும்வருகின்றனே.

வசனம்.

அகோதெப்படியென்றால் அகஸ்தியமகாமுனிவர் பூஜித்தக் கொண்ணூர் குமரனலயத்தில் வாழும் மகா தேவமூர்த்தியை நோக்கி அரியதவஞ்செய்ய வாதாவிசூரன் வருகிறவித மெப்படியென்றால்.

---

வாதாவிசூரன் தவவேடம்பூண்டு வருகிற-தரு.

இ-ம-மோகனம்-அட-தாளம்.

பல்லவி.

தபசுசெய்யவேவந்தான் வாதாவிசூரன்
தபசுசெய்யவேவந்தான்.

அநுபல்லவி.

தபசுசெய்யவேகொண்ணூர் ஸ்தலமதைநாடி
குமரகனலயத்தில் வாழ்மீசனைத்தேடி தபசு

சரணங்கள்.

பஞ்சாட்சரப்பொருளை நெஞ்சில்நிறுத்திசெய்து
நஞ்சையுண்டோன்பதம் அஞ்சலிமனதுய்த்து தபசு
மாலயனிருவர்கள் காணுமலமடியை
காலனையுதைத்திட்ட கருணாநிதியைத்தேடி தபசு
மதிபுனல்முடியணி மங்கைபாகனைநாடி
துதிசெய்துவரம்பெற கவாமியைநாடி தபசு
ஊசிமுனையிற்காலை யூன்றிகால்மேலதாய்
ஈஸ்வரனைமனதி லிருத்திவிடாததாய் தபசு

வாதாவிசூரன்சொல் தேவாரம்.

ஆதியாய் முதலாயெங்கும் அமர்ந்துவியாபிக்குஞ்ஞானச்
சோதியேசடேரவானோர் துதிக்கிடும்பொருளேயுந்தன்
பாதமேதொழுதேனெந்தன் ப[illegible]வினையகற்றும்பிசா
நாதனேயென்முன்வந்து நல்குவ[illegible]ருள்தானே.

வசனம்.

ஆகோதெப்படியென்றால் அண்டபிண்டச்சராசரங்களுக்கும் எவ்வுயிருக்கும் எப்பொருட்கும் ஆதியானவனே அடியவர்களிடேகும் பொருட்டாய் திருவைக்கண் பார்ப்பவனே சுடரொளிக்குள்ளொளியானவனே தேவர்களோடு யாவருந்தொழும் பாதனே உமது பாதத்தை அடியேன் மனத்திருத்தி நம்பினேன் முப்பிறப்பினும் இப்பிறப்பினுஞ்செய்த வல்வினையகலும்படி அடியேன் முன் பார்வதிசமேதராய் வந்து வரந்தந்து இரட்சிக்கவேணுமையா சுவாமி.

---

வாதாவிசூரன் ஸ்தோத்திரஞ்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-ஆதி.

பல்லவி.

சம்போமகாதேவா
சங்கராஉமைபாகா சம்

அநுபல்லவி.

மங்கைமணவாளா எங்குநிறைந்ததோளா சம்
தேவர்தொழும்பாதா ஆதிமுதல்நாதா சம்
மாலயன்காணுபாதா மேலவர்தொழுநாதா சம்
வெள்ளைவிடைமேல்வந்து வள்ளலேவரந்தந்து சம்
ஏகனேவரமருள்வீர் உமைபாகனேதயபுரிவீர் சம்
சாகாவரமருள்வாய் நாகாபரணப்பொருளாய் சம்

வாதாவிசொல் தேவாரம்.

மதிநதிகொன்றைதும்பை மலர்தனையணிந்தகோவே
துதிசெய்தேனுந்தன்பாதம் தொல்வினையகலச்செய்து
சதியொடுஅஸ்திரசம்ஹாரக் கடாக்ஷித் துலகமான
விதியொடுவரமளிக்க விடையின்மேல்வருவாய்போற்றி.



வசனம்.

மூன்றாம்பிறைச் சந்திரனையும் கெங்கை கொன்றை தும்பை மலரையும் சடாபாரத்தில் தரித்தருளிய சர்வஜீவ தயாபரக்கடவுளே உமது பாதத்தை தெரிசிக்க தபசுசெய்கிறேன் எனது வல்வினையைநீக்கி யான்கோரியவரத்தைத்தந்து இரட்சிக்கவேணுமையா சுவாமி.

---

வாதாவிபோற்றிசெய்யும்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-சாபுதாளம்.

மதிநதிகொன்றைபுன்னை தும்பையைசிரசிலணிந்த
மாதேவாவும்மைப்போற்றிசெய்கிறேன்-சிவ ஓம் அரகரா
மாதேவாவுன்னைப்போற்றி செய்கிறேன் மதி

நந்திமத்தளம்நாரதரிசையாடி பாடவேதில்லை
விரிதோற்கவேநடித்தபாதனே-சிவ ஓம் அரகரா
விரிதோற்கவேநடித்தபாதனே மதி

ஆலகாலவிஷத்தையுண்டவா தேவர்க்கமுர்தம்
அன்றளித்தவாசந்திரசேகரா-சிவ ஓம் அரகரா
அன்றளித்தவாசந்திரசேகரா மதி

பாலனுக்கன்றுகாலனையுதைத்த பொற்பாதந்தன்னை
கருணையாயளித்தருளேதாருமே-சிவ ஓம் அரகரா
கருணையாயளித்தருளேதாருமே மதி

அன்பருக்காகக்கல்லடியும்பிரம்பு அடியும்பட்டு
இன்பந்தந்தவாவெனக்கருள்வாய்-சிவ ஓம் அரகரா
இன்பந்தந்தவாவெனக்கருள்வாய் மதி

துதிசெய்தேன்கொன்ஞார்குழகனையும் அதில்வாழுமுன்னை
தோத்திரஞ்செய்தேன் காக்கவாருமே-சிவ ஓம் அரகரா
தோத்திரஞ்செய்தேன்காக்கவாருமே மதி

ஊசிமுனையில்சிரசைநாட்டியே காலுயர்த்தூக்கி
உருகுரோனும்மைவரமருளுவாய்-சிவ ஓம் அரகரா
உருகுரோனும்மைவரமருளுவாய் மதி

வாதாவிசொல் கட்டளைக் கலித்துறை.

அப்பர்சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகரோ
டொப்பிலாமார்க்கண்டர் கண்ணப்பனுக் குகந்தபிரான்
இப்புவிதன்னி லுனதருள்வேண்டியென் னிருதயத்தை
அப்புறம்போக வோட்டாதிருத்தி யிந்த சவிசெய்வேனே.

வசனம்.

அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், இன்னும் அனேக மகாத்துமாக்களுக்கு உமது பாததரிசனந்தந்தது போல யான் உமதருளைவேண்டி என்னிருதயத்தை அடக்கி தொழுகிறேன் எனக்கு வரங்கொடுத்து இரட்சிக்கவேணுமையா சுவாமி.

---

வாதாவிசொல்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்

பல்லவி.

அரகரசங்கர கருணைதயாநிதியே
அன்புவைத்தெந்தன்முன் வா வா.

அநுபல்லவி.

புரமூன்றெரித்தப் புண்ணியப்பொருளே
புனிதாவெனக்கருள் தா தா தா — அர
அப்பர்சுந்தரர் மாணிக்கர்தொழும்பதம்
அடியேனுக்கருளநீ வா வா வா — அர
ஒப்பிலாதமார்க்கண் டருக்களித்தபதம்
இப்பொழுதெனக்குநீ தா தா தா — அர
கண்ணப்பனுக்குக் கலைகொடுத்ததுபோ
லெனக்குஅஸ்திரந்தர வா வா வா — அர

---

தரு-இ-ம்-முகாரி-அடதாளம்

பல்லவி.

கைலையில்வாழீசா கடவுளேயான்றொழுதேன்
கைலைமலைவாழ்பரனே கௌரிமனோகரனே.



10

அநுபல்லவி.

கங்கையணிந்தசிவ சங்கரனேயந்த
மங்கையுமையாள்மணாளா வெங்குநிறைந்ததாளா — கைலை

சரணங்கள்.

ஆனையுரிப்போர்த்தீர் மானைப்பிடித்தேந்தினீர்
கானவேடனுக்குந்தீர் கண்ணொளிதான்தந்தீர் — கைலை
இல்லையிலேயாடித்தாய் சமைத்தெல்லையிலேபடுத்தாய்
வில்லையம்வில்லன்திரவகை யெல்லாமருள்சிவமே — கைலை
நச்சரவணிந்தாய்வேட னெச்சிலைநானுகந்தாய்
வச்சிரபாணிதன்னுடலம் புத்ருக்கண்போலசமைத்தால் — கை
தக்கன்வேள்வியழிக்க வீரபத்திரனைவிடுக்க
மிக்கமகாவிஷ்ணுக்கு சக்கரந்தந்தவரே — கைலை

வாதாவிசொல் தேவாரம்.

முக்கண்ணனுமுனிவர்தேவ மூர்த்தியேமுதலேபோற்றி
இக்கலைபெனு கீர்த்தி செழித்திடபெலமுமஸ்திரம்
மிக்கவேயளிக்கவுன்றன் மெய்யடிபணிந்துநின்றேன்
மைக்கண்ணுமையாளோடு வந்துநீவரங்கொடுப்பாய்.

வசனம்.

சர்வலோக தயாபரமூர்த்தியாகிய முக்கண்ணு முனிவர தேவ மூர்த்தியே எவ்வுலகுக்கு மெவ்வுயிற்கு முதலானவனே என்கீர்த்தி எங்கும் வியாபிக்கவும் என்னையாவரும் புகழவும் பார்வதி சமேதராய்வந்து வரந்தந்து இரட்சிக்கவேணுமையா சுவாமி.

---

வாதாவிகூறல்சொல்-தரு

இ-ம்-பராபரக்கண்ணி-அடதாளம்.

சங்கர சங்கர சம்போ சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ.
கங்கையணிபணி நாதா தேவா
எங்கும்புகழ்ந்து இருக்கும் பொற்பாதா — சங்கர
மாமறை குலகபாலா உலகில்
மாமுனிசித்தர்கள் போற்றும்பொற்காலா — சங்கர

ஆனையுரித்துப்போர்த்தவனே எங்கும்
கானுமிஞ்சாந்து தழைத்துமெய்த்தவனே சங்கர
பாலன்மார்க்கண்டனுக்காக கொடுங்
காலனைக்காலாலுதைத்தாய்பாதந்நோக சங்கர
நரியைப்பரியாக்கியசோதி நா
னறிதற்கெதிராக வந்தருளாதி சங்கர
பிட்டுக்காகமண்ணைச்சுமந்தாய் வைகை
பிரவாகமடையாமலடியதுவுண்டாய் சங்கர
ஆனைவிநாயகருதெய்வம் உம்மை
யல்லாமலெனக்கினி வேருண்டோவையும் சங்கர
ஆதியாரந்தத்தைத்தேடி அருள்வீ
ரென்மனமுமுறறுபாயநாடி சங்கர

வாதாவிசொல் தேவாரம்.

பாரமோ சுமையோவென்னைப் பாதுகாத்திடவுமக்கு
நேரமோர் தூரமாமோ நிர்மலானந்தசோதி
காருமென் னூனனுமைம்பிக் காலமேனுஞ்சிரங்கோக
பார்தனில்நின்றேனுவி பருதுகாப்பீரையா.

வசனம்.

அரகரசம்போ சங்கரமகாதேவா என்னை இரட்சிப்பது பாரமோ அல்லது தூரமோ யோசிக்கில் சுமையோ யான் இப்பூமியின்கண் செப்பூசியைநாட்டி அதிநுனியில் எனது சிரத்தைப்பூட்டி காலை வயரத்தூக்கி தலைக்கீழாகநின்று வுமமைத்துதிக்கிறேன் இன்னம் தயவுவரவில்லையா சுவாமி.

வாதாவிசொல் தரு.

இ-ம-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி.

ஓம் அரகரசிவ சங்கரதேவா நாமம்
மறந்திலேன்வாவா மாதேவா.



அனுபல்லவி.

சாம்பவிசங்கரி சாரூபி
நம்பினேனுன்னை வாதாவி
தாம்தாம்தரிகிடகிடஜேம்
தரிதோ தாகிர்தஜேம்
தரிதரிகிடத்தையென
நடனம்புரிமாதிரியாங்
கனகசபைதனிலாடிவோனும் ஓம்

சரணங்கள்.

மாதவக்கோவிந்த ஸ்ரீஹரியாம்
சீதரனுக்குச்சக்கரந் தந்தனியாம் ஓம்
தேசவன்றோழனுங் கிரீடிக்கி
பாசுபதமளித்தாய் நீயன்றைக்கி ஓம்
ஒருகணைதொட ஞாறாயிரமாய்
வரமளிப்பீரெனக் காயிரமாய் ஓம்

பொது விருத்தம்.

வாதாவிதவஞ்செய்கோரம் வானுலகங்களெங்கும்
தீயனல்போலேதாவ சிவனிந்தவனைமெச்சி
மாயமாவிடையிதேறி மண்டலம்புகழ்வதாக
ஞாயமாய்வரங்கொடுக்க நாடியேவருகின்றாரே.

வசனம்.

அகோகேளப்படியென்றால் வாதாவிசூரன்செய்யும் தவத்தின் வுக்கிரமானது கைலையங்கு மனல்போல்வீச அதை ஈஸ்வரனிந்து பார்வதிசமேதராய் ரிஷபவாகனமேறி வாதாவிசூரனுக்கு வரங் கொடுக்கவருகிற விதங்காண்க.





## ஈஸ்வரன் வருகிற தரு.

இ-ம்-மோகனம்-அடதாளம்

பல்லவி.

தேவர்வந்தாரே – கைலைவாழும்
தேவர்வந்தாரே.

அநுபல்லவி.

தேவர்வந்தாரே ஆவலுடனிங்கு
வாதாவிகுரானுக் காகவேயிங்கு தேவ

சரணங்கள்.

மான்மழுசூலக் கபாலமுமேந்தி
வர்ணிக்குமவாதாவி சூரன்முன்னேமுந்தி தேவ

மாலயன்தேடியும் காணாதபாதம்
வல்லவனுக்கும் வரப்பிரசாதம் தேவ

மூடிக்குலுங்க அதிரநடந்தி
பார்வதியையிடப் பாகத்திருத்தி தேவ

மார்பிலரவ மசக்கிடவேயத்தன்
வாதாவிக்கண்டு மகிழ்ந்திடவேவித்தன் தேவ

வாதாவிபோற்றி-தரு.

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

போற்றுமடியேன்முன் தோற்றியநாதனே
போற்றினேன் போற்றினேன் – புலி
யுண்டவனேயெந்தன் தாண்டவனே
போற்றினேன்போற்றினேன் போற்றி

அநுபல்லவி.

கூற்றனையுதைத்திட்ட பாதத்தையான்கண்டு
போற்றினேன் போற்றினேன்–கொன்றை
ஆத்திம்திபுன்னை அணிந்தவேலையா
போற்றினேன் போற்றினேன் போற்றி

சரணங்கள்.

இல்லையிலாடிய வல்லபமுளபாதம்
போற்றினேன் போற்றினேன் - சமத்
தெல்லையிலேயடுத் தீசனேயுன்பாதம்
போற்றினேன் போற்றினேன் போற்றி

கெங்கைமதியணி சங்கர அரகர
போற்றினேன் போற்றினேன் - உமை
மங்கையிடபாகம் வைத்தமயேஸ்பரா
போற்றினேன் போற்றினேன் போற்றி

எங்கும்வியாபித் திருக்குமெங்கோன்பதம்
போற்றினேன் போற்றினேன் - சிவ
சங்கரசம்போ சதாசிவரூபனே
போற்றினேன் போற்றினேன் போற்றி

அந்தரிமகிழ்கின்ற அம்பலவாணனே
போற்றினேன் போற்றினேன் - அடியேன்
வந்தனையோடுமே வாழ்த்தினே னும்மை
போற்றினேன் போற்றினேன் போற்றி

ஈஸ்வரன்சொல் விருத்தம்.

என்னையேமனதிலெண்ணி யியல்புடன்தபமேசெய்த
மன்னவாவாதாவிசூரா மகிழ்ந்தேனுன்தபத்தைமெச்சி
நன்மையாயுனக்குவேண்டிய நல்வரங்கேட்டாயானால்
இன்னிலம்புகழயானு மியல்புடனளிப்பேன்கொள்வாய்.

வசனம்.

கேளுமப்பா வாதாவிசூரனே நீசெய்த விர வைராக்கிய வுக்கிர தபத்திற்குமகிழ்ந்து பார்வதிசமேதரிடபவாகனரூடராய் உன்முன் பிரசன்னமானேன் உனக்கு வேண்டியவரங்களைக்கேளும் வாதாவிசூரனே.

—*—



வாதாவிக்கும் - ஈஸ்வரனுக்கும்
தர்க்கம்.

இ-ம்-முகாரி-அடதாளம்

வாதாவி சொல்லல்.

கண்டேன் கலிதீர்ந்தேன் மனக்
கவலையெல்லா மொழித்தேன்
பண்டுசெய்பாவங்க ளின்றோடேபோக்கினேன்
மண்டலம்புகழ வரந்தரநோக்கினேன கண்

ஈஸ்வரன் சொல்லல்.

நீயேயெனக்குவெகு பக்தி கேட்டவரங்கள்
நானேநல்குவேனித முத்தி
நீயோசிவபூசை மறவாதவுளதாசை
வானோர்மகிழ்ந்து வணங்கவுன்பேச்சை நீயே

வாதாவி சொல்லல்.

கேட்டேனுயிரந் தேவவருடம் எனக்குவய
திட்டிவல்லயம் வாங்குகெருடன்
மாட்டோமென்றுசொல்லாம லுன்னைக்குலமமுவும்
மாயன்சக்ரஞ்சங்கு வாளும்வளைகொழுவும் கேட்

ஈஸ்வரன் சொல்லல்.

ஊசிமுனையிற்றலைக்கீழாய் அன்னையும்நோக்கி
வாசியடக்கினாய்நீகேளாய்
தேசம்புகழ்வரம் தாரேன்கேளுன்திறம்
பாசம்அம்புகொண்டு நேசமாயுலகாண்டு ஊசி

வாதாவி சொல்லல்.

பகைவர்மேலொருஅம்புவெய்ய ஒன்றுபத்தாய்
பகைத்துப்பெருகிநூறு யுய்ய
வகையாய்பாசுபதம் வருணன்வாய்வஸ்திரம்
நாகாஸ்திரமோடு நமன்வாயஸ்திரங்கொடு பகை

ஈஸ்வரன் சொல்லல்.

உன்னைபோல்பக்த னெனக்குமில்லை போவோமென்றால்
இன்னமெனக்குமனம் வல்லை
சின்னவயதுடைய மன்னுவாதாவிசூரா
சொன்னேனுனக்குபுத்தி நன்மையாயிருவீரா உன்

வாதாவி சொல்லல்.

தேவர்சூரர்மானிடர் யாவரும் எனக்கடங்கி
ஏவல்பணிகள்செய்யக் கூரும்
மாவீரதீரர்களும் வானுலோகத்தார்களும்
வந்துவணங்கவும் என்குலம்விளங்கவும் தேவ

வாதாவிசொல் திபிதை.

அரகரசிவனேயெந்த னருயர்பொருளேபோற்றி
வரமதுவெனக்குத்தந்தீர் வான்பரிசேனைநாடு
திருமணஞ்செயவேபெண்ணொன் றியம்புவீரெங்கிருக்கு
உருதியாயின்னுமொன்று வுரைத்துகைலைக்கேகும்.

வசனம்.

அகோவாருமையாசுவாமி எனக்கு சகலவரங்களையுங்கொடுத்தீர் இன்னும் ரதகஜதுரகபதாதிகளும் நாடுநகரமாடகூடங்களும் யானகலியாணஞ்செய்யும்படி பெண் எவரிடத்திலிருக்கின்றது அவள்பெயர் இன்னதென்றுஞ் சொல்லிக் கைலைக்குப் போய்வாரும் சுவாமி.

ஈஸ்வரன்சொல் திபிதை.

அருங்காணுதவாதாவிசூரா ஆயுசும்விலசகஸ்ரமஸ்திரம்
வீரியபுகழுங்கீர்த்தி விண்ணவரேவல்பெற்றாய்
சூரர்கள்குருவாஞ்சுக்கா சாரியால்புரவிசேனை
தாரமும்நகரும்நன்று புரியையுமமைப்பான்.

வசனம்.

கேளும் வாதாவிசூரா உனக்காக அதிக வரங்களைக் கொடுத்தேன் உன்குலகுருவாகிய சுக்கிலாச்சாரியால் துணைவர்களையும் சேனைகளையும் பெற்றுக்கொள் விஸ்வகர்மாவினாலே இரத்தினபுரி நகரத்தை அலங்கரித்து மாடமாளிகை ஏற்படுத்திக்கொண்டு விஸ்



வகர்மாமகள் அதிகழகையையுடைய சொக்ககன்னியென்பவளை மணம்புரிந்து சுகமாகவாழ்வாய் வாதாவிசூரனே. 14

வாதாவிசொல் திபிதை.

ஈசனால்வரங்கள்பெற்றேன் யெனக்கெதிரில்லாமற்றான்
டாசமாய்சேனையெல்லாம் பணிவிடைசெய்யப்பெற்றேன்
யோசனைதனில்மிகுத்த வுத்தமமந்திரிகாள்போய்
தாசனுமைக்கேயென்று தபதியையழைத்துவாராய்.

வசனம்.

அகோவாருங்கள் எனதுநேயர்களாகிய மந்திரிகளே விஸ்வகர்மாவை நானழைத்துவரச்சொன்னதாய் அழைத்துவாருங்கள்.

மந்திரிகள் வசனம்.

அப்படியே அழைத்துவருகிறோம் வாதாவிசூரதீரனே.

## விஸ்வகர்மா வருகிற

விருத்தம்.

ஆதியாயுலகையீன்ற ஐம்முகப்விஸ்வரூபம்
சோதியாம்வாமதேவன் சுந்திரமுகத்திலுவந்த
நீதியாஞ்ஜனுதனன்றன் ரிஷிகோத்திரமுடையதீரன்
மேதினிவிளங்கச்செய்யும் விஸ்வகர்மனும்வருகின்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் ஆதியில் இவ்வுலகை ஆளிக்கிரா நின்ற சத்தியோ சாதம் வாமதேவம் அகோரம் தற்புருஷம் ஈசானியமென்று ஐந்துமுகமுடைய விராட்டுவினிட வாமதேவமென்னும் வேதத்தில் விளங்குகின்ற முகத்தில் உற்பவித்த சனாதரிகோத்திரனாகிய மயனென்றும், தேவதச்சனென்றும் சொல்லிவழங்குகிற விஸ்வகர்மன்வருகிற விதங்காண்க.



விஸ்வகர்மன் வருகிற தரு.

இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி.

வந்தான் விஸ்வகர்மன் பாரீர்
வந்தான் விஸ்வகர்மன்

அநுபல்லவி.

மார்பினில்பூணூ லிலங்க - அந்தமாயிடையில்
வருணவிந்தையாய்மடி-துலங்க
அங்குள்ளவானவ ராசிர்வதித்திட
இங்குள்ளமானிட ரெவரும்புகழ்ந்திட
எசுரர்வேதப் பாராயணதீரன்
இந்திரலோக நகர்க்குபகாரன்
விஸ்தகாஸ்திர மெய்யுபகாரன்
மேகமெனும்பரியை ஏறும்தாரன்
மித்திரபுத்திர களத்திரவர்த்தியோடு
மேதினிவாழ்பவர்க்கே யமருளிய வந்தான்



சரணம். 15

அரசர்கரத்தில் செங்கோலும் - விபசாயத்தொழில்
செய்யுங்குடிகள்கரத்தில் தாத்துக்கோலும்
தீரமுள்ளவணிகர்க்கெல்லாம் இராகுசோலும்
சீருடனேகொடுப்பேன் திரம்தாலும்
சிந்தையுடனே திரிகாலசந்தியும்
செபதபகாயத்திரி கேமங்களும்
அங்கமுடனே அநுவமக்கொடிவேந்தன்
அனைவர்களும்புகழ் கீர்த்திப்ரபந்தன்
விந்தையுடனே மலர்சூடுககந்தன்
வீசியவாசனை பூசியகெந்தன்
சந்திரசேகர விந்தைபதத்திருத்தி
மனதையுருக்கி யருள்பெறும் வந்தான்

பூதலந்தன்னிலுதிக்கின்ற பிராணிகட்கெல்லாம்
புகழாசிர்வாதார மளிப்போன்
ஆதிகாமாட்சியம்பாள் அருளும்வரப்ரசாதன்
அக்கசாலையனென்றே மிக்கவிளங்குநாமன்
அற்புததேவ ரத்தினவிமானமும்
பற்பலவாத்திய நாகசுரங்களும்
உற்பவமேசெய் தளித்தருள்சூரன்
ஓமெனுமந்திர உச்சாடனபோதன்
கீர்த்திகளெங்கும் தவராதக்கியானன்
ஜெகதலமெச்சிட வேலையில்தீரன்
சித்திரமிட்ட ரதத்தினிலேறி
யமதிடமுத்த மளித்தனருளிய , வந்தான்

மகரக்குண்டலங்காதில்துன்ன - மார்பிற்
சவுரிசங்கம் பளபளென்னமின்ன
பகரும்பஞ்சாட்சர பரமத்யானஞ்துதித்து
பத்தியோடுபர மானந்தனைப்பூசித்து
பந்தமிருந்துச் சிறப்புடனேமேவி
பலமுள்ளவாதாவி யழைக்கத்தாவி

சிந்தைமகிழ்ந்திட வேமயநாதன்
சிருடன்தவஞ் செய்யும்விநோதன்,
விந்தையதாக நடந்திடுஞ்சூதன்
சுந்தரமாகவே வந்தனநீதன்
சுந்தபலத்தில் மிகுந்ததிரமொடு
சித்தமகிழ்ந்து ஜெயத்துடனேசபை — வந்தான்

வாதாவிசூரன்சொல்-திபிதை.

இருந்திடுமாசனத்தில் யெளியனிடேரவும்மை
வருந்திநானழைத்தசேதி வகையுடனியம்பக்கேளீர்
பெருந்தவேமாடமாளி கூடகோபுரந்தடாகம்
திருமணஞ்செய்யசொக்கக் கன்னியைக்கொடுவாயென்றான்

வசனம்.

வாருமையா விஸ்வகர்மாவே இதோ ஆசனத்திலுட்காரும் இந்நாளுகாதவழி அகல நீளமுள்ள இரத்தினபுரிநகரை அலங்கரித்து மாடமாளிகை கூடகோபுரம் தடாகம் நந்தவனம் அக்கினிகாளி கோயில் உன்னதமாக ஏற்படுத்திக் கொடுப்பதன்றியும் உமதுகுமாரத்தி சொக்ககன்னி யென்பவளை யான் விவாகஞ்செய்துக் கொள்ளவும் ஈஸ்வரன் வரங்கொடுத்தேயிருக்கிறார் அதுபோல நிறைவேற்றிவையும் விஸ்வகர்மாவே.

விஸ்வகர்மன் வசனம்.

ஈஸ்வரனால் வரம்பெற்றவுமக்கு யான் தடைசெய்யப்போகிறதில்லை உமதிஷ்டப்படி யாவையும் நிறைவேற்றித் தருகிறேன் வாதாவிசூரனே.

விஸ்வகர்மன் நகர் வுற்பத்திசெய்கிற தரு.

இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்

பல்லவி.

செய்வேன் செய்வேனே நகரொன்று
செய்வேன் செய்வேனே.

அநுபல்லவி.

செய்வேன்புதுநகரம் ஐயன்கொடுத்தவரம்
மெய்யாய்நாலுகாதம் வீரரத்னபுரம் — செய



சரணங்கள்.

கார்கோளமத்தியமும் பண்டுமேடையொன்று
கருத்தாயதில்நான்சென்று
பாரோர்புகழ்ந்திட பச்சைமரகதமும்
பவளம்வைடூரியம் படிகத்தால்சுவர்வைத்து — செய்

பொன்னினாற்றாணிருத்தி வைரத்தால்
பொதிபதின் மேல்திருத்தி
நன்னயமாகவே வைரத்திரமிட்டு
நாணயமாய்வெள்ளி கம்பியதின்மேல்தொட்டு — செய்

பத்தரமாத்துப் பசும்பொன்னினாலெங்கும்
பரப்பியமாளிகை யெங்கெங்கும்தங்கம்
சித்திரங்களெழுதிவைத்தேன் வெகுவிசித்திரம்
முத்துமரகதம் வைரங்களின்நேத்திரம் — செய்

வாரும்வாதாவிசூரா யிந்நகரம்
பாரும் வீராதிவீரா
மாரனிருக்கும் ஆரோக்கியாபுரிக்கதிகம்
பாரளந்தோன்பதியதற்குமிதுமேலாகும் — செய்

வீதியன்னாலுகாதம் மாடமாளிகை
மேகமுலாவுந்தூரம்
மாதரிருப்பிடமும் வீரரிருப்பிடமும்
மாதரிவாழிடம் வனங்குளம்பூமிதோட்டம் — செய்

வாதாவிசொல் விருத்தம்.

ஆகாகாவெகுவிச்சித்திரம் அருமைவேலைகளாம்குத்திரம்
ஓகோகோகண்கள்கூச வொளிர்திருக்கண்ணாடிவீச
தோகையருலாவமாடம் தூரத்தினஞ்செய்யக்கூடம்
நாகரத்தினங்களாலே நற்காளிகோயில்மேலே.

வசனம்.

ஆகாகா வெகுவிச்சித்திரம் விநோதாஞ்சித சூஸ்திரம் எவர்களாலும் செய்யமுடியாதவேலைகளை செய்துமுடித்தது மகா அற்புதம் சபாஷ்சபாஷ் நன்றாயிருக்கிறது கலியாணஞ்செய்ய உத்திரவு கொடுக்கவேணும் விஸ்வகர்மாவே.

இதுவுமது விருத்தம்.

அருமையாய்வேதமோது மகரர்கள்குலத்துக்கெல்லாம்
குருவெனவிளங்குஞ்சுக்ருச் சாரியர்தமையிப்போது
திருமணஞ்செயவேவாதா சூரனுனழைத்தேனென்று
உறுதியாய்வந்தனமுஞ்சொல்லி வுபசரித்தழைத்துவாருய்.

வசனம்.

மந்திரியாகிய மண்டலீகனே நமதுகுருவாகிய சுக்கிராச்சாரியாரை அழைத்துவரும்படிசெய்வாய் மந்திரி.

மந்திரி வசனம்.

நல்லது வாதாவிசூர மகாராசனே.

---

## சுக்கிராச்சாரியார் வருகிற

பொது விருத்தம்.

ஆதியாம்பரத்தைநோக்கி யருஞ்சதாசிவத்தையுன்னி
சோதியைதொழுதுநெஞ்சில் துலங்கும்பூணூலணிந்து
காதினிற்கவசமிட்டு கையினிற்பிரம்புங்கொண்டு
வேதியனெனவேசுக்கிராச் சாரியும்வருகின்றுரே.

வசனம்.

பரப்பிரம்மச்சொருபத்தை மனதில்துதித்து பூணூலணிந்து மந்திரதந்திர யெந்திரவல்லவராகியும் காதிற்கவசமணிந்து ஓர் கையிற் பஞ்சாங்கமும் மற்றொருகையிற் பிரம்பும் ஜெபமணியுங் கொண்டு சுக்கிராச்சாரியார் வாதாவிசபைக்குவருகிறவிதங்காண்க.

---



17



சுக்கிராச்சாரி வருகிற-தரு.

இ - ம் - மோகனம் - அடதாளம்

பல்லவி.

சுக்கிராச்சாரியும்வந்தார் அசுரர்குரு
சுக்கிராச்சாரியும்வந்தார்

அநுபல்லவி.

ஆதிபரத்தைநினைந்து அஞ்செழுத்துண்மையை
நெஞ்சில்நினைத்துக்கொண்ட — சுக்கிரா

சரணங்கள்.

காதிற்கவசமணிந்து கையிற்ஜெபமணி
வையகம் புகழ்ந்திட — சுக்கிரா

மார்பிற்பூணூலிலங்க மந்திரதந்திர
எந்திரவல்லவர் — சுக்கிரா

திருமணமுடித்துவைக்க நெறிமுறைவழி
தவறுமற்செய்பவர் — சுக்கிரா

---

வாதாவிசொல் தரு.

இ-ம்-முகாரி-அடதாளம்

பல்லவி.

வந்தனஞ்செய்கிறேன் சுவாமி
வந்தனஞ்செய்கிறேன்
சிந்தைமகிழவே யெந்தனற்குருவே.

அநுபல்லவி.

ஊசிமுனை தனிலே தலையூன்றிக்கால்மேலே
ஈஸ்வரனைத் துதித்தேன் அவரனேகவரமளித்தார் வந்த

சரணங்கள்.

விஸ்வகர்ம்மாவாலே இன்னகர்
வேலை தூண்டானதாலே
அவர்மகள்சொக்கக்கன்னியானை
திருமணஞ்செய்யின்றேனே வந்த

காலாள்சேனைப்பரிநம்மால் நாலு
லக்ஷங்கோடிகரி - மூலபலங்களுடன்
துணைவர்கள்காவல் றளித்திடுவீர்
வந்தனஞ்செய்கிறேன் வந்த

வாதாவிசொல் திபிதை.

சிந்தையுமகிழ்ந்தேன்பட்டணஞ் செய்ததுங்கண்ணுற்கண்டு
விந்தையாய்மணமுடிக்க வேண்டியதிருப்பதாலே
அந்தமாய்நகரமெங்கு மலங்கிர்தஞ்செய்துநன்றாய்
பந்தலும்போடுவித்து பதிலுரைசொல்வாய்மந்திரி.

வசனம்.

கேளும்மந்திரி பட்டணமுண்டாக்கினதைக் கண்டுமகிழ்ந்தேன் இப்போதெனக்குத் திருமணமுடிக்கவேண்டியிருப்பதால் இந்நகரமெங்கும் யாவரும்கண்டு மகிழும்படியாக வலங்கிருதஞ்செய்வித்து பந்தல்முதலானதும் போடுவித்து சேதிசொல்வாய் மந்திரி.

மந்திரிசொல் திபிதை.

கட்டியக்காராகேளாய் கதித்தகம்புலகம்யாவும்
இட்டமாயலங்கரித்து ஜெயபேரிமுழக்கநன்றாய்



கட்டளையிட்டேனிப்போ கடினமாயேயினியும்
இட்டவட்டங்கள்செய்து சீக்கிரமுரைத்திடாயே.

வசனம்.

கேளாய் கட்டியா ஐந்நூறுகாதவழி நீளமும் அகலமுமுள்ள இரத்னபுரிபட்டணத்தை அலங்கரித்து எக்காளம்-பேரி - தாரை-பூரி பதினெண்வாத்தியங்கள் முழங்கும்படி செய்துவருவாய் கட்டியக்காரனே,

கட்டியன் வசனம்.

அப்படியே செய்வித்தேனையா சுவாமி.

வாதாவிக்கு மந்திரிசொல் வசனம்.

தாங்களளித்த வுத்திரவின்படி பட்டணமுழுதும் அலங்கிருதப்படுத்திவைத்தேன் சுவாமி.

வாதாவிசொல் வசனம்.

சந்தோஷமானது விஸ்வகர்மா மகளாகிய சொக்கக்கன்னியென்னுமாதை தாதிகள்சூழ மணக்கோலத்துடன் அலங்கரித்து அழைத்துவாரும் மந்திரி.

## சொக்ககன்னி வருகிற

விருத்தம்.

கையினில்வளைகுலுங்க காதிற்கொந்தளமேமின்ன
மெய்யினிற்பணிதுலங்க விதவிதஆடை-பூண்டு
செய்தொழில்விஸ்வகர்மன் செல்வமாமின்றமாது
ஐயமில்லாமற்சொக்கக் கன்னியும்வருகின்றாளே.

பொது வசனம்.

அகோசெப்படியென்றால் அலங்கிர்த அனேகதாதிகள்புடைசூழ கதம்பகஸ்தூரிவாடைகள்வீச எக்காளம்-பேரி-தாரை-பூரி-டம்மாரி அனேக வாத்தியங்கள்முழங்க மணக்கோலங்கொண்டு விஸ்வகர்மா மகளாகிய சொக்ககன்னி சபைக்குவருகிறவிதம்காண்க.



சொக்ககன்னி வருகிற-தரு.

இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

மயவிஸ்வகர்மன்பெண்வந்தாள் - அதிசுந்தர
மயவிஸ்வகர்மன்பெண்வந்தாள்.

அநுபல்லவி

மயவிஸ்வகர்மன்பெண்ணாள் மதனரதிக்குமேலாள்
வாரியசடைதனில் பூமலர்சூடியே
நேர்விழிதன்னில்மை இலர்தமெழுதியே மய

சரணங்கள்.

காலிற்சிலம்பொலிக்கவே - தங்கவொட்டியாணம்
மேலிற்பணி துலங்கவே
காலிற்சிலம்பிலங்க கையில்வளைகுலுங்க
கதம்பகஸ்தூரிகள் கமகமவெனவே
விதவித ஆடைகள் பளபளவெனவே மய



19

காதிற்கொந்தளமின்னவே - வச்சிரமூக்குத்தி
கற்கள்தகத கென்னவே
காதிற்குந்தளமின்ன கையில்மோதிரந்துன்ன
கனகரும்பஸ்தனமேல்ரவிக்கை
மதனசுந்திர ரதியெனுமிடையாள் மய

மாதாபிதாவைபோற்றியே சொக்ககன்னியாள்
வாதாவிதனை யேற்றியே
மாதாபிதாவைக்கண்டு வாதாவிருரன்பெண்டு
மங்களயின்கிர்த குங்குமம்பூசியே
பெண்கள்குணமதில் மாயவிநோதியாம் மய

பொது விருத்தம்.

பந்தலிலுள்ளசூரர் பரம்குடன்சூழ்ந்திருக்க
மந்திரத்தச்சனாலே மணவறையதனுள்செய்து
விந்தையாயரசாணிநட்டு விதவிதசால்கரகம்வைத்து
சந்ததிவிளங்கச்சுக்ரா சாரியர்சடங்குசெய்தார்.

பொது வசனம்.

அகோரப்படியென்றால் அதிவீரசூரர்கள்சூழ்ந்த திருமண
பந்தலிலே மணவறையின்முன் அரசாணிநட்டு அதின்பக்கம்சால்
கரகம்வைத்து சுக்கிராச்சாரியார் வேதவிதிப்படி சடங்குசெய்கிற
விதங்காண்க.






## சுக்கிராச்சாரி சடங்குசெய்கிற தரு.

இ-ம்-மோகனம்-அட்தாள்சாப்பு

பல்லவி.

சடங்குகள்மிகச்செய்யவே - சுக்கிராச்சாரி
இடங்கொண்டெழுந்தாரே

அநுபல்லவி.

விநாயகர்பூசைசெய்தார் - சிவசுதக்
கணபதிப்பூசைகொண்டார் சடங்கு

சரணங்கள்.

நலங்கிடச்செய்தாரே - இருவர்க்கும்
சலம்விடச்சொன்னரே சடங்கு

கோடியுடுத்தச்சொன்னர் - மஞ்சள்வஸ்திர
ஆடைதரிக்கச்சொன்னர் சடங்கு

மாலையெடுத்தணிந்தார் - முல்லைமல்லி
ஆரந்தரித்தார்கள் சடங்கு

ஓமம்வளர்த்தாரே - ஆவினெய்பால்
தீயில்விடுத்தாரே சடங்கு

தட்டையெடுத்ததிலே - அரிசிதேங்காய்
தாலியையவைத்தாரே சடங்கு

மந்திரசெபங்கள்செய்தார் - மங்கிலியத்தை
வந்தவர்தொட்டார்கள் சடங்கு

எடுத்தார்மங்கிலியத்தை - வாதாவிகையில்
தொடுத்தானேபெண்கழுத்தில் சடங்கு

அரிசியெடுத்தாரே - சேஷையிட
பெரியோரையழைத்தாரே சடங்கு

அரசாணிசுத்தச்செய்தார் - கைகோர்த்துமே
அருந்ததியைக்காட்டினர் சடங்கு

சந்தனமளித்தாரே - வந்தவர்க்கு
தாம்பூலங்கொடுத்தாரே சடங்கு

விருந்திடச்செய்தாரே - யெல்லவர்க்கும்
விடைகொண்டெழுந்தாரே சடங்கு

வாதாவிசொல் இபிதை.

திருமணமுடித்துவைத்தீர் சேவடிபணிந்தேனும்மை
கரிபரிதேர்கள்சேனை காவலர்யேவல்மாதர்
எருதுடன்பசுக்களாடு யெருமைகள்கிடாக்கள்வண்டி
குருவேநீரெனக்களிக்க கோரினேன்சரணமையா.

வசனம்.

சுவாமி இன்னம் ஆனை சேனைகள் துனைவர்கள் ஏவலர்களும் உற்பத்திசெய்து கொடுக்கவேணுமையா சுவாமி.

சுக்கிராச்சாரிசொல் விருத்தம்.

ஆனையொடுசேனைபரி தேர்கள்காலாள்
அரிமுகமும்யாளிபுலி வேங்கையோடு
யானைமுகம்யெலிகரடி புலியுஞ்சென்றாய்
புத்திலேயீசலது புறப்பட்டாற்போல்
நாவிப்போபஞ்சாட் சரத்தினாலே
நலமுடனேவரவழைத்துத் தருவேன்கண்டாய்
சேனையொடுகாவலர்கள் சூழநன்றாய்
செழித்துமிகவாழ்ந்திருப்பாய் வாதாவிகுரு.

—*—

சுக்கிராச்சாரியார் சேனையுண்டாக்கும்-தரு.

இ-ம்-பந்துவராளி-அடதாளம்

பல்லவி.

வந்தாரே ராக்ஷதக்கோடி
வழைத்தசுக்கிரன் மிகுத்தபடையாய்.

அநுபல்லவி.

வந்தாரோராக்ஷதப்படை பஞ்சாட்சரவலுவால்
பஞ்சானனமுகங்களாயிரம்
இரண்டாயிரம் விழிகையொடு வந்தாரே

சரணங்கள்.

நரியோடியாளிகள் புலிமுகமொருகோடி ராக்ஷதபடை
கரடிகழுதைபுலி எருதுக்கிடாமுகம்
ஆரவாரசிங்கங்கள் கெர்ச்சித்ததுபோல
வீரசூரதீர ராக்ஷதப்படைகள் வந்தா



தேரோட்டும்பாகரொருகோடி ராக்ஷததீரர்
காரெட்டுவீரர்களிருகோடி
பரிதியையவாய்தனி லடக்கிவுமிபவர்
பாருள்ளகீர்தனை குடிக்கவல்லவர்
பாரவீரசூரத்தோடுகைமீறி
தாரைபந்தாடுவோமென்றேசினைத்துக்கூறி வந்தா
அண்டம்நடுங்கச்செய்வோரும் வல்லுலக்கைவேல்
கொண்டுபரிதேருடன்வருவோரும்
தடியொடுவில்லே விடியொடுயவர்பொடி
அடியோடெழும்பிட கடலேழும்பொங்கிட
அடர்ந்துதுடர்ந்து வீரிட்டேசிலர்
இடங்கள்நெருங்கிப் போரிட்டேஓடி வந்தா



சேவகர்கள் வருகிற

விருத்தம்.

வந்ததோர்சேனையெல்லாம் வந்தனஞ்செய்துநின்று
எந்தையேயெங்களைநீ ரியல்புடனழைத்தசெய்தி
தொந்தமாய்ச்சொன்னீராகில் தொல்புவிமகிழவேதான்
சிந்தையுமகிழச்செய்வோம் சுக்ராச்சாரியரேபோற்றி

வசனம்.

அகோ சரணம் சரணமையா யெங்கள் தந்தையாகிய சுக்கிராச்சாரியரே எங்களை மந்திரஜபத்தால் வரவழைத்தசேதி தெரிவிக்

தால் மூவர்யாவர் எவர்களாயிருந்தபோதினும் கிமைப்பொழுதில் ஜெயம்பெற்றுவருவோமையா சுவாமி.

சுக்கிராச்சாரிசொல் வசனம்.

அகோ அசுரப்படைகளே நீங்கள்யாவரும் வாதாவிசூரனிடமயிக்கியப்பட்டு அவனுக்கு ஏவல்பணி செய்துக்கொண் டிருங்கள். சேனைகளே.

இதுவும்அது விருத்தம்.

வாதாவிசூராய்கேளாய் வலுவுள்ளபடையைத்தந்தேன்
ஏதாகிலுங்குறவில்லாமல் யியலபுடன்வைத்துக்காத்து
நீதியாயுலகையாண்டு நெறிமுறைதவராமற்றான்
சோதிதன்பாதம்போற்றி சுகமடைந்திருப்பாய்சூரா.

பொது விருத்தம்.

திக்கெலாம்புகழுஞ்சேனை திறமுடனளித்தபின்னர்
மிக்கவேஅசோமுகிக்கு கெற்பமுண்டாகவன்று
சுக்கிரனினைக்கநால்வர் சுகமுடன்வாதரன்குண்டலன்
மிக்கவேமகோனன்மகோதரன் பக்குவமாகவந்தார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் சுக்கிராச்சாரியார் வாதாவிசூரனுக்கு சேனைகளை வுற்பத்திசெய்துக் கொடுத்தபின்பு வாதாவிசூரன் தாயாகிய அசோமுகிக்கு கெற்பமுண்டாகவென்று சுக்கிராச்சாரியார் நினைக்க, உடனே கெற்பமுண்டாகி வாதரன் – குண்டலன்–மகோன் – மகோதரன்யென நாலுபிள்ளைகளைப் பெற்றாள். அப்பிள்ளைகளை வாதாவிசூரனெடுத்து முத்தமிட்டு வளர்த்து சகலவித்தைகளையும் கற்பித்துக்கொடுத்து புஜபலமிகுத்து அரசுசெய்து மகிழ்ந்திருந்தார்களென்பதாம்.

பொது விருத்தம்.

புஜபலமுள்ளவாதா சூரனுந்தம்பிநால்வர்
திசையெலாமாளுங்காலஞ் சேயிழைசொக்ககன்னி
நிஜமதாய்க்கெற்பமாகி சிகரிகாகெம்பாசூரன்
கெஜமுகன்கும்பன்சம்பு மாலியையீன்றாள்மாது.



வசனம்.

அகோதெப்படியென்றால் வாதாவிசூரன் தம்பிமார் நால்வர்கள் அரசுசெய்யுங்காலத்தில் சொக்ககன்னி கெர்ப்பவதியாகி பன் – கும்பன் – கெஜமுகன் – சம்புமாலி யென்று நால்வரை ஈன்று ஐந்துவயதானவுடன் சகலவித்தைகளையுங் கற்றுக்கொண்டு வலிகுத்து பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள்.

---

வாதாவிசூரன் பிள்ளைகளை அழைத்துவரும்படி கட்டியனுக்கு சொல்லுகிற

விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா யருந்தவஞ்செய்துபெற்ற
சூரனும்கெம்பாசூரன் சுகமுடன்கெஜமுகன்றான்
வாரெங்கும்புகழுகின்ற பராக்கிரமன்கும்பாசூரன்
வீரியமுள்ளசம்பு மாலியையழைத்துவாராய்.

வசனம்.

அடேகட்டியா எனதுபுதல்வர்கள் நால்வரையும் நானழைத்து அழைத்துவருவாய்.

கட்டியன் வசனம்.

அப்படியே அழைத்து வருகிறேன் மகாராஜனே.



பிள்ளைகள் வருகிற தரு.

இ-ம-சாவேரி-ஆதிதாளம்

பல்லவி.

கெம்பாசூரனானே அதிகக்கெட்டி
கெம்பாசூரனானே.

அனுபல்லவி.

கெம்பாசுரனுடன் கெஜமுகச்சூரனும்
கெம்பாசுரன்தம்பி சம்புமாலிநால்வர் — கெம்

சரணங்கள்.

பரிதியையெட்டிப்பிடிப்போம் - எங்கள்பெலன்
பரமன்மலையை யெடுப்போம்
பரிதியையெட்டுவோம் பரமன்மலையெடுப்போம்
கரியைக்கையாலெடுத்து பந்தாகவெறிகுவோம் — கெம்

அஸ்வனிமுதல் ரேவதியைவில்லில்வைத்து
அந்தரத்தினிலெறிவோம்
விஸ்தாரமானகடல் நீர்மேல்நடந்தோடுவோம்
வேடிக்கையாய்த்திமி திமிங்கலத்தைப்பிடிப்போம் — கெம்

பாரிமலையையெடுத்து - கைகல்லுபோல்
சூரியனையெறிவோம்
பாரிமலையெடுத்து பந்தாடியேயுடைத்து
பச்சமலைதந்து பவழமலையேந்துவோம் — கெம்

பிள்ளைகள் தகப்பனிடம்போய் சொல்லும் தரு.

இ-ம்-ஸன்னியாசி-ஆதிதாளம்

பல்லவி.

ஏனெங்களையழைத்தீர் - உரைத்திடும்
என்னகாரணமழைத்தீர்.

அனுபல்லவி.

எளிதேயழைத்தீராயா யேவல்புரியுமெய்யா
சேனைகளைத்தாந்தியா க்ஷணத்திலெரிப்போமையா — என்

சரணங்கள்.

என்னகுறைதனைவந்ததிப்போ - எங்களையழைத்
தின்னதென்றுசொல்லாதிருத்தல்தப்பே
பொன்னோடு வெள்ளிமலையை
பிடுங்குவோ மதுகளை
முன்னேனுனுமில்லான்
என்னோடெதிர்த்து நில்லான் — என்



சிறுவரென்றெண்ணாதேயையா - எங்களையிங்கு
வரவழைத்ததைசொல்வீரெய்யா
எறிதணலிற் புகுவோம்
உருமாறியே திரிவோம்
கருங்கடல்நீரை குடிப்போம்
பெரும்புலியானைபொசிப்போம் — என்

மேல்வாருதியில் விழுவோம் - சுவாசமடக்கி
கீழ்சமுத்திரத்திலெழுவோம்
மேலேகிளம்பி சந்திர
மண்டலம்புகுவோமிந்திர
உலகமதிர நுழைவோம்
மாலோன்பதியை யேகுவோம் — என்

வாதாவிசொல் விருத்தம்.

தோமரங்கள் பாணமொடு வில்வாளேந்தி
துலங்கவே யொருகோடி படைகள்சூழ
சாமரங்கள் கௌரியா லாத்தியோடு
சகலருஞ்சூழ் ரத்னபுரி யானுங்காலம்
இமயவர்கள் தமையடக்கி நமதுவேலைக்
கிசையவே செய்வனென்று தம்பிநால்வர்
மாமகுடம் புனைந்தவா தாவிசூரன்
வருத்திட்டான் பிள்ளைகளுக் குரைத்திட்டானே.

வசனம்.

கேளுங்கள் பிள்ளைகளே. ஈஸ்வரனால் அனேக வரம் பெற்று இரதகஜதுரக பதாதிகள் பெருத்து ஏகச்சக்கிராதிபதியாய் பலபிருத்து வாழ்கிறோமல்லவா தேவர்கள்-தேவஸ்திரீகள் யாவரையும் பிடித்து நமதேவல்செய்யவைத்து அவர்களையடக்கி யொடுக்கி அடித்து பிடித்துவைத்திருந்தால் நமதுபேர் எங்கும் வியாபிக்குமல்லவா ஆதலால் தேவர்கள்-அஷ்டவசுக்கள்-பிரமா-விஷ்ணு-சந்திரன்-சூரியன் முதலான யாவர்களையும் பிடித்துவாருங்கள் தம்பிமார்களே புதல்வர்களே.

(பிள்ளைகள்-வசனம்) அப்படியே செய்குறோம் தந்தையே.

இராக்ஷதாள் தேவர்களைப் பிடிக்கவருதல்.

இ-ம்-மோகனம்- அடதாளம்

பல்லவி.

அசுரர்கள்வந்தாரே - தேவரைதேடி
அசுரர்கள்வந்தாரே.

அநுபல்லவி.

அசுரர்கள்வந்தாரே விசையாகவேயெழுந்து
அண்டம்நடுங்கிட அதிரப்பொழிந்து அசுரர்

சரணங்கள்.

இந்திரனைப்பிடித்தார் - கயர்கட்டி
இருக்கிச்சிறையிலடைத்தார்
தந்திரமாகவே சந்திரனைப்பிடித்து
தயங்கிமயங்கி வெளியினின்றேவிடுத்தார் அசுரர்

பருதியைதான்பிடித்தார் - கைகட்டதென்று
பருக்கிரமித்தேயெழுந்தார்
பருதியைப்பிடித்துமே பத்தெட்டடியடித்து
ஒளிகுறச்சாலையில் யிட்டுக்கடையல்பிடித்து அசுரர்

மாய்கையெடுத்தாரே - ஜெகஜ்ஜால
மாலைப்பிடித்தாரே
மாலைப்பிடித்து மணிக்கயற்றல்கட்டி
மாடோட்டுங்கள்ளா மடையாயென்றேதிட்டி அசுரர்

பிரமன்றனைபிடித்தார் - வேதஞ்சொல்லும்
குரவன்றனையடித்தார்
பிரமன்றனைபிடித்து நமனையுதைத்தடித்து
பேய்போலலையுங்காற்றை பெருக்கவிருக்கிமெத்த அசுரர்

தனஞ்சயனைபிடித்தார் - நிருதியை
தவிடாய்க்கொழித்தடித்தார்
மனங்கொண்டுவருணனை மானமாக்கொண்டு
தனந்தரக்குபேரனை தானேமடக்கிக்கொண்டு அசுரர்



உலகமதிர்ந்திடவே - அஷ்டகஜங்கள்
மலைபோல் குவிந்திடவே
உலகமதிர்ந்திட மலைகளுடைந்திட
உம்பர்கள்மனம்கொந்து மெய்சுதயங்கிட அசுரர்

விண்ணுறுமதிர்ந்திடவே - நக்ஷத்திரங்கள்
மண்ணில்விழுந்திடவே
மன்னன்வாதாவி மயங்கிடதேவர்
என்னவிபரீதமென்றுதியங்கிட அசுரர்



ஈஸ்வரர் வருகிற

பொது விருத்தம்.

மாலயன்றேடிக்காணு வள்ளல்பார்வதியாளிபாகன்
பாலன்மார்க்கண்டருக்காய் பாசமேவிடுத்தகாலனை
காலனையுதைத்தபாதன் கையின்மான்மழுதரித்த
வேலனையீன்றமூர்த்தி விடையின்மேல்வருகின்றாரே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் பிரம்மா விஷ்ணு யிருவரும் அடிமுடிதேடிக் காணுதவராயும், பார்வதியை இடபாகத்தில்வைத்தும்

மார்க்கண்டனுக்காக மரலியையுதைத்தும், சூல-கபாலந்தரித்தும், விநாயகர்-சுப்பிரமணியரை அளித்த மூர்த்தியானவர், தேவர்கள் [illegible] தவரினகாரண மியாதென்றறிய ரிஷபவாக [illegible] தர்புடைசூழ சபைக்குவருகிற விதங்காண்க.

---

ஈஸ்வரன் வருகிற தரு.

இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்

பல்லவி.

வந்தார்பாரீர் கைலைவாசர்
வந்தார்பாரீர்.

அனுபல்லவி

வந்தாரிதோபாரீர் தொந்தோமென்றுடியே
விந்தையாய்விடையேறி சந்திரனைதரித்தோர் வந்

சரணங்கள்.

நந்தியுடன்கண நாதர்களுஞ்சூழவே
நன்மலர்கந்திரு வாதியர் தூவவே
சிந்தைமகிழ்ந்தோர் சிவசிவாவென்னவே
சித்தர்முனிவர் ஜெயஜெயவென்னவே வந்

வேடிக்கையாய் புள்ளாங்குழலூத
மிருதங்கவீணை தம்பூருஜொலித்திட
சேடியர்பிட்ட லிசைகொண்டுபாடிட
தேவர்முனிவர் மகிழ்ந்துகொண்டாடிட வந்

அந்தரதுந்துமி வாத்தியமுழங்கிட
அரவாபரண மசைந்துக்குலுங்கிட
கந்தபரிமள வாசங்கள்வீசிட
சங்கீதம்பரிட வேதமுழங்கிட வந்

வானவர்மாலயன் யிந்திராதிதேவர்கள்
மாதவந்தப்பின காரணமேதென்று
தினதயாபர ரூரதனெங்கென்று
திரமாய்விசாரணை செய்யமனங்கொண்டு வந்





# நாரதர் வருகிற

விருத்தம்.

ஆதிமாலயனுமிந்திரு ருதியர்பதியைநீங்கி
யிபாதகன்வாதாசூரன் தூதரால்பிடித்துவந்து
சோதிரத்னபுரத்திற் சொற்படியேவல்கொள்ளும்
சேதியைப்பரமனுற்குச் செப்பநாரதர்வந்தாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் ஆதிமூல சோதிசொரூபனாகிய மகாவிஷ்ணுவையும், சகல சிருஷ்டிகர்த்தராகிய பிரமன்-தேவர்கள் பலரும்-தேவ அரசனாகிய இந்திரன்-அஷ்டவசுக்களையும் வாதாவிசூரன் தனது தூதர்களால் பிடித்துக்கொண்டுபோய் இரத்தினபுரிநகரத்து அசுரர்களுக்கு ஏவல் பணிவிடைசெய்யும்படி ஆக்கியாபித்துநடத்திவருகிறநாளையில் நாரதமகாமுனிவர் தெய்வப்பதியில் தேவர்களில்லாததறிந்து கைலாசவாசகருக்குசொல்லவருகிறவிதங்காண்க.

---

நாரதர் ஈஸ்வரரிடம்சொல் தரு- ஓரடி.

கண்ணிகள்.

அரகரர்கயிலாசவாச அச்சுதாமுகுந்தாவென்று
அருள்பெரும்நாரதமுனி அரன்சபைவந்துதோன்றினர் அர
கையில்வீணாநாதமுடன் கழுத்திற்ருவடம்பூண்டு
மெய்யினில்வெண்ணீரணிந்து வேடிக்கையாகதோன்றினர் அர

வேதசங்கீதம்பாடி விமலர்பதத்தைநாடி
ஓதியபஞ்சாக்ஷரமாக தவமுனிவந்துதோன்றினர் ஆர

பாதகன்வாதாவிசூரன் பண்ணுமக்கிரமந்தானறிந்து
பேதகஞ்செய்யக்கவடுகொண்டு நாரதர்வந்துதோன்றினர் ஆர

நாரதர் விருத்தம்.

ஐயனேபோற்றிபோற்றி அங்கசன்றனையுதைத்த
மெய்யனேபோற்றியிந்த மேதினிபடைத்தாய்போற்றி
துய்யனுமயன்மாலிந்திரா தியர்தமைவாதாசூரன்
செய்யும்வாதைகளைச்சொல்வேன்சித்தம்வைத்தருள்வாய்போற்றி

---

இதுவுமது-தரு,

இ-ம்-பிலகரி-அடதாளம்.

கண்ணிகள்.

பூலோகந்தன்னிலே சூரபத்மன்தங்கை
அசோமுகியாள்வயற்றில்

ஆலகாலம்போலே வில்வலன்வாதாவி
அவதரித்தார்களையா

கோலாகாலங்களாய் ரிஷிகளனைவரை
கொன்றவர்தின்றார்கள்

வேலவர்க்கன்பன் அகத்தியமுனி
அவ்வீதியில் தான்வரவே

பாதகன்வாதாவியென்னவில்லிலமுதுனீர்
பக்ஷிக்கவேணுமென்றார்

சூதையறியாமல் முனியொப்பச்
சுருக்காய்முதுசெய்தான்

பாதகன்வில்வன் ஆட்டுக்கடாவாக
பாரியுருவெடுத்தான்

தீயன்வாதாவி கிடாவையறுத்துச்
சிந்துசிந்தாய்சமைத்தான்



வாருமையாமுனியே யமுதுண்ண
வாவென்றுபசரித்தான்

சூரன்வாதாவி சொற்படியுண்டு
சுகித்தாரவ்வேளைதன்னில்

வீராதியென்னண்ணு வில்வலாவாவென்று
வீரியமாயழைத்தான்

தீரன்வயற்றில் வுருவாயெழும்புஞ்
செய்தியைத்தானறிந்தார்

தவமுனிதன்வயற்றில் ஜீர்ணமியென்
றணிந்தார்விபூதிதன்னை

அவமிருத்துவாகிய சேதியறிந்து
அழுதுப்புரண்டானே

உம்மைநினைந்து தவமேபுரிய
வரமதுதான்கொடுத்தீர்

வரமதுபெற்ற வாதாவிசூரன்
வானுலோகமேவி

அரிபிரமாதியர் யாவரையும்பிடித்
தடித்தவன்யோவலிட்டான்

இன்னமென்னசூது யிடும்புகள்செய்வானோ
ஏகனேயானறியேன்.

ஈஸ்வரன்சொல் விருத்தம்.

நல்லதுபயப்படாதே நாரதமுனியேகேளீர்
தொல்லைசெய்திடும்வாதாவி சூரனையதமேசெய்யச்
சொல்கிறேனுபாயமொன்று சுருதியோடந்தமாக
வல்லவாநீபோயந்தத் தேவனையழைத்துவாராய்.

வசனம்.

ஆனால் நல்லதாகட்டும் பயப்படவேண்டாம் தொந்தரைசெய்
ம வாதாவிசூரனை இன்னும் கொஞ்சதினத்தில் அதம்பண்ணச்
செய்வோம். இதோ நான் கொடுக்கும் விபூதியை தாவிவிடும் சந்
ருபுரியிலுள்ள அசுரர்கள்யாவரும் அதிக நித்திரையாய் விடுவார்
ா அங்குள்ளதேவர்களை இங்குவரும்படிசெய்யும் நாரதமுனியே

(நார-வ-ம்) அப்படியே நல்லது சுவாமி.



# தேவர்கள் ஈஸ்வரனிடம் வருகிற

விருத்தம்.

இந்திரன்பிரமாவிஷ்ணு யெனதிக்குப்பாலரோடு
புந்திரதேவர்யாவர் சூழ்ந்துவாதாவிபக்கல்
விந்தையாயேவல்செய்து விசனமாயிருக்கும்போது
மந்திரகாரதருணக்க வருகிறார்தேவரெல்லாம்.

---

தேவர்கள் வருகிற-தரு.

இ-ம்-பராபரக்கண்ணி-அடதாளம்.

பல்லவி.

தேவாதிதேவர்வந்தார் நல்ல
சித்தல்பரிசுத்த முத்தனைக்காண.

அநுபல்லவி.

அனங்கனைக்காய்ந்தக்கண்ணனே - எங்கள்
ஆதியேசோதியே நீதியுள்ளவனே
மானங்கமழ் பூண்டமெய்யோனே - எங்கள்
வல்லோனே சொல்லோனே நல்லோனைக்காண தேவா



சரணங்கள்.

மாலயனிந்திராதி தேவர்கள்நாங்கள்
வாதைபட்டோம்வாத சூரனல்யாவர்
போதும்போதும் துயர்தீரும்சிவ
நாதனேயுமையவள் பாகனேகாரும் தேவா

ஏமனையுதைத்தப் பொம்பாதா - இது
சமயம்சமயமெங்க ளிடர்தீர்நாதா
சோமன்றனைதரித்த விநோதா - இப்போ
தாமதமில்லாமல் தயவருள்தாதா தேவா

உம்மையல்லாமல் வேருண்டா - எங்கள்
உத்தமனேமனம் வைத்துவிஷமுண்ட
பாம்பாபரணத்தைப்பூண்ட - எங்கள்
பாதியேநீதியே யமரர்கள்வேண்ட தேவா

தேவர்கள் சிவனிடம் முறையிடும் - தரு.

இ-ம்-நீலாம்புரி-திருபுடைதாளம்

பல்லவி.

அபயமபயமையா எங்கள்
ஆதியேயபயமையா.

அநுபல்லவி.

நகைத்துப் புரமெரித்தவா
நாதனேகரி யுரித்துப்போர்த்தவா அப

சரணங்கள்.

அந்திவண்ணாயென்னசெய்வோம் - எங்கள்
சிந்தையுக்கலங்கி யுய்வோம்
மந்திரகிரிதன்னில்வாழும் - எங்கள்
மகாதேவா சொல்லக்கேளும் அப

பட்டபாடுமெத்த வுண்டு - அந்த
துட்டன்வாதாசூரன் தொண்டு

இட்டமுடன் ரத்தினபுரி
பட்டணமேவல் செய்தோம்அரி — அப

புஷ்பசந்தனங்கள் தினம்
வச்சிரபாணிதந்தார் சாசனம்
அக்ஷயதைகொடுத்தனையா
கஷ்டப்பட்டுபிரமன்மெய்யா — அப

வச்சிரவாளைதேர்ச்சிசெய்து
அச்சுதனார்தந்தார்நொந்து
அக்கினி வாதாசூரனில்லில்
நற்கறிசோர்செய்தசொல்லில் — அப

அந்தகன்வைத்தியனாய்
வந்தானவ்வூரைக்காத்து
நிருதிதென்றிசைமுழுதும்
உபசரித்தார் புரிமுழுதும் — அப

வருணன்சாணந்தெளிக்க
வாய்வுமவ் வூர்பெருக்க
குபேரன்சூரன் குடும்பமெல்லாம்
கொண்டாடக்கத் தனங்களெல்லாம் — அப

ஆதிசேஷன் மதுக்குடங்கள்
ஆயிரஞ்சிரமேல் சாராயங்கள்
தெய்வஸ்திரீகள் ராக்ஷதிக்கு
மையெழுதிவந்தாளவற்கு — அப

பட்டபாடு சொல்லிவர
வெட்கக்கேடா யிருக்குதையா
பரமனேயபயமெங்கள்
சிரமங்களை தீரும்நீங்கள் — அப

—*—



இதுவுமது-தரு.

இ-ம்-தோடி-ஏகதாளம்

கண்ணிகள்.

என்னசெய்வோமையா யேதுசெய்வோமையா — தேவ-தேவா
எங்கள்தலைவிதி இப்படியிருந்ததோ — தேவ-தேவா
முன்னாளிலுந்தனக் கென்னகுறைசெய்தோம் — தேவ-தேவா
இந்நாளில்வாதாவி சூரன்கையொப்பித்தீர் — தேவ-தேவா
உலகையாண்டதும்போய்ஊழியஞ்செய்யலாச்சே — தேவ-தேவா
வெலங்கொள்வாதாவியெங்கள் பெருமையைக்குலைத்தானே — தேவா
தேவர்பலங்குறைந்துக்காவலிருந்தோமே — தேவ-தேவா
பாவத்தொழில்களைப் பார்த்தோமேகண்ணாலே — தேவ-தேவா
ஆபத்காரணாய் யநுதாரக்ஷகனாய் — தேவ-தேவா
அடிமையாங்கள்செய்த பிழைபொறுத்தாளுவீர் — தேவ-தேவா
ஆதியுமந்தமு மனாதியும்நீயேயாய் — தேவ-தேவா
அண்டினோமோநாங்க ளடைக்கலமாய்க்கொள்வீர் — தேவ-தேவா

சிவன்சொல் விருத்தம்.

மதங்கொண்ட ராவணனை சம்மாரஞ்செய்து
மாவலியை மண்ணினில்விழ வுதைத்தமாலே
விதமான வாயிரங்கண் ணுடையயிந்திரா
மேதினியைப் புகழ்படைத்துக் கொண்டபோதா
மதிசேர்வ ஞானமத ராஜபோஜா
கனிமலர்தேவர்களில் யாராலும்
அதஞ்செய்து வாதாவித் தன்னைக்கொன்று
ஆணவத்தை யடக்கிவைக்கப் போவாருண்டோ.

சிவன் - விஷ்ணுவையும் - பிர்மாவையும் கேட்கும்-தரு.

தர்க்கம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

சிவன் சொல்லல்.

மாவலியைவுதைத்து ராவணனைவதைத்த
மாலேவாதாவியை போய்ஜெயிக்கவும்மால்
ஆகுமோ வாகாதோசொல் - கிருஷ்ணு
ஆகுமோ வாகாதோசொல் மாவலி

மகாவிஷ்ணு சொல்லல்.

ஆகுமென்றுல்நான் அவன்கைகயிலேசிக்கி
அவதிப்படுவேனே சொல்வீர் சிவசங்கரா
விசனப்படுவேனே - மகாதேவா
விசனப்படுவேனே. ஆகு

சிவன் சொல்லல்.

தேவர்க்கரசனுகி செங்கோல்செலுத்துமகாராஜா
தேவேந்திராகேளீர் வாதாவிசூரன்மேல்
போர்க்கொண்டுநீர்வாரீர் - தேவேந்திர
போர்க்கொண்டுநீர்வாரீர் தேவ

தேவேந்திரன் சொல்லல்.

போர்க்கொண்டுரத்நு புரிகர்சென்றக்கால்
போகுமென்னுார்களெல்லாம் அதமாக
வாதாவிசெய்திடுவான் - சம்போசங்கரா
வாதாவிசெய்திடுவான். போர்

சிவன் சொல்லல்.

ஊர்வனமுதல்யாவும் வுற்பத்திசெய்கின்ற பிர்மதேவா
உத்தமரத்ந புரிகரஞ்சென்று
உயிரைக்கொன்றுவாரும் - சூரர்
உயிரைக்கொன்றுவாரும் ஊர்



பிரமதேவன் சொல்லல்.

கொல்லவென்றுலவன் வல்லவனுச்சுதே
செல்லவசமல்லவே - சாம்பசங்கரா
வெல்லயென்னுலில்லையே - அவ்வசுரனை
வெல்லயென்னுலில்லையே கொல்

சிவன் சொல்லல்.

தேவர்களேயுங்கள் திரத்தாலசுரர்களை
செயித்துவதைத்துவருவீர் - தேவர்களே
செயித்துவதைத்துவருவீர் கும்பலாயேபி
செயித்துவதைத்துவருவீர் தேவர்

தேவர்கள் சொல்லல்.

துணிக்கவென்றுலவன் வரப்பிரசாலியல்லவோ
செயம்பெறயெங்களாலில்லை - யாகம்
வளர்த்திரைப்போன் வதைக்கவல்லவன்
சம்போ சங்கராபிறப்போர்ன் துணி

சிவன்சொல் வசனம்.

கேளுங்கள் சகல அசுரர்களை வதைத்தும், பூமியை ஓரடியாக அளந்தும், மாவலிசக்கிரவர்த்தியை வுதைத்தும், விண்-மண்ணுறுள்ளோர்கள் இடர்களைத்தவிர்த்த மகாவிஷ்ணுவே - சகலஜீவனகளை வும்பவுஞ்செய்யும் பிரம்மாவே - தேவர்களுக்கரசனுகிய தேவேந்திரனே - தேவாகளே - இடர்செய்யப்பட்ட வாதாவிசூரனை செயித்துவாருங்களென, எங்களால் அவனைஜெயிக்க முடியாதென்றயா வருஞ்சொல்ல, ஈஸ்வரன் விஷ்ணுவைப்பார்த்து உம்மாலாகாதகாரியம் மற்றெவர்களாலாகும் யோசித்துரையுமெனவும் மகாவிட்டுணு சொல்லுகிறவிதம்.

விஷ்ணுசொல் தரு.

இ-ம-சாவேரி-ஆதிதாளம்

பல்லவி.

என்னயோசனைசெய்வேன் - சங்கரதேவா
என்னயோசனைசெய்வேன்.

அநுபல்லவி

என்னயோசனைசெய்வேன் யேகநாயகனேநான்
எறியுதேயென்னுயிர் பொரியுதேதலைதாய்
கரியுரிபோர்த்தகங் காளனே அரகரா என்ன

சரணங்கள்.

பாவிவாதாசூரன்செய்த கோரம் வகங்காரம்
நாங்கள் பார்க்கவசமோ ஐயா,
ஆவியுருகுதையோ ஓயாமல்ரத்னபுரிக்
கூழியஞ்செய்துவந்தோம் நொந்து
உருகுதேயெங்கள்மனங் கருகுதேவெந்து
பெருமைக்குறைந்து சிறுமைபடலானோம் என்ன
வரத்தால்மிகுத்தசூரன் அவன்வலுமை வெகுதிரமை
இவ்வுலகினி லொருவருமிகரில்லை
வரத்தில்மிகுத்தோன்பாவி சரத்தில்வலுத்தோன்சாக
வல்லவன்சம்புமுனி வளர்த்தவேளும்ஓமம்
இல்லையிலாடியோய் தீர்க்கஆகுதிகொடும் என்ன
வளர்த்தும்ஓமக்கனியிலே உமதருளாலே
எங்கும்புகழவே கீர்த்திக்கொண்டு
வருவான் வன்னியராஜனும் ஒய்யாரமாக
வருவான்வன்னியராஜன் திரமாய்பரியுடனே
வலுமைமிலேமிகு பதினெட்டாயுதங்கொண்டு
சூரபுட்டனேவாதா சூரனைஜெயிப்பவன் என்ன

ஈஸ்வரன்சொல் வசனம்.

அப்படியா ஆ-ஆ-சந்தோஷம். அவனிடவரத்திலும் அக்கினியென்கிற வரமில்லையோ சரி-சரி. மகம்மேருகிரிமலை வடபாகச்சாரலில் தவஞ்செய்துக்கொண்டிரானின்ற ஜம்புமகாரிஷியை நானழைத்ததாய் போய் அழைத்துவாருங்கள் கணநாதர்களே.

(கண-வ ம்) அப்படியே அழைத்துக்கொண்டுவருகிறோம்.



30



## ஜம்புமகாரிஷி வருகிற

பொது விருத்தம்.

ஆறுசாஸ்திரங்கள்வேதம் அருபத்துநாலுங்கூடி
சேரவேதழைத்தாற்போல சிவனிடபாதம்போற்றி
மார்பிற்பூணூலிலங்க வளர்சடைகுலுங்கநன்றாய்
தாரணிபுகழும்சம்பு மகாரிஷிவருகின்றாரே.

பொது வசனம்.

ஆகோதெப்படியென்றால் ஆறுசாஸ்திரம் நான்குவேதம் அறுபத்துநான்கு கலைக்யானம் இதுகளொன்றாய்க்கூடி தழைத்ததுபோல் மார்பில் பூணூலிலங்க சடைகுலுங்க தவத்தில்மிகுத்த சம்பு மஹாரிஷி சிவனிடம்வருகிற விதங்காண்க.

---

சம்புமகாரிஷி வருகிற-தரு

ஆனந்தக்களிப்பு.

சம்புமகாரிஷிவந்தார் வேத
சம்பன்னரென்றுபேர்கொண்டார்
அம்பலத்தாடியைக்கண்டார் வெகு
ஆனந்தமாய்களிக்கொண்டார் சம்பு

அஞ்செழுத்தோதியேயின்றார் வெகு
சந்தோஷமாய்மனங்கொண்டார்
காதிற்கவசமிலங்க சங்கு
கழுத்திலுத்ராக்ஷந்துலங்க சம்பு
தலையிற்சடையுங்குலுங்க கைலை
மலையிற்றவஞ்செய்துயிருந்த
திங்கள்தரித்தோனழைத்த சேதி
மங்களமாகவேயன்புடன்கேட்க சம்பு

விருத்தம்.

சங்கராபோற்றிபோற்றி சதாசிவருபாபோற்றி
திங்களைதரித்தோய்போற்றி தேவரீரெனையிப்போது
மங்களமாகவிங்கு வரவழைத்திட்டீரேனோ
சங்கதியின்னதென்று தயபுரிந்துரைத்திடீரே.

---

ஈஸ்வரனுக்கும் – சம்புமகரிஷிக்கும்
தர்க்கதரு.

இ-ம்-பியாகடை–ஆதிதாளம்.

சம்பு சொல்லல்.

ஐயாயெனையேனழைத்தீர் – வுரைத்திடும்
ஐயாயெனையேனழைத்தீர்
ஐயாயழைத்தவிதம் மெய்யாயுரைப்பீர்சதும்
தையலைபாகம்வைத்த சங்கராமழுதரித்த ஐயா

சிவன் சொல்லல்.

அழைத்தவித முரைப்பேன்கேள் – சம்புமுனியே
அழைத்தவித முரைப்பேன்கேள்
அழைத்தவிதமுரைப்பேன் அரக்கன்வாதாவிசூரன்
இடுக்கஞ்செய்தமரரை யேவல்செய்தான்சுரரை அழை

சம்பு சொல்லல்.

என்னாலாவதென்னமோ – ஏகநாயனே
எடுத்துவுரைப்பீர்முன்னே
என்னாலாவதென்ன யெடுப்பேனோசரந்தன்னை
தொடுப்பேனோசூரன்மேல் விடுப்பேனோதலக்யானி என்



31

சிவன் சொல்லல்.

சரந்தொடுக்கவேவேண்டாம் – சம்புமுனியே
தவங்குறைக்கவேவேண்டாம்
சரந்தொடுக்கவேயும்மை விரும்பினேனலதுதிண்ணம்
திரமாயாகம்வளர்க்க பிறப்போன்சூரனைசெயிக்க சர

சம்பு சொல்லல்.

ஓமம்வளர்க்கவேணுமோ – சிந்தைமகிழ
யாகமண்டபம்வேணுமே
ஓமம்வளர்க்கவென்றால் யாகமண்டபம்நன்றாய்
கியாபகமாகநீங்கள் ஆகுதிதருவீர்தாங்கள் ஓமம்

சிவன் சொல்லல்.

அப்படியேயல்லது – ஆகுதிதாரே
ஒப்பிடுவீரிப்போது
அப்படியாகட்டும், சொற்படிமயனாலே
கற்பனைமண்டபம்செய்ய செப்புவேனேயேலே அப்

ஈஸ்வரன்சொல் விருத்தம்.

எனதருகிற்சூழ்ந்துபணி யேவல்செய்யும்
இன்பமுள்ளகணநாதா யியம்பக்கேளும்
மதுசாஸ்திரமறிந்த விஸ்வகர்மன்தன்னை
மகிட்சியாயிங்கோடி யழைத்துவாராய்.

வசனம்.

கேளும் கணநாதர்களே வாய்வேகம் மனோவேகத்திற்குமதிக மாகச்சென்று விஸ்வகர்மனைக்கண்டு யானழைத்தேனென்று அழைத்துவாருங்கள் கணநாதர்களே.

(கண-வ-ம்) அப்படியே அழைத்துவருகிறோம் சுவாமி.

---



## விஸ்வகர்மா வருகிற

விருத்தம்.

காமாட்சியம்மனிட வரமும்பெற்றோன்
காசினியில்மானிடர்கள் பிழைக்கக்கற்றோன்
தோமரம்வில்வாளுலக்கை தண்டுபாங்கு
துளைக்கருவிபாணமொடு அம்புகத்தி
சாமிகள்வாழிருப்பிடமும் மாடமாளி
சகலபணிபூஷணங்கள் மகுடமாரம்
க்ஷேமமுடன் சிருஷ்டிக்கும் விஸ்வகர்மன்
க்ஷேத்திரியுடனரன்சபையில் வருகின்றானே.

வசனம்.

சேனுங்கள் சிற்பிசாஸ்திரமுணர்ந்து விசித்திரவினோதவேலை கள்தெரிந்து சகலக்கருவிகளையும் நானுவிதங்களையும் இயற்றும் விஸ்வகர்மா அரனழைக்க, சபைக்குவருகிற விதங்காண்க.

---

விஸ்வகர்மன்-வருகிற-தரு.

இ - ம் - தோடி - அடதாளம்

பல்லவி.

வந்தானே விஸ்வகர்மன் - அரனைக்காண
வந்தானே விஸ்வகர்மன்.



அநுபல்லவி.

வந்தானேமயவிஸ்வன் வானோர்புகழுந்தச்சன்
செந்தாமரைமுகத்தில் திருநீர்சந்தனமிட்டு வந்

சரணங்கள்.

மார்பில்பூணூலிலங்கவே - வயிரமணி
ஆரம்பளப ளென்னவே
மார்பில்பூணூலிலங்க வயிரமணிதுலங்க
பாருள்ளோர்கள்மதிக்க பஞ்சவேலைசிறக்க வந்

சிற்பசாஸ்திரமறிந்தோன் - பலவித
விசித்ரவேலையிற் சிறந்தோன்
மச்சுமாளிகைகூடம் மாமதில்கோபுரங்கூடம்
உஜிதரதங்களஸ்திரம் புஜிதநகைசெய்விசித்ரம் வந்

எங்கும்புகழும்சித்திரம் - என்சிருஷ்டிப்பு
தங்கமயமாகுந்சூத்திரம்
தங்கத்துடனேபஞ்ச லோகாபரணம்பாத்திரம்
எங்கும்பிரபலமாக விசப்பேன்பற்பலசூத்திரம் வந்

கத்திகேடையம்பினுக்கு - வில்லுலக்கைவேல்
கதைதண்டுவேல்பாங்கு
சூத்திரங்கள்பலவும் வாத்தியமுரசுகளும்
சுகமனுபவிப்பதின்றுள் மனுபிழைப்பதுமென்னால் வந்

விஸ்வகர்மன் போற்றி-விருத்தம்.

அரகரசிவனேபோற்றி அருமறையோர்கள்போற்றும்
திரிபுரதகனும்போற்றி திங்களைதரித்தாய்போற்றி
கரிமுகன்றன்னையீன்ற காரணப்பொருளேபோற்றி
திருமலாயெனையழைத்த கிரணியமுறைப்பாய்போற்றி.

சிவன்சொல் விருத்தம்.

வாதாவிசூரன்செய்யும் வக்கிரமத்தாலேதேவர்
ஏதானுஞ்செவிக்கப்போகா தென்றடிப்பணிந்தார்விஸ்வா
தூதனமாகவோய மண்டபமொன்றுண்டாக்கி
சாதாரணமாகச்சென்று சனுதியிலியற்றிவாரும்.



விஸ்வகர்மன் யாகமண்டபம் வுற்பத்திசெய்யும்-தரு.
இ-ம்-மோகனம்-அடதாளம்

பல்லவி.

உற்பத்திசெய்வேனே - யாகமண்டபம்
உற்பத்திசெய்வேனே.

அநுபல்லவி.

உற்பத்திசெய்வேனே விச்சித்திரமாய்நானே
உலகம்புகழுங்கைலே வடபுரத்தன்னிலே உற்ப



சரணங்கள்.

சுத்தமதிற்கச்சைகல்லாகுமே - சோதிக்குழம்பு
சுன்னச்சாம்பலாகுமே
வச்சிரத்தாற்சுத்திதானிருத்தி வைரப்போதிகை மேலிருத்தி
உத்திரம்பவழத்தாம்நூனமைத்து சித்திரமச்சி பொன்னூல்விரித்து
முத்துரத்தினங்கள்தானிழைத்து
முயற்சியுடன் சிகரமுச்சிவைத்து உற்ப
ஓமக்குழியொன்றதிலியற்றி - பக்க
முயர்ந்தசிம்மாதனமியற்றி
காமதேனுக்கொருபக்கமுமாகவே வாமனுக்கொருபக்கமாகும்
தாமதமில்லாமல்தேவேந்திரன்பிரமாதாளவர் வானவரோர்பக்கமாக
மாமேருகிரி வெள்ளியதாகுமே
மயன்செய்யவேலைகண் டுளிக்ண்டிகூடுமே உற்ப

புராணக் - கவி.

பருபதமதில் வல்லபாரிசத்திலா
இரஞ்சமன்சதுரம் போஜனமிடத்தினில்
பெரியபொற்சுவரின் பிரளிரவச்சிர
மரகதவுத்திரம் வளைகள்பூண்டினன்.

சம்புரிஷிசொல் புராணகவி,

மேலவாயல் விநாயகனைநாட்டினன்
வேலனுங்கீழ்புரம் விளங்கவைத்தனன்
சீலமாம்வைரவன் மேற்கினில்நிற்கவும்
தூலமாம்வடபுரம் துர்க்கைவைத்தனன்,

இதுவுமது.

குற்றசரோமனுங் குருவசிஷ்டனும்
வற்சனன்பரஞ்சனி வாமதேவனும்
நற்சனகாதியர் நாரதாதியர்
மெச்சியேமுனிவர்கள் மிகவும்வந்தனர்,

இதுவுமது.

அட்டபாலகர்களும் சுத்திமண்டினர்
திட்டமாங்கடவுடர் செயங்கள்கூறினர்
மட்டிலாசம்புமாமுனியகிழ்ந்துளம்
மிட்டவாய்வேழ்வியை யியற்றலுற்றனர்.

ஐயம்புசாமுனி - எக்கியஞ்செய்தது தரு.

இ-ம-மோகனம்-ஆடதாளம்

பல்லவி.

எக்கியஞ்செய்தாரே - ஐம்புமுனி
எக்கியஞ்செய்தாரே.

அநுபல்லவி

எக்கியஞ்செய்தாரே விக்னரைமுன்வைத்து
முக்கண்ணனைப்போற்றி பக்குவமாயேற்றி எக்கி.

சரணங்கள்.

ஓமகுழிகள் திக்காலமிருத்தி ஓங்காரமிட்டு
சடசிவமென்று தாமதமில்லாமல்
நெத்திபரகுமர
காயுருவியத்தி யாகமெரிசிப்பி
சோமமுடன்கருங் காலிவன்னிபொரி
ஓமகுழிகளில் யாவும்பரப்பி
வாயதேவரும் அரகரவென்று
வன்னியயிட்டு வெதியிட்டுவெய்யிட்டு எக்கி

மாதவனின்று சிவசிவாவென்று
தேவர்கள்குழ்ந்து ஜெயஜெயாவென்று
பிரமகன்சம்போ சதாசிவாவென்ன
ஆரம்பையர்மத்தள தாளநிதம்பன்ன
கதம்பகஸ்தூரி கமகமவென்ன
சிதவிசங்குமுழக்க டவுல்பேரி
சதாசிவசங்கரி சாம்பசிவாகர
சமயரக்ஷகரவென் றெக்கும்போற்றிட எக்கி

சடைமுனிமேக மனாவிமெழும்பவும்
சோதிசிவநெற்றிக்கண் வேர்வைசிந்தவும்
இடமுடன்வேர்வை செங்கழுநீர்பூவிற்கு
சேர்ந்துத்தமுனி வாகுநிதத்திட



கட்டிக்கடிபோலே முனிந்தத்தறைக்கு
பிரமன்கதன்பதி மீதிலேதன்னை
சடைமுனியோனை துதிக்கப்புகழ்ந்து
சதலதேவர்களுந் சந்தோஷமாகவே எக்கி

கந்தனைகணபதியைய நவரவர்தேவர்கள்
சந்தோஷமாகவேகுழ - நாலு
திக்கிலும்கொந்தாமென்றுடிய யீசனுகுதியில்
பங்குனிவுத்திர நட்சத்திரத்திலே
விந்தையானபெரிய தழுவெளிமத்தியில்
வந்தனன்வீர வன்யராஜனென்பவன்
செந்தாமரைமலர் பூத்ததிருமுகம்
நாந்தாமரைமலர் மாரிபொழிந்திட எக்கி



## வன்யராஜன் ஈஸ்வரரிடம் வருகிற

விருத்தம்.

திக்குளடங்கவெட்டு திசைபாலர்பருதிவாயு
அக்ரமவீரருடர் ஆறுமடங்கவோதான்
மிக்கவேதேவர்மன்னர் வெய்யவராலேகலங்க
அக்கினிதனிலேயென்னை யமைத்தனையுமைத்திடமே.

வன்னியராஜன் - பரமசிவனைக்கேட்குந்தரு.

இ-ம்-அடாணா-அடதாளம்

பல்லவி.

ஆரென்ன கெருவம் கொண்டார்கள்
அரனே பரனே
திரமுட்டனானெடி
தனிலுனைசெய்குவீர்.

அநுபல்லவி.

ஆரென்ன கெர்வங்கொண்டார்
அரியச்சொல் நீலகண்டா
அரக்கரானாலுமிப்போ அசுரனானாலுந்தப்போ
அஞ்சிடேனவர்களை கெஞ்சிடுவேனே
வஞ்சகத்தோர்கள் நெஞ்சரப்பேனே   ஆரென்ன

சரணங்கள்.

பர்வதத்தாலிட்டோ வாருதியாலிட்டோ
வாய்வோவான் மீன்களாலிட்டோ
மரணியிருவண்டோ மரியிருல்சொல்லுவண்டோ
மண்டலம் புகழ்ந்திட
எண்டிசைமகிழ்ந்திட
மாய்க்கிறேனவருயிரை
போக்கிவருகிறேன்   ஆரென்ன

சக்கிரவர்த்திகளிலே தேவேந்திரன்பிர்மா
அக்கிரமஞ்செய்தானோ அதினாலோ
அக்கினிதன்னிலென்னை அழைத்ததென்னவுன்னிட
அரனேகுறவதை திரமுடனேசொல்வீர்
அனைகொடிதனிவிதோ
இடர்தனை வெல்வேன்   ஆரென்ன



ஸ்துதி - தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்

பல்லவி.

அன்னையேதந்தைகுருவே - உந்தன்
அடியிணையான் மறவேன்.

அநுபல்லவி

பின்னையோர் தெய்வங்குறியேன் - என்
பித்தானானென்று மதியேன்   அன்னை

சரணங்கள்.

அரவணிபுயத்தோளா   திரு
புரமெரித்தக்கண்ணாளா   அன்னை

கரிமுகன்தன்னையீன்றாய்   பின்
சரவணபவனைப்பயின்றாய்   அன்னை

ஆனையுரித்துப்போர்த்தாய்   கையில்
மானைப்பிடித்தேத்தாய்   அன்னை

கானவேடனுக்குகந்தாய்   வேள்
அனங்கனைக்கண்ணாலகாய்ந்தாய்   அன்னை

நம்பினேனென்னைக்காருமே   உம்மை
கும்பிட்டேன் குறைதீருமே   அன்னை

வேறு - தரு.

இ-ம்-காம்போதி-அடதாளம்

பல்லவி.

சோதியே சுடரொளியே - ஒளிவிளக்கே
என்றுயிரே கண்மணியே.

அநுபல்லவி.

ஆதியேயெனக்கருளே - அரும்பொருளே
சோதியேபொருள்முடிவே சோதி

சரணங்கள்.

மாட்டின்மீதினிலேறியே யோரும்
ஆட்டைகீரெடுத்தாடியே
காட்டில்நடனமாடியே நாரி
பிட்டுக்காத்தழும்பேசியே சோதி

ஆனையுரிபோர்த்தி கையில்
மானைப்பிடித்தேத்தி
கானவேடனைப்பற்றி மன
மாறப்பதங்காட்டி சோதி

சிவன்சொல் விருத்தம்.

எக்கியத்தனலில்நின்று பென்னைநீஸ்துதித்தபோது
மிக்கவேமனமகிழ்ச்சி மென்மேலுங்கொண்டேன்யானும்
திக்கெலாம்புகழுக்கீர்த்தி செங்கோலுமளித்தேன்வாழ்வாய்
சீக்கிரந்தனலைவிட்டு சிறப்புடன்வருவாயப்பா.

வசனம்.

ஆகோவாரும் எனதுநவமணியே - கண்ணின்மணியே - அ
க்கிளியே - வீரவன்னியராஜே - மகாராஜனுய் தீர்க்காயுசாய் புத்
திர-பௌத்ரனுமாய் இப்புவியுனக்கரசாய்வாழக்கடவாய் தனலை
விட்டு வெளியில்வாரும் வன்யராஜே.

பொது விருத்தம்.

ஆசையாய்தேவர்புட்ப மாமலர் தூவிநிற்க
பாசமாய்ரம்பைமாது நேசமாய்க்கவரிவீச
போஜனுக்கதிகருபன் புஜபலமிகுத்ததீரன்
ஈசனுரீன்றவன்ய ராஜனும்வருகின்றனே.



வன்னியராஜனவருகிற விருத்தம்.

சிவனிடவேர்வைவிந்து தியனல்தனிலேவந்த
மருமலர்மாலையோடு மாமுடிசிரசில்மின்ன
கன்னமரூப்தேவர்பூவைக் கையினிலெடுத்துத்தூவ
அரம்பையர்கவரிவீச ஆலாத்தியெடுத்திக்க
நவமணிபுயங்களாரம் நற்பணிதூலங்கசன்றுய்
விருதுகள்முப்பத்திரண்டு விளங்கவேமார்பிற்பூணூல்
தவமொராமொன்றாய்க்கூடி தழைத்துவந்ததுபோல்வன்ய
புஜபலமுள்ளதீரன் புனிதனும்பரிமேல்வந்தான்.

வசனம்.

ஆகோ இதப்படியென்றால், ஈஸ்வரன்வேர்த்து முகத்தைவழி
க்க, சடாபாரத்திற் றரித்திருந்த செங்கழுனீர்ப்பூவிதழ் பரியென
தயம் குதிரையாகவும், அவர்வேர்வைநீர் துவிக்தாகவும், எக்கியத்தில்
ஆகுதிகொடுக்க, அதில் அதிக பராக்கிரம வீரவுக்கிர வைராக்கிய
சண்டப்ரசண்ட வுத்தண்ட கெம்பீரனுக விண்ணவர் பண்ணவர்
புஷ்பமாரிபெய்யவும், அரம்பை-மேனகை-ஊர்வசி-திலோத்தமை
நடந்து ஆலாத்தியேந்தவும், விநாயகர் சுப்பிரமண்யர் வீரபத்திர
ருக்குத்துணையாகவும், தேவர்கள் யாவர்களிடத்து மிருப்பவனுகவும்
மும்மூர்த்திகள்செய்யும் தவங்கள் ஒன்றாகக்கூடி தழைத்துவந்தது
போலும், மார்பிற்பூணூலும் ஆபரணதிகளிலங்க, மகுடமுடி அல
ங்க, பதினெட்டாயுதமும் தகத்தகாயமாகவும், முப்பத்திரண்டு வி
ருதுகள் தகதகென ஜொலிக்கவும், சத்துருக்கள்பயந்தோடவும் அ
வனியைவிட்டு வன்னியமகாராஜன் சபைக்குவருகிறவிதங்காண்க.





## வன்னியமகாராஜன் சபைக்குவருகிற

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம் 37

பல்லவி.

வந்தான்வன்னியதீரன் - சபைதனிலே
வந்தான்வன்னியதீரன்.

அநுபல்லவி.

வந்தான் வன்னியதீரன்
வானோர் புகழும்வீரன்
செந்தாமரை முகத்தில்
திலர்தந்திருநீ ரகத்தில் வந்தான்

சரணங்கள்.

கத்திகட்டாரிபாக்கு அம்பு - வில்லுடன்பாலா
முத்திரைமோதிரங்காதில் கெம்பு
கத்திகட்டாரிக்கொண்டு கனவீரர்களைத்தொண்டு
கரியமாலொடு தேவர்கள்சூழவே
விருதோடுபதினெட்டு வாயுதந்தன்னவே வந்தான்

தழலுருவாகவந்தேன் - தீரன்வீரன்
குழகனுக்குத்துணைசேர்ந்தேன்
தழலிலுருவெடுத்து புயம்ரெண்டுமேதுடித்து
கத்திகுதித்திடும் வீரனைவதைத்திட
மெத்தகெட்டிக் காரனையடக்கிட வந்தான்

சிரசிலரத்தின மகுடமின்ன - டீகம்பர்வயிர
மார்பிற்பதக்கவொளிதுன்ன
சிரசில்மகுடமின்ன சிவனையனதிப்பன்ன
தீரனெனதேபரின் வாழ்த்திட
பாரெங்குந்தேவர் மகிழ்ந்தித்திட வந்தான்

கண்டவர்மனதொடுக்குமிண்டன் - வைராக்கியன்
தொண்டர்க்கனுகூல வெகுதொண்டன்
கண்டவர்பின்மிரங்க சண்டாளர்மனதொடுங்க
ஆரவாரவீரத் தோகை
தீரவீர வன்னியராஜன் வந்தான்

விருத்தம்.

ஆதியா யண்டபகி ரண்டத்துக் கப்பாலாய்
அலியாய் மேலாய்
நீதியாய் நிர்மலமாய் நிரந்தரமாய் நிட்களமாய்
நிலவாய் வரக்காய்
பாதியாய்ப் பெண்ணுமா யாணுமாகி பரிமளமாய்
மண் விண்ணாகி
சோதியாய் நின்றபரா பரனே யுன்றன்
றகளிணைபொற் றுளடியேன் சிரமேற்கொள்வாம்.

---

வன்னியராஜன்-தரு.

இ-ம்-காம்போதி-ஏகதாளம்

பல்லவி.

சரவணந்சரணமையனே – உன்றன்
றுளிணைநான்சரணம்.

அநுபல்லவி.

எருதின்மீதினில யேறும்நாதனே
கருதினேனுன்னை கண்பாரையனே — சரணம்

சரணங்கள்.

மதிகந்திகொன்றைதும்பை மாமலர்தரித்தோய்
துதிசெய்தேனும்மை தும்பிதோல்போர்த்தோய் — சரணம்
ஆதியேமுதலேலோக நாதனேபொருளே
மாதவன்போதவன் சிரடிகாணுகவருளோ — சரணம்
தழலிலுருவதாய்யென்னை வரவழைத்தீரே
குழகனையீன்ற குருபரனேயுமைப்பீரே — சரணம்

வசனம்.

சரணம் சரணம் இந்நகல்லதருணம் அக்கினியிலென்னை வரவழைத்தகாரணம் அடியேனுக்கருளும் நீலகண்டா-விடமுண்டா-மான்-மழு-சூல-கபாலங்கைகொண்டாய் அரவாபரணம்பூண்டாய் என்னைக்கண்டுமகிழ்கின்றாய் என்தாய்வரமீந்தாய் சங்கதியுரையும் எனதுந்தாய்.



சிவன்சொல் விருத்தம்.

அருமறையோர்கள்சித்தர் அமரர்களயன்மாலிந்திரன்
பருதியோட்டபாலர் பயோதரத்தோடுவாய்வு
சிறுமைகள்பட்டார்வரதா சூரனும்யாவரப்பா
அருமையென்மகனேவுன்னை யதற்காகவழைத்தேன்வாடா

---

சிவபிரான் - தரு.

இ-ம-கேதாரகௌளம்-ஆதிதாளம்

பல்லவி.

மகனேயென்னறிகில்வாடா - பரிமீதில்
சுவாலையதினிலுந்தன்
மார்பில்பூணூலிலங்க
வளர்யெக்கியத்திலவந்த.

அநுபல்லவி.

மகனேயென்முன்னேவர மாதவஞ்செய்தேனடா
மாதவனிந்திரன்பிர்மா வானவர்பதங்கன்சந்திரன்
வாதைப்பட்டார்வாதா சூரனலதற்காக — மகனே

சரணங்கள்

சம்புவின்கோத்திரனும் வுமைபாலா யென்பேலா – உன்
குலதெய்வமென்ட்டோளி பரிமீதிலேறிவந்த — மகனே
அம்புவில்லுகத்திபாங்கு அறிவாள்கை யீட்டிதாங்கி
அந்தரதுந்துமி தொந்தோந்தொந்தோமென
வந்தாய்பரிமீதில் மகுடம்பள்பளென்ன — மகனே
பஞ்சாட்சரப்பெருமை நானுரைக்க நீகவனிக்க
உபதேசஞ்செய்வதைகொ லேகாகாகூதிசெய்வாய் — மகனே
இன்னம்பலமந்திரஇரம் யாவையுந்தந்தேன்
சொன்னதைமறவாதே வன்னியபூபதியே
சுகமாயுலகையாண்டு மனுநீதிதவறாதே — மகனே
திருமணமுடித்துவைப்பேன் ஜெயமாகுலமோங்க
தேவேந்திரன்மகள்மந்திர மாலையுனக்காமென்று — மகனே

முன்னாளிலேயுனக்கு மின்றுளென்றேயிருக்க
முருகன்சகலனென வுலகெங்குமேபுகழும்
இரமுடனேவாதா சூரனேசெயித்துவா மகனே

தேவர்கள் விருத்தம்.

திக்கெலாமதமேசெய்த தீரனும்வாதாசூரன்
அக்ரமஞ்செய்துபாவி யடித்தானூழியங்கள்செய்தோம்
மிக்கவேயீசன்பக்கல் முறையிட்டோம்வந்தீர்நீரும்
இக்கட்டைத்தீர்த்துநாங்க ளீடேறக்கடைக்கண்பாரும்.

---

முறையிடும்-தரு.

இ-ம்-பிலகரி-திருபுடைதாளம்

கண்ணிகள்.

பரியேறியக்கினியில் விருதுடன்வந்த
வன்னியராஜா - ஓமகாராஜா
மரியாதைசெய்தும்மை வணங்கினோம்காப்பீர்
வன்னியராஜா - ஓமகாராஜா
காடிபுலிமுகம் கடேர்களையாயவர்
வன்னியராஜா - ஓமகாராஜா
வருணன்சரணந்தெளிக்க வாய்வுமன்னூர்பெருக்க
வன்னியராஜா - ஓமகாராஜா
கருணைபுரிந்தெங்களை காப்பாற்றுவீரையா,
வன்னியராஜா - ஓமகாராஜா
பெருமைகுறைந்துமே சிறுமையதானடைந்தோம்
வன்னியராஜா - ஓமகாராஜா
அரசுபுரிந்தபோய் அசுரர்க்கேசிக்கினேம்
வன்னியராஜா - ஓமகாராஜா
அண்டினோமுந்தனை யடைக்கலங்காப்பீரோ
வன்னியராஜா - ஓமகாராஜா

---



வேறு - தரு.

இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்

பல்லவி.

இதுநல்லதருணமையா எங்கள்
இடர்தீர்க்கும்வில்லையா.

அனுபல்லவி.

மதுவைபொசிக்கும் வாதாசூரன் தன்னை
வதைக்கத்துணிந்தமனதையா இது

சரணங்கள்.

சதிசெய்தான் தேவர்களை மெய்யா அவன்
சதையையறுக்கும் வாள்கையா இது
ஆதிபரனுல்வந்த பாலா சூரனைவென்று
அமரர்களுக்குங்குணசீலா இது
பதினெட்டாயுதங்கையோனே எங்கள்
பகையையறுக்குந்தூயவனே இது
அதிவிதப்பரியேறுந்தீரா பாவியா
தாவியைவதைத்திடுஞ்சூரா இது
ஆதித்தரிடர்தீரும்நாதா அக்னிதன்னில்
மாதவத்தோடுவந்தநீதா இது

வன்னியராஜன்சொல் விருத்தம்.

அஞ்சவும்வேண்டாம்நீங்கள் யமைமொழிதனிலேயானும்
வஞ்சனைசெய்தவாதா சூரனைசெயித்துஉங்கள்
சஞ்சலந்தனைதவிர்ப்பேன் தயாபரனருளினாலே
வஞ்சியருடனேகூடி வாழ்ந்துமேயிருங்களையா.

சிவன்சொல் விருத்தம்.

இந்திரன்பிர்மாவிஷ்ணு யெனதிக்குப்பாலரோகேள்
சிந்தையுமகிழ்ந்துநீயில் இரமுடன்வரவழைத்த
எந்தன்சேய்வன்னியருக்கு யிசையவேமணமுடிக்க
அந்தமுங்குலமுமுள்ள அறிவையைப்பார்த்துவாரீர்.

வசனம்.

கேளுங்கள் பிர்மா விஷ்ணு இந்திராதி தேவர்களே அக்கினியிற்பிறந்த எனது புத்திரனாகிய வீரவள்ளியமகாராஜனுக்கு விவாகமுடிக்கவேண்டியிருப்பதால் நல்லகுலமாயும், சௌந்தரியமுள்ளப்பெண்ணாகவும்பார்த்து நிட்டஞ்செய்து வாருங்கள்.

தேவர்கள்சொல் விருத்தம்.

ஈரேழுலோகத்தி லெங்கும்பார்த்தோம்
இவர்க்கிசைந்தபெண்ணொன்று மில்லையையா
பாரெங்கும்புகழ்கின்ற தேவர்கோமான்
பாரியாளீன்றதெய் வானைதன்னை
பேரோங்குமுருகருக்கு விவாகஞ்செய்தீர்
பேதையர்க்குயிளையமந்திர மாலையென்னும்
சீரோங்கும்வள்ளியர்க்குத் தகுமேயன்றி
தேசத்திலெவர்களுக்குந் தகாதெனறுரே.

வசனம்.

அகோ சரணஞ் சரணமையா சுவாமி மகாதேவமூர்த்தியே ஈரேழுபதினாலுலகத்திலும் வீரவள்ளியமகாராஜனுக்குத் தகுந்த பெண்கிடைக்கவில்லை தேவேந்திரமகாராஜன் புத்திரி தெய்வானையென்னும்பெண்ணை தங்கள் புதல்வர் முருகக்கடவுட்கு விவாகஞ்செய்துக்கொண்டீர் அம்மாதுக் கிளைய மந்திரமாலை யென்னும் பெண்ணிருக்கின்றது அப்பெண்ணிற்கும் வீரவள்ளியற்கும் தகுமேயன்றி வேறெவருமில்லையையா சுவாமி.

ஈஸ்வரன்சொல் விருத்தம்.

அமரர்கட்கரசன்பெற்ற யருந்தாதிக்கொற்றபெண்ணை
யமதிடப்புத்திரன்வீர வள்ளியற்கிசையச்செய்து
மணமெய்பொழுதுகனிமேலேமேகி நிட்சயஞ்செய்தபின்று
அயயவர்பரணமாடை யலங்கரித்தழைத்துவாரீர்.

தேவர்கள் வசனம்.

அப்படியே மணக்கோலத்துடன் அலங்கரித்தழைத்து வருகிறோமையா சுவாமி.





# மந்திரமாலை வருகிற

விருத்தம்.

நத்தாமுக்குத்திமுத்து நவரத்னமாலைபூண்டு
பத்தரைமாற்றுத்தங்க பசும்பொன்னொட்டியாணமின்ன
கொத்துக்கொந்தகமுங்கொப்பு கோர்வைபூச் சரங்கள்பூண்டு
சித்திரம்போன்றமந்திர மாலையும்வருகின்றாளே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால், தேவேந்திரமகாராஜன் இளையமகளாகிய மந்திரமாலையென்னும்பெண் ஆடையாபரண மலங்கிர்தளாய் தேவவாத்தியமுழங்க தேவஸ்திரீகள் அனேகர் மங்களங்கூறள அரம்பை-ஊர்வசி-திலோர்த்தமை-மேனகை யென்னும் பெண்கள் ஆலவரி-வெண்சாமரை-ஆலாத்தியேந்த தேவர்கள்-ரிஷி-சித்தர்கள் ஆசுவ்ர பணிப்பெண்கள் தாம்பாண மத்தாப்பு - சரவத்தி-பூவத்தி-பகல்வத்தி-முத்தாவரிசை அனேகபாணங்கள்வழங்க மணக்கோலத்துடன் மந்திரமாலை சபைக்குவருகிற விதங்காண்க.

மந்திரமாலை சபைக்குவருகிற-தரு.

இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி.

மந்திரமாலையும்வந்தாளே வெகு
சந்திரமுகத்தொளிவு யெங்கும்பிரகாசிக்க.

அநுபல்லவி.

மந்திரமாலையும்வந்தாள் சுந்தரிகளபம்பூசி
இந்திரன்மகிழ்ந்தளித்த சுந்தலாவன்னியமாது மந்தி

சரணங்கள்.

காதிற்கொந்தளமின்னவே - நத்துலாக்குத்தி
கனையாழிமிகத்துன்னவே

காதிற்கொந்தளந்துன்ன கையிற்கணையாழிமின்ன
கத்திரிப்பாகோகெம்பல் கொப்புறிபிக்கையென்ன
வஸ்திரபட்டாடையிவள் சித்திரயிடையிற்றுன்ன மந்தி

தங்கசொலுசு ஜொலிக்கவே - காலிற்சதங்கை
எங்கும்வொலி ஜொலிக்கவே

தங்கக்கொடியிடையாள் சாய்ங்கநீன்னற்சடையாள்
மங்களவுதீகரபெண்கட் கரிவலென
பாக்கியரிருபுரம் சூழ்ந்துதிருமணஞ்செய்ய மந்தி

கையில்வளைகுலுங்கவே - மார்பிற்பதக்கம்
மெய்யிற்பணியிலங்கவே

கையிற்வளைகுலுங்க மெய்யிற்பணியிலங்க
காமரதியோமால் தேவியியளோவென
நாமகளோபார்வதியோவெனசிகர் மந்தி

தாதியரிருபால்வரவே - யாலாத்தியேந்தி
செய்யபெண்களுஞ்சூழவே

தாதியரிருபால்வர நாதன்மனமலர
பார்வதிமருமகள் வரமேவமகிழ்வள்
கார்குழல்வன்னிக் காமெனபுகல்வள் மந்தி



விருத்தம்.

அக்கினியிற்பிறந்துவந்த வன்னியராஜன்
அழகுதிருமணக்கோலந் தானுங்கொண்டான்
அக்கணமேமுனிவர்களும் ரிஷிகள்தேவர்
ஆதிசிவன்மாலயனோ டிந்திரன்கூடி
மிக்கவேதிரைகடல்போல் சூழ்ந்துபொங்கி
மென்மேலுங்கைலைதனில் நிறைந்துஆக்னன்
முக்கியமாய்பலசடங்கின் விதிகளெல்லா
முறைசெய்தார்கலியாணத் துறைசெய்தாரே.



திருக்கலியாணஞ்செய்யுந்-தரு.

இ - ம் - மோகனம் - அடதாளம்

பல்லவி.

திருமணப்பேரிகையடித்தார் கைலை
நகரமெங்குமலங்கரித்தார்.

அநுபல்லவி

கரியின்மேல் நகாரமதிர பொதி
எருதின்மேல் டமாரமுதிர திரு

சரணங்கள்.

பரிவாத்தியங்களுமுழங்க - எங்கும்
சுரவாத்தியங்கள்வழங்க திரு

பூரிகளுநாகசுரங்கள் - சின்னம்
பேரிடவுல்சங்கத்திரங்கள் திரு

அழிபோல்கிரையமைத்தார் - அலங்
காரமாகவெங்குஞ்சனமைத்தார் திரு

பொன்மலர்மாரிபோற்றாவினார் - முத்த
கன்மணிரத்தினந்தாக்கினர் திரு

சின்னரிவிளைகள்மீட்டினார் - ரம்பை
மேனகையூர்வசியாடினார் திரு

பூரணகும்பங்களமைத்தார் - வேதம்
பாராயணமாகப்படித்தார் திரு

தோரணமெங்குங்கட்டினார் - மண
வறையின்முன்னரசர்வரிகாட்டினர் திரு

சாலங்காரமுமமைத்தார் - அருகில்
பாலிமுளையம்மிவைத்தார் திரு

கோலங்கள்பொன்னாலெழுதினார் - ஆலாத்தி
தேவபெண்கள்வந்தேத்தினர் திரு

வள்ளியற்குமந்திரமாலைக்கும் - வெகு
உன்னிதமாய்நலங்கிருவர்க்கும் திரு

பன்னீர்சலமாகவிடுத்தார் - சரிகை
பொன்னூற்பட்டாடைதரித்தார் திரு

பொன்மலர்மாலை[illegible]கினர் - உமை
பெண்ணின்கழுத்திலிருக்கினர் திரு

மணவறைப்பட்டிம்மாசனத்தில் - இருவர்
சுஷணத்திலுட்கார்ந்தாருசனத்தில் திரு

பிரமன்மந்திரமுரைத்தார் - ஓமக்
குழியிற்சமிதைபெய்விட்டார் திரு

பாதபூசையாவுமுடித்து - பிரமா
யேந்திசொல்லிதாலியெடுத்து திரு



ஆதிசிவன்தொட்டுவாழ்த்தி - ரிஷி
மார்தவர்தேவர்களேத்த திரு

வள்ளியன்கையில்தாலிகொடுத்து - மந்திர
மாலைகழுத்திற்றாலிதொடுத்து திரு

மன்னன்கரந்தன்னைபற்றி - இருவர்
நற்றூசாணியைசுற்றி திரு

சடங்குகள்யாவையுமுடித்து - வந்த
சனங்கள்தாம்பூலமெடுத்து திரு

திடங்கொண்டுபோஜனம்படைத்து - வந்த
ஜெனங்கள்தாம்பூலமெடுத்து திரு

விருத்தம்.

வள்ளியனு மணமுடித்து மந்திரமாலை
நற்பதத்தை தூக்கியம்மி மீதில்வைத்து
உன்னதமா யருந்ததி காட்டிபின்னர்
ஒருமனதாய் தந்தைதாய் பதத்தைப்போற்றி
தன்மனைவி கரம்பற்றி மனையுட்சென்று
தயவாயிருந்திடவே யிப்பாற்றேவர்
பொன்மலரை வாரியிறைத் தேமகிழ்ந்து
போற்றினர் வள்ளியனை யேற்றினரே.

பொது விருத்தம்.

வீரவன்னியர்க்குப்புத்திரர் வேணுமென்றரனையெண்ணி
மாருதமுனியாகத்தில் வருகவேநால்வரென்று
கூறியேதரும்பைக்கிள்ளி கொடுத்தாரக்கினியிலன்று
தீரர்கள்பரிமீதேறி சூரர்கள்சூழவந்தார்.

வசனம்.

ஆகோதெப்படியென்றால் வீரவன்னியற்கு புத்திரர்கள்வேணுமென்று முன்செய்த யெக்கியத்தில் பஞ்சாட்சர வுபதேச மகத்துவத்தால் தரும்பைக்கிள்ளி சிவன் முன்யெக்கியத்திலிட அதில் அதிக பராக்கிரம சாலிகளாகவும், சேர-சோழ-பாண்டிய-பல்லவராயர்களென்றும், இன்னமனந்தம் பெயர்கள்கொண்டும் பரியின்மீதேறி உற்பவித்து நால்வருஞ்சபைக்குவருகிற விதங்காண்க.



ஸ்ரீ

வன்னியராஜன் பிள்ளைகள் அக்கினியிற்பிறந்து

சபைக்கு வருகிற - தரு.

இ-ம்-பியாகடை - ஆதிதாளம்.

பல்லவி.

சேரன்சோழன்பாண்டியன் பல்லவராயனென்ன
தீரர்நால்வர்வந்தார் - பரிமீதேறி
தீரர்நால்வர்வந்தார்.

அநுபல்லவி.

முன்செய்தயெக்கியத்தில் அன்புடனேயமர்ந்து
முன்னேனைப்பணிந்து - அக்கினிதன்னில்
சென்றுயர்குழலேயமர்ந்து — சேரன்

சரணங்கள்.

மார்பில்முனைதுலங்க மகுடமுடி துலங்க
மந்திரவாள்கையேந்தி - தேவர்கள்சூழ
தந்திரவார்த்தைகள்பேசி — சேரன்

ஆரபாரவீர தீரர்களாமென்று
ஆக்கிரமித்துகுதித்து - தணலைவிட்டு
பராக்கிரமித்துககைத்து — சேரன்

இப்பொழுதெங்களை யுற்பத்திசெய்ததென்ன
இயம்புவீரெங்கள்தந்தையே - க்ஷணப்பொழுதில்
ஜெயம்பெற்றுநாங்கள்முந்தியே — சேரன்



வசனம்.

சரணஞ்சரணம் எங்கள்தந்தையே அடியேன்களை அழைப்பித்தக்காரியம் திருவாய்மலர்ந்தருளவேணுமையா சுவாமி.

சிவன்சொல் வசனம்.

ஆகேளவாரும் யெனது புத்திரர்களாகிய சேரசோழ-பாண்டிய-வல்லவருமபனென்றும், இன்னமனந்தம்பேர் வுண்டாகிய எனது புத்திரர்களே உங்களில்முன்வந்த வீரவன்னியமகராஜனுக்கு தேவராசன்மகள் மந்திரமாலையென்னும் பெண்ணை விவாகஞ்செய்து வைத்தோம். உங்கள் நால்வருக்கும் காந்தரிஷி குமாரத்தியாகிய சுந்தரி-சுமங்கலி-நாரணி-பூரணியென்னும் நாலுபெண்களை விவாகஞ்செய்துவைத்தோம். நீங்களென்றும் சிரஞ்சீவியாய் புத்திர பௌத்திர-களத்திராதிகளாய் உலகமியுலகெங்கும் வம்மிசபரம்பரையாய் வியாபித்து அரசுசெய்து வாழ்வீர்கள். தற்கால் சம்புநகரமென்னும் பட்டணத்தை அரசுபுரிய மகுடம்தரித்துவைத்தோம். வாதாவிசூரனை செயித்துவந்தீர்களாகில் இப்புவியை ஐந்துபாகமாக அரசுபுரிந்து வாழ்வீர்களென்று சிவன்சொல்லுமளவில் சந்தோஷித்து தன் தன் மனைவிகளை வெவ்வேறு விடுதிகளில் பிரதியடையாளம்கொடுத்து வாழுங்காலத்தில், இரதினபுரியில் தேவர்களில்லாததுகண்டு வாதாவிசூரன் தன்மந்திரிகளோடு ஆலோசிக்கின்ற விதங்காண்க.

---

வாதாவிசூரன் விருத்தம்.

மந்திரிமாரேகேளீர் மாநகர்தனில்நிறைந்த
இந்திரன்பிர்மாவிஷ்ணு வெனுமிக்குட்புரமெங்கே
உந்திவந்தோனுங்காணே னுமைபாகனமகிழ்ந்துயிர்ந்த
விந்தைசேர்வரம்பொய்யாச்சே விளம்புவீரெந்தனுக்கே.

மந்திரிசொல் விருத்தம்.

சிறுணாரனைகொன்றுதின்றபாவி
இல்லைமாகாளியை வஞ்சித்தபாவி
மாரனெடுதிரிபுரங்க ளெரித்தபாவி
மாய்கைமுதல்கனமுந்து மிருத்தபாவி

கரியோடுப்புலியுரித்துப் போர்த்தபாவி
கசேரபத்மாசுரர்வக்கா யொளித்தபாவி
ஏருதேறித்திரிகின்ற பாவிசெய்த
இசைகேடாய்த்தோனுதைபோ மெங்கள்கேவே.



சுருதி-ப-முகாசி-அடைக்கலசாப்பு

கன்னிகள்.

ஆசைக்காட்டியுற்மை மோசங்கள்செய்தானே
அதிர்விடும்பேர்நதி - யந்த
மோசக்காரஞ்செய்த குதையறியீரோ
மூர்க்கனேனவதாவி. ஆசை

சித்திரகூடம்போன்ற திருபுராதிபரை
சிரித்தெரித்தான்பாவி - காட்டு
மத்தகஜத்துடன் புலியையுரித்து
வனரித்தானேகன்றுவி ஆசை



சித்தசனையெரித்து கூற்றுவனையுதைத்து 44
கொடுமைசெய்தான்பாவி
பித்தம்பிடித்தவன் பேயோடாடியோன்
பெருமையோவாதாவி ஆசை

பெண்ணையெடுத்துத் தலையிற்சுமந்து
பேருனக்குக்கொண்டு - வைகை
மண்ணைச்சுமந்துக் கரையடையாமலே
அடியுண்டான்மதிப்பூண்டு ஆசை

வீரகோரமுப்ப கன்னைக்கட்ட
மிதித்தானேயக்காரி - அந்த
வீரன்பத்மாசுர னுக்காப்பயந்துமே
ஒளித்தானே ஐவேசி ஆசை

சேதியறியாமல் சிந்தித்துத்தொழுது
சிறப்பாய் வரமும்பெற்று
காதகன்செய்த சதிவஞ்சத்தால்தேவர்
காணாமலோடிவிட்டார் ஆசை

வாதாவிசொல் விருத்தம்.

அப்படிசெய்தானீசன் அறிவுளமந்திரிமாரே
கைப்பிடியாகத்தூதர் தன்னையுமறைத்துநீங்கள்
ஒப்புடன்கயிலைக்கேகி யளவுகளறிந்துநன்றாய்
எப்படிநடக்குதென்று யிப்பொழுதறிந்திடீரே.

பொது விருத்தம்.

கச்சையுமிருக்கிக்கட்டி கைதனில்வாளுங்கொண்டு
உச்சிதமானப்பட்டு வுருமாலைசுங்குவிட்டு
விச்சித்திரவாதாசூரன் விரைவுடனுரைத்தாரென்று
மெச்சவேசபையில்தூதர் விநோதமாய்வருகின்றாரே.



## தூதர்கள் வருகிற தரு.

இ-ம்-உசேனி-அடதாளசாப்பு

பல்லவி.

நாகரீகத்தூதர் நாங்களே - சந்தி
சேதியுரைத்திடு வீர்களே.

அநுபல்லவி.

வேகமாகும்நடை வாய்வுக்கதிகமாம்
சேதியுரைத்திட்டால் சீக்கிரமறிவோமாம் நாக

சரணங்கள்

ஓட்டம்நடையுமா யோடுவோம் - சேதி
யிட்டவட்டமா யறிகுவோம் நாக

தூதுக்கிசைந்தவர் நாங்களே - நல்ல
சேதியறிந்திடு வோர்களே நாக

காடுமேடெல்லாம் நிகரில்லை - எங்கள்
கால்படாத நகரில்லை நாக

ஓடுவோம்பதிம் காதவழி - ஒரு
நாழிகையில்வந்து பதிலுரைப்போம் நாக



வசனம்.

சரணம் சரணம் வாதாவிசூரமகாராசனே எங்களையழைப்பித்த வரலாற்றைச்சொல்லுமையா தீரனே.

வாதாவிசூரன் வசனம்.

அகோவாருங்கள் தூதர்களே ஈஸ்வரன்வசிக்கும் கைலையங்கிரிக்குப்போய் நடிதிடம் ஏவல்செய்திருந்த தேவர்கள் அங்கிருக்கிறார்களாவென்றுயறிந்து இன்னமேதாகிலும் விசேஷசங்கதி நடக்கிறதாவென்றுதெரிந்து சீக்கிரம்வாருங்கள் தூதரே.

தூதர்கள் கைலைக்குப்போகும் - தரு.

இ-ம்-கல்யாணி-அடதாளம்

பல்லவி.

ஏகுவோம்வாரும் கைலைக்குப்
போகுவோம்நேரும்.

அநுபல்லவி.

வாடாமின்டாயென்பின் நீவாடாகண்டா
மாருருவாய்போவோம் சேதியையறிவோம் ஏகு

சரணங்கள்.

கோட்டைமதிலைநான் தாண்டுறேன்பந்தயம்
வாட்டமில்லாமல்நான் பிடிப்பதேதொந்தயம் ஏகு

பாரடாவெள்ளி மலையருகில்வந்தோம்
நேரடாயிந்தக் குளக்கரைதாண்டினோம் ஏகு

நல்லபுதுமைகள் நகரத்திற்காணுது
வல்லவர்வாழு மிருப்பிடந்தோணுது ஏகு

நாலுதிசையிலுந் தேடிப்பாரடா
தேவரிங்கில்லை யொளித்தாரோயென்னடா ஏகு

வில்லம்புகட்டாரி வெல்வாளுடன்
தொல்லைப்படுத்தும் துப்பாக்கிகடுவனதபார் ஏகு

பஞ்சப்பரியீதோ பாயுதுமேயுது
அஞ்சாதவீரரைப் பார்க்கிலமனம்வேயுது ஏகு
இக்கெவர்கண் ணுக்குங் காணுமற்றேணுமல்
தங்கிப்பதுங்கி நெருங்கிநாம்போகாமல் ஏகு

விருத்தம்.

சங்கரன்வாழ்கைலாசரிற் பார்க்கும்போது
மங்களமாகவெங்கும் மகுடதோரணங்கள்கட்டி
எங்குமாயுதங்கள்பூண்டு யிருக்கிறார்பஞ்சவீரர்
சங்கடப்பட்டேங்கோம் தயாபராவாதாசூரா.

வாதாவிசொல் விருத்தம்.

வீரன்வாதாவிதாதர் விளைவியம்பியதைக்கேட்டு
பராக்கிரமதிரஅஷ்ட பர்வதமுடையத்தானாய்
வாரிக்கொதிக்கவான்மீன் வரைசிந்துமேயடந்துவீழ
கூடிருந்தேவர்தம்மைக் கொண்டுவாதம்பிமாரே.

---

வாதாவிசூரன் தேவர்களை பிடித்துவரும்படி
தம்பிமார்களுக்கு சொல்லுகிற-தரு.
இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி.

தேவப்பயல்களிங்கு வேலைகள்செய்தோர்
திருட்டுத்தனமாயோடினார்கள்

அநுபல்லவி.

மூவரிற்சிவன்செய்தருதோ - அல்லது
முரகரியெனும் அரியோதோ தேவ

சரணங்கள்.

கைவிரிசிந்தால் விடாதே தம்பி
கட்டுவொன்றுமும்பாராதே தேவ
வைகுந்தர்தங்களைக்கொள்ளையடிப்பீர் மாலை
வரியக்கயிற்றால்கட்டிப் பிடிப்பீர் தேவ
தெய்வலோகத்துக்குள்ளேபுகுவீர் தேவரை
சிறைசாலையிலடைத்துவருவீர் தேவ.



கொள்ளையடித்திந்திரலோகம் அவன்
வெள்ளானைமேலேத்தி வாருங்போகம் தேவ
ஆண்பெண்ணடங்கலுங்கொண்டாரும் என்முன்
அடிமேலடிக்க வஞ்சந்தீரும் தேவ

பொது விருத்தம்.

வாதாவியுரைத்தமொழி தன்னைக்கேட்டு
வாருதனகுண்டலன்மகோன் மகோதரக்கான்
ஆகாசத்தேவர்பதித் தனிற்புகுந்து
ஆழ்ந்துவாபரணவஸ்திரம் தனைக்கவர்ந்து
சாதாரணமாய்வெள்ளை யானைமீதில்
தானேத்தியெய்தெய்தும் பயமுறுத்தி
பிராமணனைத்தேடியங்கும் காணமலே
பிரிந்திட்டார்வந்தபதி துறைத்திட்டாரே.

---

தம்பிமார்கள்சொல்லும்-தரு.
இ-ம்-பியாகடை-அடதாளம்

பல்லவி.

அண்ணாமார்கள் தேவபதிபோனோம்
தேவர்களைக்காணோம்.

அநுபல்லவி

அடித்தோம்கொள்ளையெடுத்தோம்பொருள்
ஒருத்தரக்குகாணோம் அண்ணா

சரணங்கள்.

கள்ளான்பஞ்சதோட நாங்கள் பின்னாலேதேட
வில்லேனோர்பயந்தோட ஆயிரங் கண்ணேனொளித்திட அண்ணா
கொள்ளையடித்திட்டோம் பொருள் எல்லாம்பறித்திட்டோம்
வெள்ளானைமீதேத்தியே இங்கு விரைவாயுமைசேர்த்திடவே அண்
உள்ளதிதுசொன்னேனும் வகை விள்ளாயெமக்கின்னம்
கள்ளத்தனஞ்செய்து தேவர் கண்ணிற்காணோம்யாவர் அண்ணா

பொது - கட்டியன் சொல்-சிந்து.

அசுரர்கள் கும்புகும்பாய்கூடி - வெகு
ஆங்காரங்கொண்டுமிக தேவப்பிரதாடி
திசைதிசைசந்துசந்தாய் தேவரையோடிதேடி
நாடிஞருடிஞர் மனம்வாடி . அசு

தேசோவதிசமனும் விரகுதரப்பதியில்
தேடினர்அக்கியமன் நிருதியைக்காணமல்
சுந்தவெக்தாவதி யளகாபுரியில்
சாடுேவருணன்வாய் குபேரனைக்காணமல் . அசு

அமராவதிசென்றரே இந்திரனங்கில்லாததாகண்டு
அரண்மனையுட்சென்று ஆடையாபரணங்களைக்கண்டு
அதைதயைசாபதத்தின்மேல் வெடுத்தேதத்திக்கொண்டு
வந்தார்கள்சூரர்களென்று அந்த வன்யபுராணவளமைகண்டு அ

தெம்மாங்கு.

அசுரர்செய்வாதையாலே அமராபதிவேந்தன்யேயே
நிஜருபமாரியன்று குயில்ருபமாய்பரந்தார்.

இதுவுமது.

மாலயனேடட்டபாலர் மாருருபங்கொண்டு
காலதுடனேகலந்து கைலைதனிற்சேர்ந்தார்கள்.

பொது விருத்தம்.

கைலையிலே தனிற்சென்று தேவரெல்லாம்
கடவுளரை போற்றிபணிந் திட்டபோது
நிலகுலைந்து மல்பாரந் தாங்காமற்றன்
வெடுத்தாக தாழ்ந்திட்டவேயசனர்பார்த்து
பலகலையு மரிந்தவிஸ்வ கர்மாயிந்த
பாரமதை தாழ்ந்ததென்ன வென்றுகேழ்க்க
கலைமகனே டிந்ராதி முனிவரும்பேரல்
காணுதலல் கைலைமலை தாழ்ந்ததென்றன்.



ஈஸ்வரன்சொல் - ஈரடி.

ஆசிரியச்சுரிதகம்.

ஆரடாயெனக்குச் சமனிதவென்றுயே
கூரடாயவனையென் முன்கொண்டுவாயே.

மயன்சொல்லும் - வஞ்சிவிருத்தம்.

இராசியுற்பத்தி பராசிவனையேத்தி
குருமுனியைவைத்து திருத்தனிடாபோத்து.

சிந்து.

தானத்தேநாம் - சாய்ந்தத - ஞெ - தான

ஈசனையொருதட்டில் வைத்தானே - அகத்
தீசனையொருதட்டில் வைத்தானே தான

நாசனிருந்த நிறைபாரும் - இதோ
மோசமில்லாமல் புள் சாயவில்லைகாரும் தான

ஆதிசிவன்சந்தோஷித்து முடிந்து - அகத்திசரோ
பொதிகைமிற்போய்சேர்ந்ர் வாழ்ந்து தான

என்றரன்சொன்ன மொழிகேட்டு - குருமுனி
ஏக்கமாய்மயனுக்குச் சாபம்கொடுத்திட்டு தான

வக்கைபோடாபாவி விஸ்வகர்மா - நீ
வாகுடன்போய் பூலோகந்தாழ்கூழியற்செய் தான

என்னவே விஸ்வகாமன் - அகத்
தீசரேவுமக்குமிச்சாப மேய்ந்தேன்வர்யம் தான

இந்தசாபம்பெற்று அகத்திசர் - உமதுசிர
மிருக்கும்கெங்கைதனை வரயாய்தாவிச தான

வந்தனமென்றடி தொழுதுநின்றார் - சிவன்
அந்தமொழிகேட்டேனே கெங்கையை தரித்தார் தான

மந்திரகிரிதனைவிட்டு நானும்போரேன் - வன்னியனை
துணைகூட்டிப் பின்னனுப்பவேணும் தான

கங்கையைகமண்டலத் தடைத்தார் - பொதிகையிலே
தங்கிடம்பார்க்கையிலே கெங்கையவிழ்த்தார் தான

அக்கருணம் தேவர்களைக்கண்டு - விஜயன்
ஐயைபோக்கங்கையில்லா தென்னைப்பிறப்புண்டு தான

இந்திரனுக்காக வருகொண்டு - கெங்கை
எந்தவயிருந்தாலும் கவிழ்த்திட்டீர்கண்டு தான

வேண்டிகின்றார்தேவர் யாவரென்றுண்டு - அந்த
வேமுகங்காகமாய் கவிழ்த்தால்நன்று தான

கவிழ்த்தநீர் கொள்ளாடங்காவேரி - யெங்கும்
தவிழ்ந்தலைகச்செழிக்க பிரண்டுதெம்புரி தான

வன்னியராஜன் விருத்தம்.

மாலயனு மடிமுடியைத் தேடிக்காணூர்
மன்மதனுங் கணைமழுங்கி மயலிவிழ்ந்தான்
காலனுறி முயலகனு முதையும்பட்டான்
கனகசபை தனிற்காளி தோற்றுநின்றாள்
ஆலவிடமுண்ட டகாரக் கழுதனித்தீர்
அமரர்தமின் சரணடைய புரமெரித்தீர்
பாலனைக் கருணபுரிந்து வரமுமீவீர்
பராபரனே யெனையின்ற பரனேஐயா.

தரு-இ-ம்-பியாகடை-அடதாளம்.

பல்லவி.

ஐயாவெனையளித்து வாதா
சூரன்மேல் தாஜ்தொடுத்து
மெய்யாவரவளித்தி யென்னை
விதமாய் ஜெயித்திடுவேன்
மெய்ப்பரனே-தற்பரனே-யற்புதனே-யிப்பொழுது ஐயா

அநுபல்லவி.

உமையால் வரம்பெற்றேன் தந்து
புரியையான் வாதாசித்தாம்
எம்மைப் பிரப்பித்து விலை
எடுத்து சமர்தொடுத்து
எமனோடு-சமர்செய்திடும்-தமதர்ப்பரையின்-பலமானவன் ஐயா



சரணங்கள்.

கையிற்பலமில்லை திறமையில்லை
வரமில்லை யெமக்கு
எய்யக்கணையில்லை இது
எல்லாமிகத்தொல்லை
கணையீந்திடும்-வரந்தந்திடும்-மலோதோளனே-வதைசெய்திட ஐ

சூரர்குலமழிக்க பலங்கொடுக்க
அம்புதொடுக்க
வீரன்படைகெலிக்க தேவர்
இடுக்கங்களைதவிர்க்க
வந்திடுவீர்வாதாவி யோய்ந்திடவேகணையேவி
வந்திடநான்கண்பாரீர் மைந்தனுக்கோர்வரமீவீர் ஐயா

சிவன்சொல்லும்-தரு.

இ-ம்-கல்லியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

தீராயிங்குநீவருவாய் நான்தருவதை
வீரவன்யா கைகொள்ளுவாய்.

அநுபல்லவி.

தீரமீயிங்குவாடா பொறக்கருவிதடா
நாராயணாஸ்திரம் நமனவாய்வருணாஸ்திரம்
சூரனாம்புவில்லுங் கொடுத்தேன்வாளுங்கொள்ளும் தீரா

சரணங்கள்.

கருடாஸ்திரத்தோடு கதைதன்னையீனுகரும்
உருவானமோகாஸ்திரம் வெயில்தேஜாஸ்திரந்தந்தேன் தீரா

கிரியஸ்திரங்கெருடன் கெலித்துசம்பத்தைவெல்லும்
பாரளந்தோன்சங்கு சக்கரமிதோதந்தேன் தீரா

எதிர்த்தப்படையைவெல்லும் யெமனாஸ்திரமிது
வருந்தப்படாதேயிந்திரன் வச்சிராயுதமுந்தந்தேன் தீரா

சாரங்கம்சூலம்வாள் சந்திரனக்கினிசூரியன்
மாரன்பஞ்சகணையும் மகனேகொடுத்தேனினையும் தீரா
நாரசிங்கமுஞ்சுடர் சரபாசுபதமிது
வீராகஜமுகமும் தீராகொள்வாயிப்போது தீரா
வீராதிவிராவுன் வில்லிலஸ்திரங்குறைந்தால்
பேரானயஞ்செழுத்தால் பிரப்பிக்கும்வகையிது தீரா
ஆறுதாரவடுக்கும் அஞ்சுமூன்றுமிரண்டும்
ஓரெழுத்துமறிந்த வுனக்கோர்குறவுமில்லை தீரா



வன்னியராஜன் மந்திரமாலையை விடைகேட்கல்.

விருத்தம்.

மாசிலாயீசனுலே வாமுமோரஸ்திரம்பெற்றேன்
வாசவன்பிரமதேவன் மாமுனியோர்கள்வாழ்த்தி
பாசமாயழைத்துவாதா சூரனையழிக்கச்சொன்னர்
நேசமாய்ப்போறேன்பெண்ணே நீவிடைதருவாய்கண்ணே.

வசனம்.

அகோவாரும் எனது ஆசைக்கிசைந்த மந்திரமாலையே ஈஸ்வரன் வரப்பிரசாதத்தினலும், பிர்மா-விஷ்ணு-தேவர்கள்-முனிஸ்வரால் அநுக்கிரக ஆசிர்வாதத்தினலும் யானபோய் வாதாவிசூரனை ஜெயித்துவருகிறேன் விடைதந்தனுப்பும் பெண்ணே.



தர்க்க - தரு.

இ-ம்-அடாணு-அடதாளசாப்பு

கண்ணிகள்.

வன்னியராஜன் சொல்.

மானேவிடைதந்தனுப்படி
மான்விழிகுயிலேமயிலே
தேனே திவ்யகுண தேவேந்திரன்பெற்ற
சித்திடையே ரத்தினமே
பத்தினியே யிப்பொழுது மானே

மந்திரமாலை சொல்.

மன்னுயிதென்ன யோசனைகாண் வன்னிய
மகராஜா, ஜெகதீசா
வெகுனேசா பிரகாசா
சின்னவயதிலென்னை மணஞ்செய்தீர்
சிறையோ குறையோதலை
விதியோ சதியோமதி மன்னு

வன்னியராஜன் சொல்.

ஆதிசிவனழைத்தார் பெண்மயிலே வாதா
சூரனைக் கொன்றிடப்போ
வீராநீ வாவென்று
மாதேஅரகரி பிர்மாதிதேவர்கள்
வாதைப்பட்டார் வாதா
சூரனல் முனிவர்கள் மானே

மந்திரமாலை சொல்.

அன்னைபிதாதெய்வமும் அரணுமே
அவர்சொன்னதை தள்ளாதீர்
மன்னுபி ராணநாதா
பின்னையொருவர்கள் வார்த்தைக்கேளாதீர்
பிடித்தேசரம் தொடுத்தேசூரர்
குலத்தைவுன் பலத்தாலழி மன்னு

வன்னியராஜன் சொல்.

நேரமாகுதென்னடி பெண்ணே
மின்னே-பொன்னே-கண்ணே
கோரவார்த்தைகள் பேசாமலே - அடி
கொடுப்பாய்விடை விடுப்பாயென்னை
தடுக்காமலே சிரப்பாயிரு மானே

மந்திரமாலை சொல்.

மன்னுவன்னியராஜ பூபதியே
முன்னேனே நீ சொன்னுவ்வினை
வர்ணமாமதில் சூழும்ரத்தினபுரி
வாளோன்வீர சூரர்தலை
கீழேவிழ மன்னுயிது என்ன

வேறு - சிந்து.

இ-ம்-பச்சைபுராபாட்டு-தாளம்-ஆதி

வன்னியராசன் சொல்.

சூரன்குலமறுத்து பேரெங்கும்வியாபித்து
வீரன்நான்போய்வாறேனடி பெண்ணே கண்ணே
விடைகொடுத்தனுப்புமடி - என்ராஜாத்தி
விடைகொடுத்தனுப்புமடி.

மந்திரமாலை சொல்.

அனுப்ப மனம்வருமோ
அவியாயமோ யென்னமோ
துணிவுகொள்வதனுாயமே - என்ராஜாவே
துஷ்டரிடம்போதல்நலமோ

வன்னியராசன் சொல்.

கலமெல்ல வென்றுரைத்தாய்
காயகியே நீதடுத்தாய்-யென்
பெலமெங்கேபோச்சுதடி - என்ராஜாத்தி
பேதமையால்பேசாதடி



மந்திரமாலை சொல்.

பேசாதென்று வுரைத்தீர்
ஈசன்பெற் றெடுத்தோரே
ஆசையென்மேல்விடுத்தீர் - என்ராஜாவே
வேசையென்றுநினைத்தீர்

வன்னியராசன் சொல்

நினைப்பேனடி யென்மயிலே
வனக்குயில் மொழிதையலே
உனைப்பிரிவேனோகுயிலே - என்ராஜாத்தி
க்ஷணத்தில்வருவேன்கைலே

மந்திரமாலை சொல்.

கைலைக்குப் போய்வருவீர்
சையோக லீலைதருவீர்
வையகத்திற்பேர்பெருவீர் - வாதாவிதன்னை
எய்துகொன்றுநீர்வருவீர்.



வன்னியராஜன் சேனைகளோடு புறப்படும்

விருத்தம்.

கடலொலிபோல்முழங்க கதிவீரர்கோடிசூழ
இரமுளபரியோர்கோடி சிவிகைதேர்கோடியாகும்
படபடென்றதிரபூமி பராக்கிரமதீரர்கூடி
சுடலையாடியைதுதித்து சுகமுடன்புறப்பட்டானே.

தரு-இ-ம்-சாமா-தாளம்-ஆதி

பல்லவி.

போவோம்வாரும்புத்திரர்களே - வாதாவிமேலே
போவோம்வாரும்புத்திரர்களே

அனுபல்லவி

போவோம்வாரும்புத்திரரே    புரரத்னபுரிசூரரை
சாவடிக்கவய்பாரோ    சந்த்ராதியுள்ளவும்பேரே போ

சரணங்கள்.

நம்மையனுப்பிவைத்தாரே - நாரிபாகன்
நம்மையனுப்பிவைத்தாரே
நம்மையனுப்பினரே    நல்லவரந்தந்தாரே
சின்னப்படுத்திச்சூரரை    சிரைவிடுப்போம்தேவரை போ

பாராளவரம்பெற்றேமே - பராபரனால்
பாராளவரம்பெற்றேமே
பாராளவரம்பெற்றோம்    பாவிதனைஜெயிப்போம்
வீராதிவீரனென்று    விண்மண்மழிவென்று போ

மாதரிவாழுமிடமே - பாலேகிலமே
மாதரிவாழுமிடமே
மாதரிவீரியைக்கண்டு    மகிழ்பதமுட்கொண்டு
வாதாவிதனைஜெயிக்க    வானோர்நம்மைமதிக்க போ

---

வேறு - தரு.

இ-ம்-தோடி-அட,தாளம்

பல்லவி.

புறப்பட்டான்பரியேறியே - வன்னியராஜன்
திறமாய்தெவ்திசைநாடியே.

அனுபல்லவி.

புறப்பட்டான்பரியேறி விடுபட்டப்புலிபோலே
புரமூன்றெரித்தசிவன் திறமாயளித்தபாலன்



51

புஜபலவீரர்கள்சூழவே - நவநீத
வில்வாள்கையில்துலங்கவே
வீரதீர    சூரர்மடிந்திட
நாரிபாகன்மால்    தேவர்மகிழ்ந்திட    புற

சரணங்கள்

இரத்னபுரியைநாடியே - கைலேவிட்டு
எத்தன்வாதாவியைத்தேடியே
எத்திசையும்புகழக்கீர்த்தி    வெற்றிபெற்றால்நமக்காச்சி
சுத்தவீரனென்றும்பேச்சி    அத்தன்வரமளிக்கலாச்சி

அக்கினியில் பிறந்தோனேயானல் - யிப்போ
முக்கியமாய் ஜெயிப்பேனேவாளால்
ஆனைபடையோடு    சேனைபடைகளை
ஆக்கிரமித்துப்    பதைக்கவதைத்திட    புற

பிள்ளாங்குழலூதவே - காளாஞ்சியேந்த
பிள்ளைகள்நால்வருஞ்சூழவே
உள்ளியகில்புகையும்    மெள்ளபகல்திவட்டி
வெள்ளஞ்சேனைகளோடு    கொள்ளையிடும்வீரர்

வெகுபலமுடைய திரப்படைகளும்
பகையதைவெல்லும் வீரதீரர்களும்
வெடியதுகிடுகிடு    வென்றுயதிர்ந்திட
மடமடென்றுபகை    முறிந்துவிழுந்திட    புற

ஆசையுட்கொண்டானே - தன்படைகள்மேல்
பாசம்வைத்தாண்டானே
காசியெல்லையிது    யீசன்குடியாமது
பூஜைபுரிந்துமவன்    தாரத்துதிப்போது

போவேகெண்டாமணியது - கேட்குது
ஆராதனையிப் பொழுதுமேயாகுது
நதியினில்முழுகிக்    கதிபெறவருவீர்
அரகரசங்கர    னருளதுபெறுவீர்    புற



வன்னியராஜன் சொல்லும்

தேவாரம்.

காசியில்வருதுவிஸ்வ நாதனைப்பணிந்துபோற்றி
மாசிலாகாளத்தீசர் மலரடிதொழுதுபிப்பால்
பூசித்தேன்காஞ்சிவாழும் புனிதரேகாம்பரர்பாதம்
ஆசையாயருணநாதர் யடியிணைபோற்றிபோற்றி.

வசனம்.

அகோதெப்படியென்றால் வன்னியமகாராஜன் தென்திசையைநோக்கி வாதாவிசூரன்மேல் படையைத்தூக்கி வருகிறவழியில் விஸ்வநாதரையும் விசாலாட்சியம்மையையும் பூஜித்து, காளத்தியில் வேடன்பூஜித்த ஈஸ்வரரையும் ஞானம்பிகாளையும், காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதரையும் காமாட்சியம்மையையும், திருவண்ணமலையில் அருணாசலீஸ்பரரையும் உண்ணாமுலையம்மையையும் பூஜித்து சிதம்பரக்ஷேத்திரம் வருகிறவிதங்காண்க.

கொச்சகம்.

மல்லிகைமுல்லைசண்பகப்பூ மருவுதிருவாட்சிதும்பை
நல்லமலரெடுத்து நடேசர்திருதாள்பணிந்தேன்
கல்விதருஞ்சீர்காழி கர்த்தர்பதம்யான்றொழுது
செல்வத்திருத்தணிவாழ் சிவனைதொழுகின்றேனே.



வசனம்.

அகோதெப்படியென்றால் வாசமுள்ள புஷ்பங்களைக்கொண்டு சிதம்பரஸ்தலத்தில் நடராஜரையும் சிவகாமியம்மையையும் பூஜித்து சட்டநாதரையும் திருத்தணிகையில் ஈஸ்வரனையும் பூஜித்தானென்பதாம்.

விருத்தம்.

சீர்காழிஸ்தலத்திற்பூசை செய்தபின்வேளூர்தன்னில்
பார்வதிசமேதரரைப் பரிவுடன்தொழுதுபின்னர்
கார்குழல்கங்கைதன்னை கமண்டத்தோடுதாக்கி
சார்புடனகத்தீசர்பாற் சார்ந்தனர்பொதிகைதன்னில்.

இதுவுமது.

ஆசையாய்கெங்கைதன்னை யகத்தியர்க்கீய்ந்தசேதி
தாசனும்விஸ்வகர்மன் தானதையறிந்துதேவர்
யோசனைசெய்துயானை முகவனுங்காகமாகி
வீசிடகவிழ்த்தார்லோகம் விளங்ககாவேரியாச்சே.

இதுவுமது.

மாயபுரந்திருமருதூர் திருவாரூரில்
வாழுமரனைத்தொழுது மகிழ்ந்துவன்னியன்
நியமமுடன்கும்பீரர் பாதம்போற்றி
நேர்மையாய்த் திருவானைக்காவற்சென்று
செயப்பெறவேவேதகிரிச் சிராப்பள்ளிதாண்டி
திவ்வியமாய் மதுரைசொக்கர் தன்னையேத்தி
பயமுடன்ராமேசுரத்தில் ராமலிங்கம்
பாதத்தையன்புடனே தொழுதான்ராஜன்.

வசனம்.

அகோதெப்படியென்றால் இத்தலங்களையெல்லாம் பூஜித்தபின் பாலயிலத்தில்வாழும் தங்கள் குலதெய்வமாகிய தற்பரமேஸ்வரியை பூசிக்கின்ற விதங்காண்க.

விருத்தம்.

அந்தரி யுலகுபுகழ் கொண்டவளே யகிலாண்டக்
கோடித் தாயே
விந்தைசேர் மகிடனிட சிரமுருள வதைசெய்த
விமலித் தாயே
உந்தனிட பதந்தொழுதேன் சிந்தனைவா ருமல்மன
திருக்கும் தாயே
வந்துயெந்தன் முன்னிருந்து வாதாவிதனை ஜெயிக்கவரந்
தாரும் தாயே.

வசனம்.

அகிலாண்டகோடி - பிரமாண்டநாயகி - அந்தரி - திருசூலக பாலி - மகிடாசுரனைவென்றநீலி - மகாவிஷ்ணுவுக்குத் தங்கையாகிய இந்திர-மயேந்திரஜாலி - என்குலதெய்வமாகிய யெண்டோளி யாளிவாகனக் கோலாகலி - என்முன்வந்து வரந்தந்து சமுத்திரங் கடந்து வாதாவிசுரனைத்தொடர்ந்துஜெயிக்க வரந்தாருமம்மா தாயே யாளிவாகினியே.

தரு-இ-ம்-பைரவி-அடதாளம்

பல்லவி.

அந்தரிமாதரிகௌரி நீலி
அரவுபூஷணிவுலகுபுகழ்சூலி.

அநுபல்லவி.

எந்தனையாளும் பராபரவீரி
எனதிருதயந்தனி லமர்ந்திடும்ஞூரி அந்தரி

சரணங்கள்.

மந்திரதந்திர யெந்திரவுபகாரி
வந்தேனுன்பதம் சிந்தையில்மகிழ்வாய்கோரி அந்தரி

எந்தன்குலதெய்வமும் நீயேயாயி
விந்தைபூதப்படையுள் வாழுந்தாயி அந்தரி



சக்கரபாணி வுக்கிரவீரசெல்வி
மிக்கப்பதமிட்டோ யென்மனக்கல்வி அந்தரி

திக்குள்புகழுஞ்சூல கபாலசுந்தரியே-கையில்
பக்குவமாய்வாள்தாங்கி அமர்ந்தயந்தரியே அந்தரி

பாலதிலத்தினில்பூதப் படையுடனமர்ந்து-சிறு
பாலனுக்காகவரந் தரவேயிங்குவந்து அந்தரி

மாலுக்கிளையவள்யென்றுநீ பேரதுகொண்டுநீ
வந்துயமர்ந்திடசிந்தை மகிழ்ந்தும்மைகண்டு அந்தரி



காளிகாதேவி வருகிற

பொது விருத்தம்.

கைதனிற்றிருசூலங் கபாலமவாளும்
காதிற்கொப்புக்கொந்தளமுமின்ன
மெய்யினில் நவநீதப்பணியிலங்க
விளங்குநெற்றியிற் குங்குமம்பூசி

பையரவாபரணமொடு பதக்கம்பூண்டு
பளபளெனவொளிமிகுந்த பட்டாடைகட்டி
மெய்யதாய்சிங்க வாகனமீதேறி
வெகுபூதப்படைசூழ வருகின்றாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் காளிகாதேவி சிங்கவாகனமேறி வன்னியராஜாக்களுக்கு வரங்கொடுக்க வருகிறவிதங்காண்க.

——*——

துர்க்கைவருகிற-தரு.

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி.

துர்காதேவியும்வந்தாளே சிங்கமீதேறி
துர்காதேவியும்வந்தாளே.

அநுபல்லவி.

துர்காதேவியும்வந்தாள் சூலங்கபாலமேந்தி
மிக்கவரந்தந்திட மேதினியோர்புகழ்ந்திட துர்

சரணங்கள்.

பூதப்படைகள்சூழவே - கும்புகும்பாய்
விதிட்டலரிவரவே
பூதப்படைகள்சூழ பேய்கள்வந்தடிதொழ
சிதரனற்றங்கையென யாவரும்புகழ்ந்திட துர்.

பாலநிலத்தில்வாழ்பவள் - வன்னியர்தன்னை
பக்ஷமவைத்தேகார்ப்பவள்
பாலநிலத்திருந்து பக்தர்மனமதிழ்ந்து
பாலர்களுக்குவரம் பரிவாயளிப்பேனென்று துர்

வீரவன்னியன்துதிக்க - வரமளிக்க
தேவர்கள்மனங்களிக்க
சூரன்குலமறுத்து வீரர்கள்செயித்து
சுதன்மனங்களித்து பூதங்கள்கெக்கலித்து துர்

———



வன்னியராஜன் ஸ்துதி - தரு

இ-ம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி.

ஆதரவாயுன்பதத்தைக் கோரினேன்முன்வந்தாய்
ஆதரிக்கயிதுசமயமே - என்முன்வந்து
கார்ப்பதுனதுபாரமே - அந்தரிவீரி
கார்ப்பதுனதுபாரமே.

அநுபல்லவி.

வேறுவினைவாறுமலே காருமென்றடிதொழுதேன்
காரணிபரிபூரணியே - கங்காளிவீரி
நாரணியெண்டோளி சூலியே ஆதர

சரணங்கள்.

தேவர்களிடுக்கந்தீர வாதிசிவனெனையழைத்து
அஞ்செழுத்தையுபதேசித்தார் குலதெய்வமென்று
உந்தனையென்மனதில்வைத்தார் ஓங்காளிவீரி ஆதர

பாதகன்வாதாவிசூரன் பண்ணும்வாதைதாளாமல்
பாணமொடுவரந்தந்தார் அந்தரிவீரி
காரணியெனக்குத்துணை வந்துகார்தாயே ஆதர

ரத்னபுரிக்கேகவென்றால் சுற்றிலும்வாருதிகண்டாய்
எப்படிநான்போவதம்மணி கடல்கடந்து
உந்தன்வழிசொல்லம்மணி சூலிகபாலி. ஆதர

துர்க்காதேவி விருத்தம்.

அப்பனேமகனேயெந்த னுருயிர்க்கண்ணேபொன்னே
இப்புவிதனிலேதேவ ரிடுக்கங்கள்தீரவந்த
ஒப்பிலாமணியேயுன்பின் வுறுதியாய்வருவேன்யானும்
மூப்பிலாயிளமையோனே முன்னிற்பேன்வாழ்வாய்பாலா.

வசனம்.

அகோவாருமப்பா எனக்குப்பிள்ளையாகிய வன்னியபூபதியே தேவர்களிடரைத்தீர்க்கவந்த ஈஸ்வரனார் குமாரனே இளமைப்பருவமாய் எக்காலமு மென்றும் புத்திர பௌத்திர களத்திராதிகளாய்சுகித்து அரசுபுரிந்துவாழ்வீர்கள். நானும் உன்னுடன்வந்து துஷ்டனாகிய வாதாவிசூரனை ஜெயித்துவரச்செய்வேன் சமுத்திரங்கடக்கவுஞ்செய்வேன் மகனே.

தரு-இ-ம்-உசேனி-அடதாளம்

பல்லவி.

பரியுடன்பெரிதணல் தனிலேபிறந்துவந்த
பாலாசுகமாய்வாழ்வாய்.

அநுபல்லவி.

பரசுபாணிமகிழ பதினெட்டாயுதங்கொண்ட
பாலாசேனைகள்தந்தேன் வாழ்வாய் பரி

சரணங்கள்.

சுரர்கள்யிடரைத்தீர்க்க சுருபமெடுத்துவந்த-வீரு
சூரனைக்கொல்வாய்திரு
வருவேனுனதருகில் குறவுவாருமற்காற்பேன்-போடா
சூரனைவென்றுவாடா பரியுடன்
இரைகடலிலடிவைத்தேன் வந்துபார்த்துவாடா
எனைத்துடர்ந்துக்கூட
இரத்னபுரியெல்லை அதோபார்வாதாவிசோலை
இங்கிரங்கவும்நேரப்பா பரியுடன்

பொது விருத்தம்.

வீரனும்வன்னியபூபன் வெகுசேனைபடைகள்சூழ
நாரணிமுன்னேயேக நல்வீரர்கடலைத்தாண்டி
சூரன்வாழ்யெல்லைதன்னில சுகமுடனிரங்கிபால
சேரனேவாதாவிபக்கல் தூதுபோய்வாவென்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் வன்னியராஜன் இரதகஜதுரகபதாதிகளோடு குலதெய்வமாகிய துர்க்கையம்மன் முன்னடக்க பின்னால சமுத்திரங்கடந்து இரத்னபுரியெல்லையில் ஓர்பக்கம் மேட்டில்யிரங்கி புத்திரர்களையும் சேனைகளையும்பார்த்து வாதாவியிடம் தூது போகும்படி சொல்லும்வேளையில் நாரதமகாமுனி நான்போய்வருகிறேனென்று போகிறபோது வாதாவிசூரன் கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

---



பொது விருத்தம்.

அண்டபகி ரெ டமொடு யீரேழுலோகம்
அதிர்ந்திடவே சேடன்முடி யசைந்துசாய
மண்டலத்தி லுள்ளவர்கள் மயங்கிவிழ
மஹாமேரு கிரியசைய வானோரஞ்ச
கண்டவர்கள் மனமோகெகி நடுக்கங்கொள்ள
கடல்சலமுங் கொதித்துத்ததத் தளித்துப்பொங்க
மண்டலிக னெனுமந்திரி யருகிற்சூழ
வருகின்றான் வாதாவி சூரன்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் மண்டலீகனெனனும் மந்திரியும் பிரதானிகளுஞ்சூழ தேவர்கள் ஏவல்செய்ய வரவில்லையென்று வடவாமுகாக்கினியைப்போற்சீறி கோபங்கொண்டு வாதாவிசூரன் சபைக்குவருகிற விதங்காண்க.



வாதாவிசூரன் வருகிற தரு.
இ-ம்-தோடி-அடதாள

பல்லவி.

அதிபுஜபலமுள நவநீதகிரன்வாரான் - வாதாவிசூரன்
அதிபுஜபலமுள நவநீதகிரன்வாரான்.

அநுபல்லவி.

அரக்கர்குலத்தில்வெகு திறமுள்ளபலவானென்று
சூரர்கள்போற்றயஞ்சியே
முனிவர்களமரர்க ளெனை தினங்கண்டுவெகு அதி

சரணங்கள்.

திடமுடன்கடல்நீர் யெனைதிடாவரள்திரா அதில்சிவிக்கும்
ஜெந்துக்கள்யாவையும் வுண்டிடயென்பசிதீரு-வெகு அதி

விடுமூச்செறிந்திடும்சுவாசத்தில் அட்டகெஜமெல்லாம்சருகுபோல்
வெருண்டுபுரண்டுபெறிங் காதவழிக்கப்புரம்வோடும் வெகு அதி

கைலேயங்கிரியொடுசகலமலைகளென் கைபட்டால்காற்றிற்பஞ்
சுபோல் கனலிலொளிமறைய பொடிபொடி தூளதாய்வோடும் வெகு.

---

வேறு – தரு.

இ-ம்-பயிரவி-ஆதிதாளம்

பல்லவி.

வந்தான்வீராதிவீரசூரன் – அசுரர்குலத்
தலைவன்வாதாவிமகராசன்.

அநுபல்லவி.

வந்தான்வாதாவிசூரன் வமரர்நடுங்குந்தீரன்
செந்தாமரைமுகத்தில் திலர்தமொளிவிகாரன்
திரேகம்யெழுமலை போல்விளங்கிட
கூரம்போடுவில் கைதனிலிலங்கிட வா

சரணங்கள்.

மார்பதக்கவாசமின்ன – வயிரமணி
ஆரம்பளபளென்றுதுன்ன
மார்பிற்பதக்கமின்ன வயிரகடுக்கன்துன்ன
மட்டடங்காதகோபமீறிட
வெட்டருவாள்கதை சூலமிலங்கிட வந்தான்



அசோமுகியாள்சுதனும் – ரத்னபுரியை
யாளும்ராஜாதிராஜனும்
அசோமுகிபெற்றபாலன் வாங்காரகோலாகலன்
வருகிற்கெம்பன் கும்பன்கெஜமுகன்
திரமாம்சம்புமாலியும் புஜபலன் வந்தான்

அண்டம்நடுநடுங்குமே – திறமுள்ளவானென்ன
மண்டலமசைந்தொடுங்குமே
அண்டபகிரண்டங்களும் மண்டலத்திலுள்ளவரும்
அடங்கிடவேகண்டொடுங்கிடவே
துடங்கிடசூரர்கள் நடுங்கிடதேவர்கள் வந்தான்

விருத்தம்.

வந்தவாதாவிசூரன் மகிழ்வுடனரசையாண்டு
விந்தைசேர்மந்திரிமண்டலீகனேநமதுநாட்டில்
அந்தமாயக்கினிகாளி ஆலயம்விளங்குகின்றாய்
இந்திரதேவரெல்லாம் யேவல்செய்திருக்கின்றாரு.

வசனம்.

அகோவாரும் மண்டலீகனென்னு மந்திரியே நம்மிடநகரத்தி
ல் அக்கினி மாகாளிகோவிலில் ஆறுகாலபூஜை நைவேத்தியங்கள்
கிரமமாக நடந்துவருகிறதா இந்திரன் பிர்மா விஷ்ணு தேவர்கள்
யேவல்பணிவிடைசெய்து வருகிறார்களா மற்ற அசுரர்களும் அவா
ளவாள் வழுமுறைதவறாது வருகிறார்களா சொல்லும் மந்திரி.

மந்திரி விருத்தம்.

சூரனேசூரர்கோவே சூராதிசூராபோற்றி
வீரனேநமதுநாட்டில் விண்ணவரேவல்கொண்டு
பாரெங்குமாண்டிருந்தோம் பாவிகளோடிப்போனார்
ஊராதுவிளக்கங்கெட்டு வொளிகுறைந்திருக்குதையா.

வாதாவி விருத்தம்.

மந்திரியிவ் வாருரைக்க வாதாசூரன்
மனங்கொதித்து அண்டமிடிந் தாற்போற்கூவி
எந்தவிதமானாலும் தேவர்தன்னை
இட்சணமே போய்பிடித்து யடித்துவன்றாய்

பந்திபந்தி யாய்விலங்கு யிட்டுவேலை
பண்புடனே யிடுமென்று சொல்லும்வேளை
சுந்தர நாரதர்வன்னியன் றூதனாக
சுகமுடனே சூரனிடம் வந்தாரன்றே.

பொது விருத்தம்.

பிரமனுமீன்றபாலன் பெரியவனென்னுங்காமன்
பரமன்பாதத்திற்கியானன் பஞ்சாட்சரவுருவில்மௌனன்
இரமுடனுளவறிந்து செய்திகளுரைக்கத்தீரன்
வரம்பெற்றவன்னியன்செய்தி வளமையாயுரைக்கவந்தார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் வன்னியராஜனிடத்திருந்து வாதா விசூரனிடம் தூதாக நாரதமகாமுனிவர் வருகிறவிதங்காண்க.



நாரதர் தூதுபோகிற-தரு.
இ-ம்-பிலகரி-அடதாளசாப்பு

பல்லவி.

வந்தார்நாரதரும் தூதுரைப்பேனென்று
வந்தார்நாரதரும்.

அனுபல்லவி

விந்தையாகக்கச்சைக்கட்டி மேலில்
வெண்ணீறிலங்கச் சடைகுலுங்க வந்தார்



சரணங்கள்.

தொந்தோமென்றும் பரமன்பதம்
தன்னைமனதில்துதித்து வந்தார்

சந்தோஷமாகவன்னியன் சொன்ன
சங்கதிவாதாவிதானறிய வந்தார்

விந்தைநடைநடந்து வாதாசூரன்
சபைவந்துதோன்றினாரே வந்தார்

விருத்தம்.

வாதாவிசூராகேளாய் வன்னியனனுப்பயானும்
தூதாகவந்தேனிப்போ செய்தியொன்றுரைக்கக்கேளாய்
நிதானமில்லாமல்நீதா னிமையவரேவல்கொண்டாய்
அதனால்தானென்னையழைத்து வனுப்பினாவந்தேன்யானும்

வசனம்.

கேளாயப்பா வாதாவிசூரா இந்திராதிதேவர்களோடு சந்திர சூரியர்களையும் பிர்மா விஷ்ணு அஷ்டவசுக்கள்யாவரையும் உன துவரப்ரசாதபலத்தால் காவல்கொண்டு இம்சைபடச் செய்வித்தா யாம் அதனால் அக்கினியிற்பிறந்துவந்த வன்னியமகாராஜன் உன் னையடக்கியிருக்கச்சொன்னார் இல்லாவிட்டால் யுத்தத்திற்குவரச் சொன்னார் பதில்சொல்லும் வாதாவிசூரனே.

வாதாவிசூரன்சொல் விருத்தம்.

ஆரடாவன்னியனென்றென் னதிகினிற்சொல்லவந்தாய்
பாரடாவெந்தன்தீரம் பராக்கிரமமறியாயோடா
போரடாசெய்வதல்லால் பொறுப்பேனோக்ஷணநேரந்தான்
வேறுனாசொல்லாமல்நீ விடுவிடென்றோடிப்போடா.

நாரதருக்கும் - வாதாவிக்கும் தர்க்கம்.
தரு - இ - ம் - புந்நாகவராளி - அடதாளம்

நாரதர் சொல்.

வாதாசூரனேசொல்வேன் வன்னியனசொன்னதை
விருசற்றுநீகேளாய்
தாதையீஸ்வரன் கனலிலிருந்தழைத்து
வதால்குறைவில்லாமல் இங்குவந்தான்வன்னியன் வா

வாதாவி சொல்.

வன்னியனென்றாலடடா வலுவேனடடா
என்முன்னிற்காதேபோடா
சின்னப்பயலென்னிடம் வுன்னிதமாய்ச்சொன்னதிடம்
பின்னப்படுவாயோடு வன்யன்முன்னடந்திடு வன்

நாரதர் சொல்.

போடாவாடாவென்றே ருஜராசனை
யடாகூடங்கள்பேசாதே
சோடாவின்றுலுதைப்பான் பாடுபோடாய்வதைப்பான்
ஓடாமலேயிருந்தா லொருநொடியில்சிதைப்பான் போ

வாதாவி சொல்.

வதைக்கவந்தவனோடாவி என்கையம்பாலே
சிதைக்கத்துணிவேனுன்னுவ்
வதைக்கவந்தவனென்றால் எதிர்த்துவந்தென்முன்னின்றால்
பதைக்கத்துணிப்பேனென்றிடு சிதைப்பேன்கோடாலியெடு

நாரதர் சொல்.

கோடாலிதானிருந்தால் ருசூதவாதா
காடுவெட்டலாந்தோதா
பாழாகவுங்கள்குலம் மேடாய்குவிப்பான்பலம்
கீழேவீழ்கருணம் ஓடோடிவிழ்சரணம் கோ

வாதாசூரன் சொல்.

பயப்படுவேனோதாதா சிறுவன்கையில்
அகப்படுவேனோவாதா
பயப்படுவேனோநான் பாரியுருவெடுத்து
பயப்படஞ்சுவேமாட்டேன் நாரதாநான்சித்து பயப்

நாரதர் சொல்.

அஞ்சமாட்டேனென்றுயே உன்பலங்குறையும்
கொஞ்சநேரத்தில்மாள்வாயே
குஞ்சரம்பெரிதாச்சே குலனரிகைத்தாச்சே
கஞ்சனடையரவும் மிஞ்சுமோகெருடன்முன் அஞ்



நாரதர் வன்னியராஜனிடஞ்சொல்

விருத்தம்.

தூதநான்சென்றுவந்த செய்தியையுனக்கக்கேளீர்
வாதாவிசொன்னவார்த்தை வாயினாற்சொல்லப்போமோ
வாதுசெய்திடவேவந்த வன்னியனென்கைவாளால்
வேதனைபடுவானென்று விபரமாய்சொல்லென்றானே.

தரு-இ·ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

என்னவென்றுரைப்பேன் தூதேகியவிந்தையை
ஏதென்றுநானுரைப்பேன்.

அநுபல்லவி.

சின்னப்பயலேநான் சிதரவடிப்பேனென்றான்
மன்னாவீரவன்யராஜே என்ன

சரணங்கள்.

நீர்சொன்னதைசொன்னேன் யென்னையடிக்கவந்தான்
மன்னாவீரவன்யராஜே என்ன
என்முன்வந்தாலவன் கன்னங்கடிப்பேனென்றான்
மன்னாவீரவன்யராஜே என்ன
பரியேறிவந்தவனை பொரியாகச்செய்வேனென்றான்
மன்னாவீரவன்யராஜே என்ன
கரிபரிசேனைகளை கலங்கவடிப்பேனென்றான்
மன்னாவீரவன்யராஜே என்ன
வீரன்றிவீரனென்றால் போர்செய்யலாமென்றானே
மன்னாவீரவன்யராஜே என்ன

வேறு.

தரு-இ-ம்-சர்மா-தாளம்-ஆதி

பல்லவி.

என்னமாய்சான் வும்மிடஞ்சொல்வேன்
வாதாசூரன்சொன்னசேதி.

அநுபல்லவி.

எங்குதேமனந் தியங்குதையையோ-ஓ
வீரவன்னியராசனே
எங்குதேமனந் தியங்குதையையோ என்

சரணங்கள்.

மன்னர்வீரர் ளென்னிடமிருக்க
அவர்கள்வலுவறியாமலே
சின்னப்படக்கால மென்றுலென்றானே
ஓ-வீரவன்னியராசே
சின்னப்படக்கால மென்றுலென்றானே என்

எப்படிரத்னபுரி யெல்லையமிதிப்பான்
வன்னியன் யெண்ணமில்லாமலே
குப்புறத்தள்ளிநு னப்புறேனென்றானே
ஓ-வீரவன்னியபூபா
குப்புறத்தள்ளிநு னப்புறேனென்றானே என்

என்னிடதீரம் வன்னியன்கேட்டரியான்
தெரியாமல்வந்தான்பகர்
முன்வைத்தக்காலே பின்வைத்துபோவென்றான்
ஓ-வீரவன்யராஜே
முன்வைத்தக்காலே பின்வைத்துபோவென்றான் என்

வன்னியராஜன்சொல் விருத்தம்.

போடாநீவென்றுபாவி புனிதரோவுமைச்சொன்னான்
வாடாவென்றுரைத்தகாவை வாளதுக்கினாலொடித்து
பாடுபாடாய்சதைத்து பருந்துபேய்க்கமுதுக்கிவேன்
சாடவேசெய்வீர்பேரிசலுதியாய்மந்திரிமாரே.



வசனம்.

ஆகோவாருமையா நாரதமகாமுனிவரே உம்மைதூவித்தபா
வி வாதாவிசூரன்காலை என்வாளினால் சிதைத்துத் தலைக்கிறே
னென்று கடுங்கோபங்கொண்டு தன்புதல்வனை நோக்கி சேனைகளு
க்கு திட்டஞ்செய்து பேரிகையடிக்க ஆக்யாபிக்கும்போது துர்க்கை
யம்மன் நான் தூதுபோய்வாறேனென்று இடச்சியைப்போல் உரு
மாரி மோர்க்குடம் சிரசின்மேல்வைத்து இரத்னபுரியை நோக்கிப்
போகிற விதங்காண்க.

பொது விருத்தம்.

தாய்தந்தையாய்க் குருவாய்தெய்வம்
தானுகியெங்குநிறைந் தருளுமான
நாயகியாவர்புகழ் கின்றதுர்கை
நல்வீரன்வன்னியன்கும் சபையில்னின்று
ஆயர்குலப்பெண்ணதுபோ லுருவெடுத்து
ஆவின்மோர்க்குடமொன்று சிரமேல்வைத்து
தீயன்வாதாவிகர் தன்னைநோக்கி
செல்கின்றாள்மோரோவென வருகின்றாளே.



துர்க்கையம்மன் வேருருவாகி மோர்விற்கும்-தரு-

இ-ம்-சாவேரி-அட-தாளம்

பல்லவி.

ஆயர்குலப்பெண்ணுருவாய்வந்தாள் - துர்க்கையம்மன்
ஆயர்குலப்பெண்ணுருவாய்வந்தாள்.

அநுபல்லவி.

ஆயர்குலப்பெண்போலே ஆவின்மோர்சிரமேலே
தீரன்வாதாவிநகர் செல்லமனங்கொண்டதாலே
சித்திரப்பதுமையைப்போல்
விசித்திரமானவள்
செங்கண்மால்தங்கையர்
மங்கையருமென — ஆயர்

சரணங்கள்.

பாலைநிலத்தில்வாழ்பவள் — சக்கிரபாணி
பாலர்களைக்காப்பவள்
மாதுக்கிளையவள் மாதங்கியென்பவள்
கோலாகலநீலிசூலி வேலைவிடமுண்டோன்பாவி
விர்தக ரட்சகி
பக்தர் மனத்தினி
பத்தினி யுத்தமி
பாவையர்போலவே — ஆயர்

காலிற்சிலம்பொலிக்கவே — தங்கவொட்டியாணம்
மாற்பிற்பணியிலங்கவே
மேலில்வெண்ணீறிலங்க மெய்யிற்பணிதுலங்க
ஆளிவாகனம்விட்டு ஆயர்பெண்ணைதொட்டு
அந்தரி யாமளி
சுந்தரி சாமளி
மந்திர தந்திர
எந்திர வல்லவி — ஆயர்

சூரர்குலமடக்கவே — வன்னியர்கூட
நாரணிபின்னேகவே
பாரெங்கும்புகழவே தாருள்ளோர்மகிழவே
வாரிருக்கநடைக்கொண்டு வானோர்மகிழக்கண்டு
வித்தகி சிரமேல்
மோரோ மோரென
இரத்தின புரிநக
ரெதுவோசொல்லென — ஆயர்



தரு-இ-ம்-சுத்தசாவேரி-ஆதிதாளம்

பல்லவி.

மோரோ மோ ருருமிது — ஆவின்
மோரிதுகொள்சூர மங்கையரே.

அநுபல்லவி.

தீருவினைதீரும் இமையோர்
தினமுண்டவர்கள் பிணிதீரும் — மோரோ

சரணங்கள்.

காருவின்மோரிதுவே — வுண்டால்
கண்ணொளிகூசாது மின்னொளியாம் — மோரோ

பாருளும்வீரசூரர் — வுண்ணும்
பால்தயிர்மோரிது வாங்குவீரே — மோரோ

சித்தர்முனிவர்கள் — ரிஷிகள்தேவர்
பொசித்திடும் மோரிதுவே — மோரோ

போனால்வராதுசொன்னேன் — நல்ல
புத்தியுள்ளோர் புசிக்குமிம்மோர் — மோரோ

வாதாவிசூரன் விருத்தம்.

ஆசடிமோரோவென்று யறியலையேகூறுஞ்சத்தம்
பேரொலிமுழக்கம்போலே பேசுமுன்வார்த்தைதானே
கூறுநீயெந்தவூருன் கொற்றவனார்தான்பெண்ணே
வீறியமாகவுந்தன் குலமதைவிளங்கச்சொல்வாய்.



வாதாவிசூரனுக்கும் - காளிகாதேவிக்கும் - தர்க்கம்.

இ-ம்-தன்யாசி-அடதாளம்

வாதாவி சொல்.

ஆரடிமோர்விற்கும் யரிவையேநீயெஞ்சலுற
ஆங்காரமாய்பேசுறாய்நீ வுன்பேரென்னடி
அரைக்கணத்திலென்முன்கூறடி. ஆரடி

துர்க்கை சொல்.

பேருடனூரையுங்கேட்ட பெலமுள்ளவாதாவிசூரு
வாவிசூமோரமுமாகுமே யென்பெயர்தானிப்போ
வீரியென்றுஞ் சொல்லலாகுமே பேருட

வாதாவி சொல்.

ஊன்புருடன்பேரும் வுன்குலமென்னகூறும்நீ
ஒண்டியாகமோருவிற்பதேன் வுன்வாயினோசை
மண்டமெதிர்வதுன்பேச்சே உன்



துர்க்கை சொல்.

என்புருடன்பித்தனாகும் என்தமயன்மாடுமேய்ப்போன்
எனதுகுலம் ஆயர்குலமே வயர்பிழைக்க
எடுத்துவந்தேன் மோருகுடமே என்

வாதாவி சொல்.

மோர்குடித்தாலென்னவிதில் சோருதின்றால்வயர்நிறையும்
மோசக்காரிப்போலேதோணுது பிடித்திடுங்கள்
ஓடிப்போவாள் போலேகாணுது மோர்

துர்க்கை சொல்.

காலையிலிம்மோராயுண்ணால் வாலவயதாவீர்சொன்னேன்
மாலையிலேதானுண்டிடுவீர் வாத்ததிற்கொத்து
திரேகபுஷ்டியாகுங்கொள்வீரே காலை

வாதாவி சொல்.

அப்படியாயிம்மோர்குணம் மெச்சினேன்சந்தோஷங்காணும்
இப்பொழுதுவிலைநீசொல்வாய் நானகொள்வதற்கு
தப்பிதமில்லாமலுரைப்பாய் அப்படி

துர்க்கை சொல்.

ஓர்படியோர்படிமுத்து வீருநான்விக்கிறமோரு
கூறினேன்விலையிலாகுமே கொள்வீர்
கொடுப்பேன்நானுமே ஓர்படி

வாதாவி சொல்.

அக்கிரமமாகவிலை யிப்பொழுதுசொன்னதாலே
அடிப்போம்பிடியுங்களென்றான் கைகள்துடிக்க
இடிக்கப்பிடியுங்களென்றான் அக்கிர

துர்க்கை சொல்.

அந்தரிகோபமுங்கொண்டு யந்திரத்திலேகிளம்பி
உங்கள்குலம்பாழாமென்றாளே வள்ளியருலே
இந்தகர்தாளாமென்றாளே அந்தரி



## பூதகணங்கள் காளியைகேட்கும்

தரு-இ-ம்-முகாரி-சாப்புதாளம்

பல்லவி.

வயிறுபசிக்குதம்மா - எங்களுக்கு
வயிறுபசிக்குதம்மா.

அநுபல்லவி.

வயறும்பிரம்பவில்லை பெலமுமெங்கட்கில்லை
மகிடசங்காரிவிமலை
மாயாசத்திபிருப்பிடம்பாலே வயறு

சரணங்கள்.

பூதப்பிரேதமம்மே - பசியினால்
வாதையாகுதம்மே
வேதனைபடுத்தமணமே - வுந்தனுக்கு
ஏதுகுறைசெய்தோமம்மே
ஏதோபெரும்படைகள்
வாதாகவந்ததுகள்
மாதேயெங்களைநீங்கள்
பொசியுமென்றுரையுங்கள் வயர்



மகிடனைக்கொன்றபோது - வாயில்ரத்தம்
உழக்குகுடித்தோமப்போது
சதையைதின்றுக்கொழுத்து
மமதைக்கொண்டோம்வெரித்து
கொடலைப்பிடுங்கியெரிந்து
கொழுப்பைத்தின்றுமகிழ்ந்து வயர்

அசுரர்கள்வந்திருக்கிறரோ யிவர்கள்மேல்
அனுப்பிடுவாய்நேரோ
மருமலர்மாலைபூண்ட
கௌரிகைசக்கரம்கோண
பிரமாதிதொழுகின்ற
பிரேதபூதங்களைக்கொண்ட வயர்

காளிகாதேவி விருத்தம்.

படையெனும்பூதப்பிரேத பைசாசர்களேநீர்கேளீர்
நடையதாய்வந்தபஞ்ச வீரர்கள்யெனதுபாலர்
விடமுண்டகண்டனாலே வேழ்வியிலுதித்துவந்தார்
கடையெனும்வாதாசூரன் றன்னையுங்கொன்றுயீவோம்.

வசனம்.

ஆகோவாருங்கள் பூதபைசாசர்களே வாதாவிசூரனைக்கொன்று உங்களுக்குவிருந்தளிப்போம் பூதங்களே.

பொது விருத்தம்.

அந்தரியம் பிகைமாது யகோரவீரி
ஆங்கார ரூபிமா தங்கிவீரி
சுந்தரியாள் மகிடனிட சிரமறுத்து
துர்க்கைக்கு யாவேச கோபங்கொண்டு
உந்தனிட குலம்பாழாய் போகத்தானே
உன்முடியும் பறைபண்ணத்து வருவாவென்று
அந்திரமாம் கங்கிளம்பி சாபமிட்டு
அக்கினி ராஜனிட முரைப்பதானுள்

வசனம்.

அகோதெப்படியென்றால், வன்னியராஜாக்களின் குலதெய்வமாகிய அங்காளபரமேஸ்வரியானவள் ஆயர்குல பெண்ணுருவெடுத்து ஓர் கூடையில் மோர் சிருஷ்டித்து தன் சிரமேல்வைத்து வாதாவிசூரன்வாழும் இரத்தினபுரிநகரழிக்க அம்மன் மனம்வைத்து மோர்விற்று வாதாவிக்கு சாபங்கொடுத்து வீரவன்னியராஜனிட முறைக்கும் விதங்காண்க.

காளிகாதேவி வன்னியராஜனிடமுறைக்கும் தரு.

கண்ணிகள்.

நல்லதுகபத்திரனே வீர வன்னியநாயகனே - அந்த
புல்லர்சூரர்வாழ் இரத்தினபுரிக்கியான்
போனதை நீர்கேளும் நல்லது

ஆயர்குலத்துதிப்பெண்வடிவமாய் ஆவின்மோர்சிருஷ்டிசெய்து
தினவாதாவி னகர்தனிற்சென்றுமோர்
மோரோவெனக் கூவினேன் நல்லது

மோர்குணமெனவென்று னதை ஞாயமில்லை சொல்லென்றான்
ஓர்படியோர்படி முத்தாகுமென்றேனென்னை
யோங்கியடிக்கவந்தான் நல்லது

ஆக்ருஷந்தான்கொண்டியானு மந்தரத்திற்கிளம்பி
பாக்கியமுனகுலம் வாழவும்வன்னியனாலே
பாழாகுமெனவந்தேன் நல்லது

வன்னியராஜன் விருத்தம்.

ஒப்பிலாமணியேயென்ற னுயிர்க்குயிரானவம்மா
தப்பிதமாகவுன்னைச் சாற்றியசூரன்றன்னை
இப்புவிமகிழத்தேவ ரிடுக்கங்கள்தீர்வதாக
அப்புறேன்சிரங்கீழாக வனுக்கிரகஞ்செய்யுந்தாயே.

வசனம்.

எங்களுயிருக்குயிராகியும், எங்குந்நிறைந்திரானின்ற ஏகபரஞ்சோதி, அனுதாக்ஷி, அகிலாண்டகோடி, பிரமாண்டநாயகி,



திரிசூலகபாலி, ஜெகதலம்புகழும் சீலி, என்னம்மணி உன்றனையும் அந்தபாவியாதாவிசூரன் அடிக்கிறேன், இடிக்கிறேன், புடைக்கிறேனென்று துடிதுடிக்கச் சொன்னான், ஆஆ ஆச்சரியம் ஆச்சரியம், அவனைக்கொன்று தேவர்களிடரைத்தீர்க்கிறேன்கிருபைகூர்ந்து வரமருளும் அம்மணியென்று ராஜத்துக்கேக எத்தனிக்கின்ற விதமெப்படியென்றால்.

விருத்தம்.

ஆடாமேவுசேனைசூழ வமைச்சர்களிருபாற்சூழ
திடமுடன்பாயுவப்புரெயம்பெறவில்லைக்கொண்டு
கொடிதனில்வதைப்பேனென்று நோக்கினன்சூரன்கோட்டை
படிமிசைக்காவலான பார்வதிசுதன்வந்தாரே.



விநாயகர் வருகிற விருத்தம்.

சந்திரனைச்சடைமீது தரித்தயீசன்
தயவுடனேயளித்தமுதற் பொருளுமாகா
விந்ததைசேர்வல்லபையை யிடத்திலவைத்த
வேதாந்தமுடிமீதில் மகுடமின்ன
மந்திரமுப்புரிநூலு மசையத்தொத்தி
வயிற்றுதுங்க புஜமீர்த்தி துலங்கநின்றாய்
கந்தனுக்குமுன்பிறந்த கணேசன்றானும்
